www.janasakthi.in
janasakthieditor@gmail.com
janasakthi Tholaikatchi
CPI Tamilnadu



புதியதோர் உலகம் செய்வோம்
# ஜனசக்தி
மக்கள் வார இதழ்
நிறுவனர்: ப. ஜீவானந்தம்
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 1925-2025
மலர் 87 | இதழ் 52 | 2025 மார்ச் 30 - ஏப்ரல் 05 | 16 பக்கங்கள் | விலை: ரூ.15

## தொகுதி மறுவரையறை, சீரமைப்பு
# கூட்டாட்சி முறைமையைச் சீரழிக்கும்
## பொதுச் செயலாளர் டி.ராஜா எச்சரிக்கை

**ஒன்றிய அரசின் ஆதிக்கத்தால், தொகுதி மறு வரையறை சீர்திருத்தம், இந்தியாவின் கூட்டாட்சி முறைமை விழுமியங்களைச் சீர்குலைத்து விடும்.**

2026 தொகுதி மறுவரையறை அனைத்து மாநிலங்களின் நலன்களையும் பாதுகாக்கும் அதே வேளையில், சமமான பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதற்கு ஒரு கட்டமைப்பை உருவாக்க வேண்டும்.

மே 2023 இல் புதிய நாடாளுமன்றக் கட்டிடத்தை நாட்டுக்கு அர்ப்பணித்த பிரதமர் நரேந்திர மோடி, "எதிர்காலத்தில் நாடாளுமன்ற தொகுதிகளின் எண்ணிக்கை அதிகரித்து அதற்கேற்ப உறுப்பினர்களின் எண்ணிக்கையும் உயரும் போது, அவர்கள் எங்கு அமர்வார்கள் என்பதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்" என்று கூறினார்.

தொகுதி மறு சீரமைப்பு முடக்கம் செய்யப்பட்டிருப்பது, 2026ல் முடிவடையும் நிலையில் உள்ளதால், அது குறித்த விவாதம் மைய நிலைக்கு வந்துள்ளது. பாஜக தலைமையிலான ஒன்றிய அரசு, மாநில உரிமைகளைப் பறித்து கூட்டாட்சி முறைமையைத் தகர்த்து வருவதாலும், வடக்கு மற்றும் தெற்கு மாநிலங்களுக்கு இடையிலான மக்கள்தொகை உயரும் விகிதம் மாறுபடுவதாலும், ஒன்றிய அரசு கூறுகிற விகிதாச்சாரப்படியான தொகுதி மறுசீரமைப்பு என்ற அணுகுமுறை,



இந்தியாவில் மாநிலங்களிடையே சமத்துவம் எனும் முறைமையை ஒழித்து விடும் என்ற பெரும் கவலையை ஏற்படுத்தி உள்ளது.

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா, ஒடிசா மற்றும் பஞ்சாப் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த முக்கிய அரசியல் கட்சிகளின் கூட்டத்தைக் கூட்டினார்.

தொகுதி வரையறை பற்றிய புரிதல், அது ஏன் முடக்கி வைக்கப்பட்டது என்பதற்கான காரணம், இப்போது செயல்படுத்துவதால் ஏற்படும் தாக்கங்கள் ஆகியவை விவாதத்துக்கான முக்கிய காரணிகள் ஆகின்றன.

அரசியலமைப்பின் 82வது பிரிவு, ஒவ்வொரு மக்கள் தொகை கணக்கெடுப்புக்குப் பிறகும் மக்கள்தொகை மாற்றங்களைப் பிரதிபலிக்கும் வகையில், நாடாளுமன்றம் ஒரு தொகுதி மறுசீரமைப்புச் சட்டத்தை இயற்ற வேண்டும் என்று கட்டளையிடுகிறது. பிரிவு 170, மக்கள்தொகை தரவுகளின் அடிப்படையில் மாநிலச் சட்டமன்றங்களின் அமைப்பைத் தீர்மானிக்கிறது. பிரிவு 55, குடியரசு தலைவர் தேர்தலில் மாநிலங்களின் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்கிறது. பிரிவு 81, மக்களவையில் உள்ள இடங்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுவதோடு மக்கள் தொகை அடிப்படையில் அவற்றை மாநிலங்களுக்கு இடையே பிரித்து வழங்குகிறது.

1976 ஆம் ஆண்டு 42வது திருத்தத்தைத் தொடர்ந்து, குடும்பக் கட்டுப்பாடு நடவடிக்கைகளை வெற்றிகரமாக செயல்படுத்திய மாநிலங்களுக்கு தண்டனை விதிக்கப்படுவதைத் தவிர்க்க, நாடாளுமன்ற இடங்களை அதிகரிக்கும் செயல்முறை முடக்கப்பட்டது. இது 2026 க்குப் பிறகு முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பு வரை வாஜ்

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்

# தொகுதி மறுசீரமைப்பை 25 ஆண்டுகள் ஒத்திவைக்க வேண்டும்
## கூட்டு நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

நாடாளுமன்றத் தொகுதிகளை மறுசீரமைப்பு செய்யும் பணிகளை இன்னும் 25 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்க வேண்டும் என்று தொகுதி மறுசீரமைப்புக்கு எதிரான கூட்டு நடவடிக்கைக் குழு கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

அநீதியான தொகுதி மறுசீரமைப்புக்கு எதிராக, ஒருங்கிணைந்த செயல்பாட்டின் முதற்கட்டமாக சென்னையில் கூட்டு நடவடிக்கை குழு கூட்டத்திற்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அழைப்பு விடுத்திருந்தார்.

இதனை ஏற்று மார்ச் 22 அன்று நடைபெற்ற முதல் ஆலோசனைக் கூட்டத்தில், கேரள முதலமைச்சர் பினராயி விஜயன், தெலுங்கானா முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி, பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மான், கர்நாடக மாநில துணை முதலமைச்சர் டி.கே. சிவகுமார் மற்றும் 7 மாநிலங்களைச் சேர்ந்த அரசியல் கட்சித் தலைவர்கள் கலந்து கொண்டனர். பிஜூ ஜனதாதளம் சார்பில் அக்கட்சியின் தலைவரும், ஒடிசா முன்னாள் முதலமைச்சருமான நவீன் பட்நாயக் காணொளி வழியாக கலந்துகொண்டார்.



ஜார்க்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரன் ஆதரவுக் கடிதம் அனுப்பியிருந்தார்.

கேரளத்திலிருந்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பினாய் விஸ்வம், காங்கிரஸ் மாநிலத் தலைவர் கும்பக்குடி சுதாகரன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் பொதுச்செயலாளர் சலாம், கேரள காங்கிரஸ் கட்சியின் பிரான்சிஸ் ஜார்ஜ், கேரளா காங்கிரஸ் (மணி) கட்சியின் ஜோஸ் கே. மணி, புரட்சிகர சோசலிஸ்ட் கட்சியின் பிரேமசந்திரன், தெலுங்கானாவில் இருந்து பாரத் ராஷ்டிர சமிதி சார்பில், தெலுங்கானா முன்னாள் அமைச்சர் கே.டி. ராமராவ், வினோத் குமார், காங்கிரஸ் சார்பில் மகேஷ் கவுட், மஜ்லிஸ் கட்சியின் சார்பில் இம்தியாஸ் ஜலில், பஞ்சாப்பில் இருந்து சிரோன்மணி அகாலி தள கட்சியின் சர்தார் பல்வீந்தர் சிங், தல்ஜித் சிங் சீமா, ஒடிசாவிலிருந்து பிஜூ ஜனதாதளத்தின் முன்னாள் எம்.பி. அமர் பட்நாயக், சஞ்சய் குமார் தாஸ் பர்மா, காங்கிரஸ் தலைவர் பக்த சரண் தாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தின் தொடக்கத்தில் தமிழ்நாடு

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

### நாகையில் சந்திப்போம்!
**கட்சிக் கடிதம்**

கொடுமையான கொரோனா உலக மக்களை முடக்கியது. வீட்டை விட்டு எவரும் வெளியில் வர இயலவில்லை. ஆனால், விவசாயிகள் கொரோனாவைக் கண்டு அஞ்சவில்லை. ஒருவர் அல்ல, இருவர் அல்ல, 700 விவசாயிகள் போராட்டக் களத்தில் வீர மரணமடைந்தார்கள்.

... பக்கம் 2

### ஓசூரில் மெட்ரோ ரயில் கொண்டுவர வேண்டும்

நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்களை நாகரீகம் அற்றவர்கள் என்கிறார் ஒன்றிய கல்வி அமைச்சர். ஒன்றிய நிதி அமைச்சரோ தமிழைப் படித்தால் பிச்சை கூட எடுக்க முடியாது என்று கேவலமாக பேசுகிறார். மற்றொரு ஒன்றிய அமைச்சர் தமிழ்நாடு மக்களை பார்த்து பயங்கரவாதிகள் என்கிறார்.

... பக்கம் 5

### நீதிபதி வீட்டில் கட்டுக் கட்டாக பணம்!



உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் டெல்லி உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி ஆகியோர் யஷ்வந்த் வர்மாவிடம் கீழ்க்கண்ட 3 கேள்விகளை முன்வைத்துள்ளனர்.

1) அந்தப் பணம் எப்படி சேமிப்பு அறைக்கு வந்தது?
2) அந்தப் பணத்தின் ஆதாரம் என்ன?
3) மார்ச் 15 அன்று காலை அந்தப் பணம் எப்படி அகற்றப்பட்டது?

... பக்கம் 8

### அறிவியல் கொள்கையை அமலாக்கியது அச்சுதமேனன் அரசு!

அறிவியல் முன்னேற்றத்திற்கான தனது உறுதிப்பாட்டை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மீண்டும் உறுதிப்படுத்துகிறது. மேலும் இந்தியாவின் முதல் மாநில அளவிலான அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கொள்கையை நிறுவுவதில் கேரளாவின் முன்னோடி பங்கை ஒப்புக்கொண்டு, இந்த விஷயத்தைத் தீவிரமாக எடுத்துக்கொள்ள ஒன்றிய அரசை வலியுறுத்துகிறது

... பக்கம் 9

### 2025 மே 20 பொது வேலைநிறுத்தம்

அரசாங்கத்தின் மக்கள் விரோதக் கொள்கைகளுக்கு "போதும் போதும்" என்ற உறுதியான குரலை மாநாடு ஒலித்தது. 20 மே 2025 அன்று ஒரு நாள் தேசிய வேலைநிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்தது.

... பக்கம் 16

கட்சிக் கடிதம்

# நாகையில் சந்திப்போம்!–3



போர்க்குணமிக்க தோழர்களே!

**இந்தியா எனும் நம் பெருநாடு கிராமப்புறங்களை அடிப்படையாகக் கொண்ட நாடாகும். அன்று முதல் இன்று வரையில் நாட்டில் வாழும் மொத்த மக்கள் தொகையில், பெரும்பாலான மக்கள் ஈடுபடும் தொழில் வேளாண்மையே ஆகும்.**

சிறு குறு, நடுத்தர விவசாயிகளும், நிலமற்ற கூலித் தொழிலாளர்களும் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டு வந்தனர்.

அகில இந்திய அளவில் விவசாயிகள் சங்கம் என்று தொடங்கிச் செயல்பட்ட போது, நிலம் வைத்திருப்பவர்கள் மட்டுமின்றி, விவசாயத் தொழிலாளர்களையும் இணைத்தே அகில இந்திய அளவிலும், மாநில அளவிலும் விவசாயிகள் சங்கமென ஒரே அமைப்பாகத் தொடங்கப்பட்டது.

பின்னர் தேவை கருதி, விவசாயத் தொழிலாளர்கள் பிரச்சனைக்குத் தீர்வுகாணும் வகையில் விவசாயத் தொழிலாளர்களுக்கு என்று தனிச் சங்கம் அமைக்கப்பட்டது.

தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கம் (பதிவு செய்யப்பட்ட சங்கம்) தோழர்கள் எம்.காத்தமுத்து, இரா. நல்லகண்ணு, மன்னார்குடி டி.ஆறுமுகம் போன்ற தலைவர்கள் இவ்வமைப்பிற்குத் தலைமை தாங்கி வழி நடத்தினர். இது தொழிற்சங்கச் சட்டப்படி பதிவு செய்யப்பட்ட ஒரே விவசாயத் தொழிலாளர் சங்கமாகும்.

அகில இந்திய அளவில் முதன்முதலாக தொடங்கப்பட்ட சங்கம், நமது சங்கமே (பி.கே.எம். யூ)

சங்கம் தொடங்கப்பட்ட 1936 முதல் இன்று 2025 வரை 89 ஆண்டுகள் ஆகின்றன.

இக்காலகட்டத்தில் சங்கம் சாதித்தது என்ன?

சாதனைப் பட்டியல் மிக நீண்டது, நெடியது! அனைத்தையும் தொகுத்துக் கட்சியின் நூற்றாண்டு விழாவையொட்டி தனி நூலாக வெளியிட, தனிக்குழு அமைக்கப்பெற்று, அக்குழு தனது பணிகளை மேற்கொண்டுள்ளது.

அந்நூலின் மூலம் நமது சங்கத்தின் முழுச் சாதனைகளையும் அறிய முடியும். சில குறிப்பிட்ட சாதனைகள் குறித்து இங்கே நாம் பார்ப்போம்!

நிலச் சீர்திருத்தம், உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்பதற்கு இன்று பலரும் உரிமை கொண்டாடுவதைப் பார்த்து வருகின்றோம். ஆனால் உண்மை என்ன?

நாடு விவசாயத்தைச் சார்ந்திருந்த போதும், நாடு முழுவதும் நிலங்கள் குவியல், குவியலாக சில தனி நபர்கள் வசம் அகப்பட்டுக் கொண்டன.

1. நிலப்பிரபுகள்
2. ஜமீன்தார்கள்
3. மடாதிபதிகள்
4. கோவில்கள்

இவர்களுக்குச் சொந்தமாக நிலம் இருந்து வந்தன.

ஒரு பகுதி நிலங்களைக் குத்தகை விவசாயிகள் சாகுபடி செய்து வந்தனர். நிலக் குவியல் என்பது, அவர்களுக்கு நிலங்கள் மட்டும் சொந்தமானது மட்டுமல்ல, அப்பகுதியில் வாழும் மக்கள் அனைவரும் அவர்களின் ஆளுகைக்கு உட்பட்டே இருக்க வேண்டியதாயிற்று.

கொடிய அடக்குமுறைகளுக்கு அவர்கள் உள்ளாக்கப்பட்டனர். இதிலிருந்து விடுதலை பெற வேண்டுமெனில், நிலக்குவியல் முறை முற்றாக ஒழிக்கப்பட வேண்டும். நில உச்சவரம்புச் சட்டம் நாடு முழுவதும் நிறைவேற்றப்பட்டு, உழுபவனுக்கு நிலம் சொந்தமாக்கப்பட வேண்டும் என்ற முழக்கத்தை சங்கம் முன் வைத்தது.

இதற்காக இடைவிடாத போராட்டத்தை மேற்கொண்டது. ஒவ்வொரு மாநிலத்திலும் போராட்டங்கள் தீவிரமடைந்தன.

தமிழ்நாட்டில் தொடர்ந்து நடைபெற்ற போராட்டத்தின் உச்சமாக, இரு பெரும் வரலாற்றுச் சிறப்புமிக்கப் போராட்டங்கள் நினைவு கூறத்தக்கன.

1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த சட்டத்தை வலியுறுத்தி, இரு பெரும் பாதயாத்திரைகள் மேற்கொள்ளப்பட்டன.

மதுரையில் இருந்து தமிழ்நாடு விவசாயச் சங்கத்தின் தலைவர் மணலி சி.கந்தசாமி தலைமையில் ஒரு குழு தென் மாவட்டங்கள், வட மாவட்டங்கள் வழியாக தலைநகர் சென்னைக்கு வந்தடைந்தது.

மற்றொரு குழு தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.சீனிவாசராவ் தலைமையில் கோவையில் தொடங்கி, மேற்கு மாவட்டங்கள் அனைத்தையும் வலம் வந்து தலைநகர் சென்னை வந்தடைந்தது.

இவ்விரு குழுக்களும் பலநூறு மைல்களை கடந்து வந்த போது, வழி நெடுகிலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வாழ்த்தி வரவேற்றனர்.

இத்தகைய இயக்கம் மக்களிடத்தில் நிலச் சீர்திருத்தத்தின் தேவை குறித்து நல்லதொரு விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

சென்னை மாநகரம் வந்தடைந்த போது, மாநகர மக்களின், தொழிலாளர்களின் அன்பான வரவேற்பைப் பெற்றதுடன் திமுக, தமிழரசு கழகம் போன்ற அமைப்புகள் தங்களின் ஆதரவைத் தெரிவித்து, வரவேற்புப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு வாழ்த்திப் பேசினார்கள். தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் அறப்போராட்டம் மேற்கொள்ளப்பட்டது. மாவட்ட, கோட்ட, வட்டாட்சியர் அலுவலகங்கள் முன்பு தொடர் மறியல் போராட்டங்கள் நடைபெற்றன

அவற்றில் 16 ஆயிரம் பேர் பங்கு பெற்று, மறியல் செய்து கைதாகி அனைவரும் மூன்று மாத காலம் வரை தண்டிக்கப்பட்டனர்.

தமிழ்நாட்டுச் சிறைகள் அனைத்தும் நிரம்பி வழிந்தன. திருச்சி மத்திய சிறையில் இரு தோழர்கள் மரணமடைந்தனர்.

இப்போராட்டம் நடைபெற்ற போது, “உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்றால், சிரைப்பவனுக்குத் தலை சொந்தமா? வெளுப்பவனுக்கு வேட்டி சொந்தமா?” எனப் பலர் கேலி பேசியது உண்டு. ஆனால் அவர்கள் கேலிகளும், கிண்டல்களும் நகைப்பிற்குரியதாயின.



அரசு நிலச் சீர்திருத்த சட்டத்தைக் கொண்டுவர வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளானது.

தமிழ்நாடு அரசால் பெயரளவுக்கு ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது. சட்டமும் கொண்டு வரப்பட வேண்டும். அதே நேரத்தில் நிலப்பிரபுகளும் காப்பாற்றப்பட வேண்டும் என்கிற நோக்கில் அது இருந்தது.

அதில் கோவில், கல்வி நிலையங்கள் என ஏராளமான விதிவிலக்குகள் நிறைந்திருந்தன.

சட்டம் ஏட்டில் இருந்தது. நிலம் பண்ணையார்கள், ஜமீன்தார்களிடம் பாதுகாப்பாக இருந்தது. இத்தகைய போலித்தனமான நில உச்சவரம்புச் சட்டத்தை எதிர்த்து, தொடர் போராட்டங்கள் தொடர்ந்தன.

மீண்டும் ஒரு மாபெரும் நிலப் போராட்டத்திற்கு 1970 இல் அறைகூவல் விடப்பட்டது.

இப்போராட்டம் மிகத் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டது. நிலச் சீர்திருத்த சட்டம் கொண்டு வந்த பின்னரும், யாரிடத்தில் எத்தனை ஆயிரம் ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன என்பதனை வெளிப்படுத்தும் விதமாக, அத்தகைய நபர்களின் பெயர்கள், அவர்களுக்கு எத்தனை ஆயிரம் ஏக்கர் நிலம், எந்தெந்த கிராமங்களில் உள்ளது என்பதை ஆதாரப்பூர்வமாக அறிவித்து, அத்தகைய பண்ணை நிலங்களில் நேரடியாக இறங்கிக் களம் காண்பது என்றும், களம் காணும் தலைவர்கள் பட்டியலும் வெளியிடப்பெற்று, அந்நிலங்களில் 1970 ஆகஸ்ட் 15 முதல் போராட்டத்தை மேற்கொள்ள முடிவு செய்து அறிவிக்கப்பட்டது.

ஆகஸ்ட் 15 என்பது நாடு விடுதலை பெற்ற நன்னாளாகும். அதற்கு முன்னர் ஆகஸ்ட் 9 வெள்ளையனே வெளியேறு என முழக்கமிட்ட நாளில், அனைத்து வட்டத் தலைநகரங்களிலும், பேரணி பொதுக்கூட்டம் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டது.

ஆனால் போராட்டம் நடைபெறுவதற்கு முன்பாகவே, ஆகஸ்ட் 8 நள்ளிரவு முதல், தமிழ்நாடு முழுவதும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை என்ற பெயரால் தலைவர்களும், தோழர்களும் கைது செய்யப்பட்டார்கள். சிவப்புத் துண்டணிந்த அனைவரும் கைது செய்யப்பட்டார்கள்.

தமிழ்நாடு முழுவதும் கைதுகள் தொடர்ந்து நடைபெற்று வந்தன. 144 தடை உத்தரவுகளும் பிறப்பிக்கப்பட்டன. கடுமையான அடக்குமுறை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அடக்குமுறைகள் அனைத்தையும் தகர்த்தெறிந்து, திட்டமிட்ட அடிப்படையில் தமிழ்நாடு முழுதும் போராட்டம் நடைபெற்றது.

அனைத்துப் பண்ணை நிலங்களிலும், செங்கொடிகள் பறந்தன. தமிழ்நாடு முழுவதும் முன்னெச்சரிக்கை மற்றும் போராட்டக் களத்தில் 16 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டு, மத்திய சிறைச்சாலைகளில் ஒரு மாத காலம் அடைத்து வைத்து, பின்னர் அரசு விடுதலை செய்தது.

இத்தகைய போராட்டங்களால்தான் நில உச்சரம்பு என்பது உறுதி செய்யப்பட்டது. உழுபவர்களுக்கு நிலம் சொந்தமாக்கப்பட்டது. இத்தகைய சாதனைக்குச் சொந்தக்கார சங்கத்தின், அகில இந்திய மாநாடுதான் நாகையில் ஏப்ரல் 15, 16, 17 ஆகிய மூன்று தினங்கள் நடைபெறுகின்றது.

குத்தகை சாகுபடி செய்யும் விவசாயிகள், இவர்கள் பண்ணையார்களின் நிலங்கள், ஜமீன்தார்களின் நிலங்கள், மடாதிபதிகளின் நிலங்கள் மற்றும் கோவிலுக்குரிய நிலங்களில் குத்தகை சாகுபடி செய்து வந்தனர்.

கோவில் நிலங்கள் என்பது கோவிலுக்குச் சொந்தம் என்றாலும் கூட, இவை அனைத்தும் பண்ணையார்கள் கட்டுப்பாட்டில்தான் இருந்தன.

குத்தகை சாகுபடி செய்து வந்த விவசாயிகள், ஆண்டுதோறும் செலுத்திட வேண்டிய குத்தகை என்பது அளவற்றிருந்தது. பண்ணையார்களும், மடங்களும், ஜமீன்தார்களும் தங்களின் விருப்பத்திற்கு ஏற்ப, குத்தகை அளவைத் தீர்மானித்தனர்.

அவர்களது தீர்மானத்தை எவரும் மீறிட முடியாது. பெரும் நட்டத்திற்கு விவசாயிகள் உள்ளாகினர். அவை மட்டுமன்றி, தொடர்ந்து சாகுபடி செய்திட எவ்விதப் பாதுகாப்பும் அற்ற நிலையும் தொடர்ந்தது. நிலத்திலிருந்து எப்போது வேண்டுமானாலும் விவசாயிகள் வெளியேற்றப்பட்டு வந்தனர்.

குத்தகை குறைக்கப்பட வேண்டும் என்பதும், பாதுகாப்பு வேண்டியும் சங்கம் தொடர் போராட்டங்கள் மேற்கொண்டது.

இதன் விளைவாக குத்தகை குறைப்பும், குத்தகைப் பாதுகாப்புச் சட்டத்தையும் சங்கம் பெற்றுத் தந்து சாதனை படைத்து, குத்தகை விவசாயிகளைப் பாதுகாத்தது.

விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல் உள்ளிட்ட தானியங்களைத் தனியார் கொள்முதல் செய்தனர். விலையை நிர்ணயிப்பவர்கள் இடைத்தரகர்கள்(வியாபாரிகள்) வசம் இருந்தது. குறைந்தபட்ச விலையைக் கூட விவசாயிகள் பெற முடியாத நெருக்குதலுக்கு உள்ளானார்கள்.

இவற்றிற்குத் தீர்வு காணும் விதமாகக் கொள்முதல் விநியோகப் பொறுப்பை அரசே ஏற்க வேண்டுமெனக் கோரி, இடைவிடாப் போராட்டத்தின் விளைவாக இந்தியா அளவில் உணவுக் கழகம் (புட் கார்ப்பரேஷன் இந்தியா) மாநில அளவில்

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

# துயரத்திலும் பெரும் துயரம்



இரா.முத்தரசன்

**தமிழ்நாடு எங்கும் அனைத்து மாவட்டங்களிலும் அனைத்திந்திய இளைஞர் மன்ற அமைப்புகள் வேரூன்றி பலப்பட்டு, அதன் செயலாக்கம் முன்னைக் காட்டிலும் பல்கிப் பெருகிப் பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி வருகின்றது.**

ஆயிரக்கணக்கான இளைஞர்கள் மன்ற அமைப்பில் மிகுந்த ஆர்வத்துடன் தங்களை இணைத்துக் கொண்டு செயல்பட்டு வருகின்றனர்.

இத்தகைய நிலையில் கோவை மாவட்ட இளைஞர் பெருமன்றத் தலைவர், அன்பிற்குரிய தோழர் கௌதம் குமார் விபத்திற்குள்ளானார் என்பது பெரும் அதிர்ச்சியும் வேதனையும் அளிக்கின்றது.

சில மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற கோவை மாவட்ட மாநாட்டில் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டார். தர்மபுரியில் நடைபெற்ற மாநாட்டில் மாநிலக் குழு உறுப்பினராகவும் தேர்வு செய்யப்பட்டார்.

தர்மபுரியில் நடைபெற்ற மாநிலப் பேரணியில் ஆயிரக்கணக்கான இளைஞர்களுடன் வீரநடைபோட்டு எழுச்சி முழக்கம் எழுப்பி வந்த தோழர் கோவை மாவட்டம் பன்னீர் மலைப் பகுதியில் தோழர் டி. வேலுச்சாமி, பொன்னி (எ) பொன்னம்மாள் தம்பதியரின் ஒரே மகன் ஆவார் கௌதம் குமார்.



தாயும் தந்தையும் செல்லமாக வளர்த்த குழந்தை, பள்ளிப் படிப்பை முடித்துச் சட்டம் பயின்று வழக்கறிஞர் ஆனா நிலையில் 26 வயதில் இழக்க வேண்டிய நிலை பெரும் துயரமானது.

சட்டக் கல்லூரியில் படிக்கும் போது சக மாணவ மாணவிகளுடன் அன்பொழுகப் பழகி அனைவரின் பேரன்பையும் பெற்று திகழ்ந்து உள்ளார்.

தான் வசிக்கும் பகுதியில் உள்ள அனைத்து மாணவர்கள், இளைஞர்கள் உடன் நன்கு பழகி நன்மதிப்பைப் பெற்றுள்ளார். மாவட்ட கட்சித் தோழர்கள் அனைவரது அன்பையும், பாராட்டையும் பெற்று எதிர்கால நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிய நட்சத்திரம் இன்று நம்மிடையே இல்லை.

கடந்த 21.3.2025 அன்று காலை இருசக்கர வாகனத்தில் பயணித்த போது விபத்துக்குள்ளாகி மருத்துவமனையில் சேர்த்து, தீவிர சிகிச்சை அளித்த போதும், மூளைச் சாவு ஏற்பட்டதால் உயிர்காக்க முடியவில்லை.

கோவை மருத்துவமனைக்கு அவசரமாகச் சென்றபோது அங்கே அவரது தந்தைக்கு ஆறுதல் சொல்ல முடியவில்லை. அவரை காட்டிலும் அங்கே குழுமியிருந்த மாணவ மாணவிகள் இளைஞர்கள் அனைவரும் கதறி அழுதது இன்றும் கண் முன் நிழலாடுகின்றது.

வீட்டிற்குச் சென்று அவரது தாயின் முகம் காணத் துணிவற்ற நிலையில், தயங்கித் தயங்கிச் சென்ற போது தாயார் கதறி அழுதது மட்டுமல்ல, 23ஆம் தேதி பகத்சிங் நினைவு நாளில் ரத்ததானம் வழங்கும்போது, இளைஞர்களிடத்தில் பேசுவதற்காக பகத்சிங் புத்தகத்தைப் படித்தான். அனாதைக் குழந்தைகளை 10 பேரைத் தேர்ந்தெடுத்து நாம் வளர்க்க வேண்டும் என்று கூறினான். என்றெல்லாம் தன் மகன் குறித்துக் கூறி நம்மைக் கலங்கச் செய்தார்.

கௌதம் குமார் மரணிக்கவில்லை. மூளைச்சாவு ஏற்பட்ட காரணத்தால் பெற்றோர்கள் மகனின் உறுப்புகளைத் தானம் செய்து விட ஒப்புதல் அளித்தனர். அவரது கண்கள், இதயம் மற்றும் ஏனைய உறுப்புகள் அனைத்தும் தானம் செய்யப்பட்டன.

பலரின் உயிர்களைக் காப்பாற்றிய கௌதம் குமார் நம்மிடையே அவரது உடல் மட்டும் இல்லை. ஆனால் உயிரோடு இருக்கின்றார், வாழ்கின்றார், பலரையும் வாழ வைத்துள்ளார்.

துயரத்திலும் பெரும் துயரத்திற்கு நம்மை ஆட்படுத்திச் சென்றுவிட்ட கௌதம் குமார் நாமம் நீடூழி வாழ்க !

அவர் தம் வழியை இளைஞர் பெருமன்ற தோழர்கள் பின்பற்றி, அவரது லட்சியக் கனவுகளை நிறைவேற்றிடச் சபதம் ஏற்பீர் !

---

2 ஆம் பக்கத் தொடர்ச்சி

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் உருவாக்கப்பட்டன.

இன்று விவசாயிகள் நேரிடைக் கொள்முதல் நிலையங்களில் நெல்லை விற்பனை செய்து, அரசு நிர்ணயித்த குறைந்தபட்ச ஆதார விலையைப் பெற முடிகின்றது. இடைத்தரர்களின் பிடியிலிருந்து விடுதலை பெற்றுள்ளனர்.

நியாய விலைக் கடைகள் மூலம் அத்தியாவசியப் பொருட்களைப் பெற முடிகின்றது. இத்தகைய சாதனைகளை நிகழ்த்தியது நமது சங்கம்.

- உழுபவனுக்கு நிலம் சொந்தம் !
- குத்தகை விவசாயிகளுக்குக் குத்தகை குறைப்பு.
- நிலத்திலிருந்து வெளியேற்றாமல் குத்தகை பாதுகாப்புச் சட்டம்.
- நெல் கொள்முதல்
- அனைத்து மக்களுக்கும் நியாய விலைக் கடைகள் மூலம் உணவுப் பொருள்கள் கிடைத்திட உத்தரவாதம்.

நமது விவசாயிகள் சங்கத்தின் சாதனை என்பதனை நெஞ்சை நிமிர்த்தி நம்மால் உரக்கக் கூற முடியும் !

விவசாயிகளின் வாழ்வோடு பின்னிப் பிணைந்து வாழ்ந்த மக்கள், நிலமற்ற கூலி விவசாயத் தொழிலாளர்கள் !

இவர்களில் பெரும் பகுதியினர் பட்டியல் வகுப்பைச் சேர்ந்தவர்கள், இவர்கள் உழவுப் பணிகளுக்குச் செல்ல வேண்டும். எப்போது? சூரியன் உதயத்திற்கு முன்பாக, எப்போது வீடு திரும்ப வேண்டும். சூரியன் மறைவிற்குப் பின் ! இவை எழுதப்படாத சட்டம்?

இவர்கள் கடும் பொருளாதாரச் சுரண்டலுக்கு ஆளானவர்கள் மட்டுமல்ல, கடும் சமூக அடக்குமுறைக் கொடுமைகளுக்கு உள்ளானவர்கள்.

ஆண்கள் மட்டுமல்ல, பெண்களும் கடும் அடக்க முறைகளுக்கு உள்ளானார்கள்.

தஞ்சை தரணியில் சாட்டையடி, சாணிப் பால் கொடுமைகள் நீக்க மற நிறைந்திருந்தன.

மாட்டை விட மனிதர்கள் கேவலமான முறையில் நடத்தப்பட்டார்கள். தெருக்களில் நடப்பது, குளத்தில் குளிப்பது உட்பட பல்வேறு சமூகக் கொடுமைகள் நிகழ்ந்தன.

சமூகக் கொடுமைகளுக்கும், சுரண்டலுக்கும் எதிரான போராட்டங்கள் நீடித்தன. அடித்தால் திருப்பி அடிப்போம் என்கின்ற முழக்கம் மேலோங்கியது,

இதற்குப் பின்னரே இக்கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

குடியிருப்பு மனைகளிலிருந்து காலி செய்யாதே ! குடியிருப்பு மனையைச் சொந்தமாக்கு ! குடியிருக்க மனை கொடு ! வீடு கட்ட பணம் கொடு என்கிற தீர்மானம், மன்னார்குடியில் நடைபெற்ற விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் அகில இந்திய இரண்டாவது மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதுவே இன்று தொகுப்பு வீடுகள் என உறுதி செய்யப்பட்டது.

நாடு முழுவதும் நிறைந்துள்ள விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களை அமைப்பு ரீதியாக, அரசியல் ரீதியாக ஒன்றுபடுத்திச் செயல்பட வைத்து, அவர்களின் சமூக, பொருளாதாரப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

கடந்த கால சாதனைகளை, வெற்றிப் பெருமிதங்களோடு நமது பணிகள் நிறைவடைந்து விடவில்லை.

இன்று ஒன்றியத்தில் அமைந்துள்ள ஆட்சி என்பது ஓர் மூர்க்கத்தனமான அரசு.

ஏழை, எளிய மக்களைப் பற்றியோ, தொழிலாளர்கள், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் பற்றியோ, கிஞ்சிற்றும் கவலைப்படாத ஆட்சி என்பதும், கார்ப்பரேட் பெரு முதலாளிகளின், சில தனிநபர்களின் நலன்களைப் பாதுகாப்பதிலும், அவர்களின் செல்வங்கள் மேன்மேலும் பெருகிட, பெரும் பங்காற்றி வரும் அரசு என்பதனை அனைவரும் நன்கு அறிவார்கள்.

ஒன்றிய அரசு மூர்க்கத்தனமான முறையில், கோடிக்கணக்கான விவசாயிகளுக்கு எதிராக மூன்று வேளாண் சட்டங்களை, தனக்கு நாடாளுமன்றத்தில் உள்ள மிருகத்தனமான பெரும்பான்மையைப் பயன்படுத்தி நிறைவேற்றியது.

நமது சங்கம் உட்பட, அனைத்து விவசாயிகள் சங்கங்கள் மட்டுமின்றி பாஜகவைத் தவிர்த்து, அனைத்து அரசியல் கட்சிகளும் எதிர்த்தன. நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் மிகக் கடுமையாகத் தங்களின் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

ஆனால் ஒன்றிய அரசு தான் நிறைவேற்றிய தீர்மானங்களில் கமா, புல்ஸ்டாப்பைக் கூட திருத்த முடியாது என்று பிடிவாதம் காட்டியது.

விவசாயிகள் ஒன்று திரண்டார்கள். தலைநகர் டெல்லியில் பல்லாயிரக்கணக்கான விவசாயிகள், 13 மாத காலம் இடைவிடாது போராடினார்கள்.

இரவு பகல் பாராது போராடினார்கள். கடும் குளிர் அவர்களைக் கண்டு நடுங்கியது. இடைவிடாது பெய்த பெரு மழை அவர்களை கண்டு அஞ்சியது. சுட்டெரிக்கும் வெய்யில் அவர்களின் உறுதிமிக்கப் போராட்டத்தைக் கண்டு அஞ்சியது.

கொடுமையான கொரோனா உலக மக்களை முடக்கியது. வீட்டை விட்டு எவரும் வெளியில் வர இயலவில்லை. ஆனால், விவசாயிகள் கொரோனாவைக் கண்டு அஞ்சவில்லை. ஒருவர் அல்ல, இருவர் அல்ல, 700 விவசாயிகள் போராட்டக் களத்தில் வீர மரணமடைந்தார்கள்.

இதற்குப் பின்னரே ஒன்றிய அரசு தான் நிறைவேற்றிய மூன்று வேளாண் சட்டங்களைத் திரும்பப் பெற்றது.

ஆனால், இன்று வரை விவசாயிகளுக்குக் கொடுத்த வாக்குறுதிகளில் ஒன்றான, விவசாய விளை பொருள்களுக்கு, நாடாளுமன்றத்தில் விலை நிர்ணயச் சட்டம் நிறைவேற்றப்படும் என்ற வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. விவசாயிகள் மீண்டும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அமைதியான முறையில் போராடும் விவசாயிகள் மீது, ஒன்றிய அரசு துணை ராணுவம் கொண்டு அடக்குமுறைகளை ஏவி வருகின்றது. போராட்டம் தொய்வின்றித் தொடர்கிறது.

விவசாய விளைப் பொருட்களுக்கான, விலை நிர்ணயச் சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும்.

விவசாயிகள் பெற்ற கடன்கள் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

குத்தகை விவசாயம் செய்து வரும் நிலங்களை, விவசாயிகளுக்குச் சொந்தமாக்கப்பட வேண்டும்.

வேளாண்மைத் தொழில் முற்றிலும் இயந்திரம் மயமாக்கப்பட்ட நிலையில், விவசாயத் தொழிலாளர்களுக்கு, பெண்களுக்கு ஓரளவு பாதுகாப்பாக இருந்து வரும், மகாத்மா காந்தி வேலை உறுதி அளிப்புச் சட்டத்தை, மோடியின் அரசு சீர்குலைத்து வருகின்றது. வேலை நாட்களை 200 ஆக அதிகரிக்கவும், நாள் ஊதியத்தை ரூபாய் 700 ஆக உயர்த்தவும் போராட வேண்டும்.

குடியிருப்பு மனை சொந்தமாக்கப்பட வேண்டும். மனையில்லாதவர்களுக்கு மனை வழங்கிட வேண்டும்.

அனைவருக்கும் பாதுகாப்பான வீடுகள் கட்டித் தரப்பட வேண்டும்.

இவையெல்லாம் விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் முன்பு உள்ள பிரச்சனைகளாகும்.

ஏப்ரல் திங்களில் கூடவுள்ள விவசாயச் சங்கத்தின் 30 வது தேசிய மாநாடு உரிய தீர்மானங்களை உருவாக்கும் என்று நாடு முழுவதும் உள்ள விவசாயிகள் எதிர்பார்க்கின்றார்கள்.

மாநாட்டில் நமது அகில இந்தியத் தலைவர்கள் பங்கேற்க உள்ளனர். அவர்கள் மட்டுமின்றி, தமிழ்நாடு வேளாண்மைத் துறை அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துத் தெரிவிக்க உள்ளனர்.

தோழமை அமைப்புகளின் சங்கத் தலைவர்களும் பங்கேற்று வாழ்த்து கூற உள்ளார்கள். காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை உள்ள மாநிலங்களின் சார்பில், நமது சங்கப் பிரதிநிதிகள் வருகை தர உள்ளனர்.

மாநாட்டின் தொடக்க நாள் அன்று தியாகிகளை நினைவுகூறும் தியாகச்சுடர்கள் திருவாரூர், தஞ்சை வடக்கு, தஞ்சை தெற்கு, நாகை, மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களில் இருந்து வருகின்றன.

ஏப்ரல் 15 காலை தியாகச் சுடர்களின் அணிவகுப்போடு மாநாடு தொடங்குகின்றது.

மாநாட்டின் நிறைவு நாளான ஏப்ரல் 17 ஆம் நாள், நாகை நகர் கண்டிராத மாபெரும் அணிவகுப்பும், நிறைவாகப் பொதுக்கூட்டமும் நடைபெற உள்ளன.

பேரணி, பொதுக்கூட்டத்தில் பங்கேற்கத் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் விவசாயிகள் அணி திரள உள்ளனர்.


விடுதலைப் போர்க்களத்தில் உதயமான விவசாயிகள் சங்கம், தனது நீண்ட நெடிய போராட்டத்தால், பெருமைக்குரிய தியாகத்தால், அரிய பல சாதனைகளைச் சாதித்திட்ட பெருமையோடும், கம்பீரத்தோடும் நாகை நகரில் தனது முப்பதாவது மாநாட்டை நடத்தவுள்ளது.

மாநாடு வெற்றி பெற, ஆகச் சிறந்த தீர்மானங்கள் உருவாக, அவற்றைச் செயல்படுத்திட, உறுதுணையாக நம் பங்களிப்பைச் செய்திடுவோம்.

நிறைவு நாளில் நடைபெறும் மகத்தான பேரணியில், மாபெரும் பேரணியில், பொதுக்கூட்டத்தில் பங்கேற்போம்.

நிறைவு பெற்றது.

தோழமைமிக்க,



(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 87 இதழ் 52

# நான் தமிழ்நாட்டில் இருக்கிறேன்

மும்பையில், 'ஹேபிடேட்' என்ற பெயரில் செயல்பட்ட அரங்கத்தை சிவசேனா குண்டர்கள் அடித்து நொறுக்கி இருக்கிறார்கள்.

குரூரமான மதவெறி கொண்டபாஜக மீதும் அதன் ஆட்சியின் மீதும் கூர்மையான விமர்சனங்களை நகைச்சுவையாக முன்வைக்கும் குணால் காம்ரா என்ற 'ஸ்டாண்ட் அப் காமெடி'யாளர் ஒரு நிகழ்ச்சியை நடத்தி அதைக் காணொளியாகப் பதிவு செய்து வெளியிட்டதே அதன் காரணம்.

'வீ ஷல் ஓவர்கம்' (நாங்கள் வெல்வோம்) என்ற உலகளவில் பிரபலமான பாடலின் இந்தி வடிவத்தை, வேறு சொற்களால் நிரப்பி அவர் பாடியிருந்தார்.

எல்லாவற்றையும் இழப்போம், இதயத்தில் மூட நம்பிக்கைகளை ஏற்போம், நாட்டைச் சீர்குலைப்போம், அதானி, அம்பானி அடிக்கும் கொள்ளைகளுக்கு அடிபணிவோம் எனும் சொற்களோடு, காந்தியைக் கொன்ற நாதுராம் கோட்சேவையும், பாலியல் வல்லுறவுக்காக தண்டனை பெற்றுச் சிறையில் இருக்கும் சாமியார் ஆசாராம் பாபுவையும் வாழ்த்தி அந்தப் பாடல் அமைந்திருந்தது.

எவ்வளவு கேவலமான பாதையில் நாடு வழிநடத்தப்படுகிறது என்பதைச் சிரிக்கச் சிரிக்க படுகிண்டலாய் வர்ணித்தது அந்தப் பாடல்.

மகாராஷ்டிரா துணை முதல்வரான ஏக்நாத் ஷிண்டேவை 'துரோகி' என்று குறிப்பிட்டு, உத்தவ் தாக்கரேவுக்கு எதிராகக் கட்சியைப் பிளந்ததைக் கேலி செய்தும் பாடினார்.

காம்ராவின் இந்தக் காணொளி பரபரப்பாகப் பரவியதால், நிகழ்ச்சி நடந்த அரங்கத்தையும், அதனை உள்ளடக்கிய விடுதியையும் ஷிண்டேயின் சிவசேனா கும்பல் தாக்கிச் சூறையாடியது. அதுமட்டுமின்றி, விதி மீறிக் கட்டப்பட்டதாகக் கூறி அந்த விடுதியின் ஒரு பகுதியை மும்பை மாநகராட்சி இடித்துத் தள்ளியது.

மகாராஷ்டிரா முதல்வர் தேவேந்திர ஃபட்னவிஸ், 'பேச்சுரிமை முக்கியமானதுதான். ஆனால் அதைத் தவறாகப் பயன்படுத்தக் கூடாது. அவர் பிரதமருக்கும், நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கும், நாட்டின் மிக முக்கியத் தொழிலதிபர்களுக்கும் எதிராகப் பேசுகிறார். பேசுவதற்கும் ஒரு எல்லை உண்டு. எந்த வினைக்கும் எதிர்வினை உண்டு' என்று நடத்தப்பட்ட தாக்குதலுக்கு நியாயம் கற்பித்துள்ளார்.

காம்ரா மன்னிப்பு கேட்காவிட்டால், அவருக்கும் இதே கதி தான் என்று பகிரங்கமான அச்சுறுத்தல்கள் தொடுக்கப்படுகின்றன.

39 வயதான காம்ரா, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் என்று பகிரங்கமாக அறிவித்தவர். மாட்டிக்கொண்டதும் மன்னிப்புக் கோர அவர் சாவர்க்கர், எச்.ராஜா, அண்ணாமலை வழி வந்தவரல்லர்!

"நான் ஒருபோதும் மன்னிப்புக் கோர மாட்டேன். நகைச்சுவையான விமர்சனங்களை ஏன் இவர்கள் வன்முறையால் எதிர்கொள்கிறார்கள்?" என்றதோடு நிற்காமல், "என்னைத் தாக்குபவர்கள் வாருங்கள், நான் தமிழ்நாட்டில் இருக்கிறேன்" என மீண்டும் பகடி செய்திருக்கிறார்.

ஆனால் இதே தமிழ்நாட்டில், டாஸ்மாக் அலுவலகத்தை முற்றுகையிட முனைந்த போது பாஜக தலைவர் அண்ணாமலை கைது செய்யப்பட்டார். மாலையில் விடுவிக்கப்பட்டார்.

இதைக் கண்டித்து, "எதிர்ப்புகளை நசுக்குகிறீர்கள். இதுதான் ஜனநாயகமா? இவ்வளவு கோழைத்தனமாக நீங்கள் செயல்பட முடிகிறதா?" என்று அண்ணாமலை கேட்டார்!

கைது செய்யப்பட்ட இன்னொரு தலைவர் எச்.ராஜா "இந்த நாய் வண்டியில் நான் ஏற மாட்டேன்" என்று பிடிவாதம் பிடித்தார். டாஸ்மாக் குறித்த வழக்கில் துறையின் அமைச்சர் மட்டுமல்ல, இன்னொரு மனீஷ் சிசோடியா (அதாவது தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர்) சிறைக்குள் தள்ளப்படுவதைப் பார்ப்பீர்கள்" என்று மார்தட்டிக் கொண்டார். ஆனால் அமலாக்கத் துறையைத்தான் நீதிமன்றம் கண்டித்தது.

"கேடிகளும் பாலியல் குற்றவாளிகளும் திமுக நிர்வாகி என்ற பெயரில் பகிரங்கமாகத் திரிகிறார்கள்" என்று குற்றம் சுமத்தினார் அண்ணாமலை.

தந்தை பெரியார் மீதும், திமுக மீதும், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் மீதும் தரம் தாழ்ந்த, அருவருக்கத்தக்க, மோசமான தனிநபர் தாக்குதல்களை, பொய்யும் புரட்டுமாய் பிஜேபி தலைவர்களும் அதன் பரிவாரங்களும் தொடுத்து வருவதை நாடறியும்.

நீதிமன்றங்கள் எத்தனை முறை கண்டித்தாலும், ஆர்எஸ்எஸ்ஸுக்கு முரண்பாடான கருத்துகளை வெளிப்படுத்துபவர்களின் வீடுகளை புல்டோசர் கொண்டு இடிப்பது உத்தரப்பிரதேசத்தில் தொடங்கி மத்தியப்பிரதேசம், மகாராஷ்டிரா என்று பரவிக் கொண்டிருக்கிறது.

"தமிழ்நாட்டிலும் ஆத்திரமூட்டி, எவ்வாறாகிலும், சட்டப்பேரவைத் தேர்தலுக்கு முன்பாக, ஒரு கலவரச் சூழலை தமிழ்நாட்டில் ஏற்படுத்தி விட வேண்டும் என்று பிஜேபி திட்டமிடுகிறது. கலவரம் நடக்கும் இடத்தில்தான் அதனால் காலூன்ற முடியும் என்பதே அனுபவம்.

திமுகவுக்கு எதிரான கட்சிகளைக் கூட, தன்னை ஆதரிக்க வேண்டும் என்று அச்சுறுத்தித்தான் அடிபணிய வைக்கிறது.

தமிழ்நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள், ஏமாற மாட்டார்கள்!

1 ஆம் பக்கத் தொடர்ச்சி

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அனைவரையும் வரவேற்று உரையாற்றினார்.

அதனையடுத்து, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து விளக்கினார்.

தொடர்ந்து பல்வேறு மாநில முதலமைச்சர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள் தங்களின் கருத்துகளை, ஆலோசனைகளைத் தெரிவித்தனர். பல்வேறு மாநிலங்களிடம் கலந்தாய்வு மேற்கொள்ளாமல் செய்யப்படவுள்ள தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கையில் வெளிப்படைத்தன்மை இல்லாமை, தெளிவு இன்மை ஆகியவை குறித்து ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்துகிறோம்.

இந்தியாவில் வளர்ச்சியடைந்த மாநிலங்களின் அரசியல் பொருளாதார எதிர்காலத்தைப் பாதுகாக்க இந்தக் கூட்டு நடவடிக்கைக் குழுவை ஒருங்கிணைத்தமைக்காக தமிழ்நாடு முதலமைச்சருக்கு பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என்றனர்.

தொடர்ந்து, கூட்டத்தில் பங்கேற்ற பிரதிநிதிகளின் உரையாடல்களில் முன்வைத்த பல்வேறு கருத்துக்கள், வெளிப்படுத்திய அக்கறைகள் ஆகியவற்றின் அடிப்படையில், 7 தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

தொகுதி மறுசீரமைப்புக்கு எதிரான கூட்டு நடவடிக்கைக் குழுவின் அடுத்த கூட்டம் ஹைதராபாத்தில் நடத்த வேண்டும் என்று தெலுங்கானா முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி விருப்பம் தெரிவித்ததன் அடிப்படையில், அடுத்த கூட்டம் ஹைதராபாத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

## முதலமைச்சரின் முயற்சிக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பாராட்டு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஒன்றிய பாஜக அரசின் நாடாளுமன்ற தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கையால், தமிழ்நாட்டுக்கு ஏற்படும் பாதிப்புகளைத் தடுத்து, உரிமைகளைப் பாதுகாக்க தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கடந்த 05.03.2025 ஆம் தேதி அனைத்துக் கட்சிகள் கூட்டத்தை கூட்டி, கருத்துக்களை கேட்டறிந்தார்.

அந்தக் கூட்டத்தில் முதலமைச்சர் முன்மொழிந்த தீர்மானங்கள் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டன. இதனைத் தொடர்ந்து தொகுதிகள் மறுசீரமைப்பு நியாயமான முறையில் அமைய வேண்டும் என்ற முறையில் பாதிக்கப்படும் மாநிலங்களின் முதலமைச்சர்களையும், அரசியல் கட்சித் தலைவர்களையும் அழைத்து 22.03.2025 அன்று நடத்திய கூட்டம் அரசியல் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்தது.

மாநிலங்களின் உரிமைகளை நிலைநாட்டுவதுடன், குடியரசு அமைப்பின் அச்சாக விளங்கும் கூட்டாட்சி நெறிமுறைகளை பாதுகாப்பதில் முக்கிய பங்காற்றும் என்பதை எதிர்கால வரலாறு உறுதி செய்யும். வரும் முன் உரைப்பது அமைச்சு என்ற இலக்கணத்திற்கு ஏற்ப, நாடு எதிர்கொள்ளும் பேராபத்தை முன் உணர்ந்து, அதனைத் தடுக்கும் முயற்சிகளை மேற்கொண்டு வரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு பாராட்டுதலை தெரிவித்துக் கொள்வதுடன் முதலமைச்சரின் அழைப்பை ஏற்று கூட்டத்தில் கலந்து கொண்ட கேரளம், தெலுங்கானா, பஞ்சாப் மாநிலங்களின் முதலமைச்சர்களுக்கும், அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் நன்றி பாராட்டுதலை தெரிவித்துக் கொள்கிறது என்று கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் குறிப்பிட்டுள்ளார்.

## தீர்மானங்கள்

கூட்டு நடவடிக்கைக்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

- ஜனநாயக முறையையும் பண்பையும் மேம்படுத்தும் நோக்கிலேயே ஒன்றிய அரசு தொகுதி மறுசீரமைப்பை மேற்கொள்ள வேண்டும். அந்நடவடிக்கையை வெளிப்படையாகவும், தொடர்புடைய அனைத்து மாநிலங்கள், மாநில அரசாங்கங்கள், அரசியல் கட்சிகள் ஆகியோரைக் கலந்து ஆலோசித்து, உரையாடல் மேற்கொண்டு, அவர்கள் வழங்கும் கருத்துகளின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும்.
- 42வது, 84வது, 87வது அரசியலமைப்புத் திருத்தங்களுக்குப் பின்னால் உள்ள நோக்கம் மக்கள் தொகை கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைத் திறம்பட செயல்படுத்திய மாநிலங்களைப் பாதுகாப்பதும் / ஊக்குவிப்பதும், தேசிய மக்கள் தொகை நிலைப்படுத்தலும் ஆகும். இந்த இலக்கு இன்னும் அடையப்படவில்லை என்ற உண்மையைக் கருத்தில் கொண்டு, 1971 மக்கள்தொகை கணக்கெடுப்பு அடிப்படையிலான நாடாளுமன்றத் தொகுதிகளின் மறுசீரமைப்புத் தள்ளிவைப்பை, மேலும் 25 ஆண்டு களுக்கு நீட்டிக்க வேண்டும். மக்கள்தொகை கட்டுப்பாட்டுத் திட்டத்தைத் திறம்பட செயல்படுத்தி, அதன் விளைவாக மக்கள்தொகை விகிதம் குறைந்துள்ள மாநிலங்கள் தண்டிக்கப்படக் கூடாது. இதற்காக ஒன்றிய அரசு தேவையான அரசியலமைப்புத் திருத்தங்களைச் செய்ய வேண்டும்.
- பிரதிநிதித்துவப்படுத்தும் மாநிலங்களின், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒருங்கிணைப்புக் குழு, மேலே குறிப்பிட்ட கொள்கைகளுக்கு முரணாக ஒன்றிய அரசு மேற்கொள்ளும் தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கையின் அனைத்து முயற்சிகளையும் எதிர்த்து நாடாளுமன்ற நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும். அந்தந்த சட்டமன்றங்களில் தீர்மானம் நிறைவேற்றப்படும்.
- நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒருங்கிணைப்புக் குழு, நடந்து வரும் நாடாளுமன்றக் கூட்டத்தொடரின் போது, மேற்குறிப்பிட்ட அம்சங்களின் அடிப்படையில் இந்தியப் பிரதமருக்குத் தங்களது கருத்தைத் தெரிவிக்கும்.
- கூட்டத்தில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த அரசியல் கட்சிகள், இந்தப் பிரச்சனையில் அந்தந்த மாநிலங்களில் சட்டமன்றத் தீர்மானங்களை நிறைவேற்றி, அதனை ஒன்றிய அரசுக்குத் தெரிவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.
- ஒருங்கிணைந்த பொதுக்கருத்தை உருவாக்க, கடந்த கால தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் வரலாறும், அதன் விளைவுகளும் குறித்த தகவல்களை அந்தந்த மாநில பொதுமக்களிடையே பரப்புவதற்கு கூட்டு நடவடிக்கைக் குழு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

## சவுக்கு சங்கர் வீட்டில் நடந்த சம்பவம் அநாகரிகத்தின் உச்சம்

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

சவுக்கு சங்கர் வீட்டில் நடந்த சம்பவம் அநாகரிகத்தின் உச்சம், இதில் ஈடுபட்ட குற்றவாளிகள் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தெரிவித்துள்ளார்.

யூடியூபர் சவுக்கு சங்கர் வீட்டில், அத்துமீறி நுழைந்து மனிதக் கழிவுகளையும், சாக்கடைக் கழிவுகளையும் வீடு முழுவதும் கொட்டிய செயல் அநாகரிகத்தின் உச்சமானது. நாகரிக சமூகம் எவ்வகையிலும் ஏற்கத்தக்க செயலல்ல. பொதுத் தளங்களில் ஒருவரது பேச்சு, அடுத்தவர்களை இழிவுபடுத்தும் வகையில் அமைந்தால் அதன் மீது சட்டபூர்வ நடவடிக்கை எடுக்க உரிமை உண்டு. அதற்கான சட்டப் பாதுகாப்புகளும் இருக்கின்றன. இந்த முறையான, சட்டரீதியான வாய்ப்புகளை நிராகரித்து விட்டு, சட்டத்தைக் கையில் எடுத்துக் கொள்வது சட்டம் ஒழுங்கைச் சீர்குலைக்கும் அராஜகச் செயலாகும். இந்தக் குற்றச் செயலில் ஈடுபட்டவர்கள் மீது கடுமையான சட்டப் பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து, அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு, சட்டத்தின் பிடியில் இருந்து தப்பி விடாமல் தண்டிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என தமிழ்நாடு அரசை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயற்குழு கேட்டுக் கொள்கிறது என்று கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# தேன்கனிக்கோட்டையை ஒட்டி சிப்காட் அமைக்க வேண்டும்

# ஓசூரில் சந்தாபுரம் இடையே மெட்ரோ ரயில் கொண்டுவர வேண்டும்

## நிதிநிலை அறிக்கை மீது தளி சட்டமன்ற தொகுதி உறுப்பினர் டி.ராமச்சந்திரன் உரை

நிதிநிலை அறிக்கை மற்றும் வேளாண் நிதிநிலை அறிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். ஒன்றிய பாஜக அரசு பொறுப்பேற்ற நாள் முதல் பாஜக ஆட்சி செய்யாத எதிர்க் கட்சிகள் ஆட்சி செய்கின்ற தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களின் மீது தொடர்ந்து தாக்குதலை நடத்தி வருகிறது.

நிதிப் பகிர்வில் தொடர்ந்து வஞ்சகம் அளிக்கிறது. தமிழ்நாடு ஒரு ரூபாய் செலுத்தினால் ஒன்றிய அரசு 29 பைசா நமக்கு திருப்பித் தருகிறது. அதே பாஜக ஆட்சி செய்கின்ற உத்தரப்பிரதேசத்தில் ஒரு ரூபாய்க்கு 1 ரூபாய் 75 பைசா திருப்பி தருகிறது. அதேபோல பீகாரில் ஒரு ரூபாய் அவர்கள் வரியாக செலுத்தினால் ஏழு ரூபாயை பீகார் அரசுக்கு ஒன்றிய அரசு தருகிறது. இவ்வாறு தொடர்ந்து நிதி பகிர்வில் தமிழ்நாட்டை ஒன்றிய அரசு வஞ்சித்து வருகிறது. அதேபோல பேரிடர் நிவாரண நிதி வழங்குவதிலும் தொடர்ந்து தமிழ்நாட்டை ஒன்றிய அரசு வஞ்சித்துக் கொண்டிருக்கிறது.

குறிப்பாக மிக்ஜாம் புயல், பெஞ்சல் புயல் காரணமாக தமிழ்நாட்டில் ஏறத்தாழ 18 மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டன. 37 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு பாதிப்புகள் ஏற்பட்டன. ஆகவே பேரிடர் நிவாரண நிதி வழங்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய அரசுக்கு கோரிக்கை வைத்த போது தமிழ்நாட்டிற்கு அந்த நிவாரணத் தொகையை வழங்காமல் பாஜக ஆட்சி செய்கின்ற ஜார்கண்ட் குஜராத் திரிபுரா ஆந்திரா உள்ளிட்ட 27 மாநிலங்களுக்கு பேரிடர் நிவாரண நிதி வழங்கி தமிழ்நாட்டு மக்களை ஒன்றிய அரசு வஞ்சித்து விட்டது.

இன்றைக்கு தொகுதி மறு சீரமைப்பு என்ற பெயரால் தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களுடைய நாடாளுமன்ற எண்ணிக்கையை குறைப்பதற்கான நடவடிக்கையை ஒன்றிய அரசு மேற்கொண்டு வருகிறது. ஆகவே அந்த முயற்சியை முறியடிக்கும் வகையில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தென் மாநில அரசியல் கட்சி தலைவர்களுடைய கூட்டு கூட்டத்தை கூட்டி நாடளுமன்றத்தில் நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய எண்ணிக்கையை பாதுகாக்கும் வகையில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுக்கின்ற ஒவ்வொரு நடவடிக்கைகளையும் நான் வரவேற்கிறேன்.

அதேபோல இன்றைக்கு ஒன்றிய அரசாங்கம் நம்முடைய மாணவர்களுக்கு வழங்க வேண்டிய கல்வி உதவித் தொகை 2152 கோடி ரூபாயை வழங்க நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் பேசினால் அவர்களை நாகரீகம் அற்றவர்கள் என்று ஒன்றிய கல்வி அமைச்சர் சொல்கிறார். அதேபோல ஒன்றிய நிதி அமைச்சர் அவர்கள் தமிழைப் படித்தால் பிச்சை கூட எடுக்க முடியாது என்று தமிழை கேவலமாக பேசுகிறார். மற்றொரு ஒன்றிய அமைச்சர் தமிழ்நாடு மக்களை பார்த்து பயங்கரவாதிகள் என்று சொல்கிறார். ஆகவே தொடர்ந்து ஒன்றிய அரசாங்கம் தமிழ் மீதும் தமிழ் நாட்டு மக்கள் மீதும் வன்மத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஒன்றிய அரசாங்கம் தேசிய கல்விக் கொள்கை என்னும் புதிய கல்விக் கொள்கையை ஏற்றால்தான் நிதி வழங்கப்படும் என்று சொல்லும் போது



அதாவது மும்மொழி கொள்கையை நாங்கள் ஏற்க மாட்டோம் நீங்கள் நிதி வழங்கவில்லைஎன்றாலும்கூட இருமொழிக் கொள்கையை நாங்கள் அமல்படுத்துவோம் என்று இந்த நிதிநிலை அறிக்கையில் பள்ளி கல்வித்துறைக்கு 46 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

அதேபோல கல்விக்கு செலவிடும் தொகையை செலவினமாக கருதாமல் வருங்கால மனிதவள ஆற்றலுக்கான மூலதனமாக கருதி இந்த அளவுக்கு தமிழக அரசு நிதி வழங்கியிருப்பதை வரவேற்கிறோம். அரசு பள்ளிகளிலே மும்மொழி கொள்கையும், தேசிய கல்விக் கொள்கையும் நாம் ஏற்கவில்லை. ஆகவே தனியார் பள்ளிகளில் சிபிஎஸ்சி பள்ளிகளில் மும்மொழிக் கொள்கையும், தேசிய கல்விக் கொள்கையும் அமல்படுத்த ஒன்றிய அரசு முயற்சிகள் மேற்கொள்கிறது. அதாவது சிபிஎஸ்சி பள்ளிகள் தனியார் பள்ளிகள் ஆரம்பிப்பதற்கு அனுமதி வேண்டுமென்றால் மாநில அரசுனுடைய அனுமதியே தேவையில்லை ஒன்றிய அரசு அனுமதி வழங்குகிறது என்று மாநில சுயாட்சிக்கு எதிராக கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிராக ஒன்றிய அரசு செயல்படுகிறது. ஆகவே மாநில உரிமைக்கும் கூட்டாட்சி தத்துவத்திற்கும் தொடர்ந்து குரல் கொடுத்துக் கொண்டிருக்கிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்கு ஒரு நல்ல முடிவினை எட்டப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல இந்தியாவிலேயே சமூக நல திட்டங்களை செயல்படுத்துவதில் முன்னணி மாநிலமாக இன்றைக்கு தமிழ்நாடு திகழ்கிறது. தமிழ்நாட்டினுடைய சமூக நலத்திட்டங்களை மற்ற மாநிலங்களும் பின்பற்றக்கூடிய கட்டாயம் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக மகளிர் உரிமைத்தொகை, மகளிர் விடியல் பயணம், காலை சிற்றுண்டி திட்டம் இவை எல்லாம் விரிவுபடுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. அதேபோல மூன்றாம் பாலினத்தவர் புதுமைப் பெண் திட்டம் தமிழ் புதல்வன் திட்டம் விரிவுபடுத்தப்படும் என்ற அறிவிப்பும் ஊர் காவல் பணியில் மூன்றாம் பாலினத்தவர்களுக்கு பணி வழங்கப்படும் என்பது அவர்களுடைய கண்ணியமான வாழ்க்கைக்கு இந்த அரசு உத்தரவாதம் செய்திருக்கிறது.

அதேபோல பெண்களை அதிகாரப்படுத்தும் நோக்கத்தோடு பெண்கள் பெயரில் அசையா சொத்துக்களை பதிவு செய்தால் ஒரு சதவீதம் கட்டண சலுகை பெண் தொழில் முனைவோருக்கு வங்கி கடன் மானியமாக 20% சலுகை, புதிதாக 10,000 மகளிர் சுய உதவி குழுக்கள் அமைத்தல் ஏறத்தாழ 37 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு மகளிர் சுய உதவி குழுக்களுக்கு வங்கிக் கடன் உதவி பணிபுரியும் பெண்களுக்கு தோழியர் விடுதிகள் முதியோர் பராமரிப்புக்காக அன்புச்சோலைகள் இரண்டு பெற்றோர்களை இழந்த குழந்தைகளுக்கு மாதம் 2000 ரூபாய் மாற்று திறனாளிகளுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் இட ஒதுக்கீடு என்ற மக்கள் நலத்திட்டங்கள் எல்லாம் ஏதோ வாக்கு அரசியலுக்கானவை அல்ல.

விளிம்புநிலை மக்களை கையைப் பிடித்து உயர்த்துவதற்கான மக்கள் நல்வாழ்வு திட்டங்கள் என்பதை தெரி வித்துக் கொள்கிறேன்.

மாற்றுத்திறனாளிகள் மாதாந்திர ஓய்வூதிய திட்டத்தை உயர்த்தி வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். அரசு அதையும் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞருடைய கனவு தான் நவீன தமிழகம், குடிசை இல்லா தமிழகம் அந்த இலக்கை எய்தும் வகையில் தமிழ்நாடு அரசால் 2030க்குள் 8 இலட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டு கடந்த ஆண்டுக்கான ஒரு லட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டப்பட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த ஆண்டும் ஒரு லட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்கான தொகையாக ஒரு வீட்டிற்கு ரூ.3.50 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இன்றைக்கு கட்டுமான பொருட்களான ஜல்லி, கம்பி, சிமெண்ட், எம்சாண்ட் போன்றவற்றின் விலை உயர்ந்திருப்பதால் அந்த நிதியை ரூ 5 லட்சமாக உயர்த்தி வழங்க வேண்டும்.

அரசின் பல்வேறு துறைகளில் ஏறத்தாழ அரசு துறையில் சுமார் 6.50 லட்சம் காலி பணியிடங்கள் உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. இன்றைய நிதிநிலை அறிக்கையில் 40000 அரசு பணியிடங்கள் நிரப்பப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள காலி பணியிடங்களும் படிப்படியாக நிரப்பப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஈட்டிய விடுப்பு சரண் செய்தல் குறித்து 15 நாட்களுக்கான பணப்பயன் அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டிலேயே அதை நடைமுறை படுத்த வேண்டும். அதேபோன்று அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் தொடர்ந்து புதிய பென்ஷன் திட்டம் பயன்பெறாது பழைய பென்ஷன் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கோரிக்கை வைக்கிறார்கள் அந்த பழைய பென்ஷன் திட்டத்தினையும் நடைமுறைப்படுத்திட வேண்டும்.

நாடு சுதந்திரம் பெற்று 78 ஆண்டுகளாக புறம்போக்கு நிலத்தில் பிறந்து வாழ்ந்து சாகும்போது கூட தான் இந்த நாட்டின் பிரஜை என்று சொல்லிக் கொள்வதற்கு கையளவு நிலம் இல்லாமல் புறம்போக்கு சுடுகாட்டில் எரிக்கின்ற புதைக்கின்ற அவல நிலையில் இருக்கின்ற மக்களுக்கு 5 லட்சம் வீடுகளுக்கு பட்டா வழங்கப்படும் என்ற மகத்தான அறிவிப்பினை அளித்திருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்

### எனது தளி தொகுதியில்...

இன்றைக்கு வேளாண் நிதிநிலை அறிக்கையில் அனைத்து பயிர்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து குறிப்பாக இன்றைக்கு மலர் சாகுபடிக்கு ரூபாய் 8 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. எனது தளித் தொகுதி கடல் மட்டத் திலிருந்து சுமார் 3,500 அடி உயரமாக இருப்பதால் தளி, கெலமங்கலம், ஓசூர், பகுதிகளில் ஏராளமான விவசாயிகள் பசுமை குடில் அமைத்து மலர் சாகுபடி செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்த விவசாயிகளுக்கு கொய் மலர்களை ஏற்றுமதி செய்வதற்கு பதப்படுத்துவதற்கு தளியில் ஒரு குளிர்பதன கிடங்கை ஏற்படுத்தித் தர வேண்டும்.

என்னுடைய தளி தொகுதியில் யானைகள் மற்றும் காட்டுப்பன்றி போன்ற வனவிலங்குகளால் விவசாயிகளுடைய நெல் கரும்பு மற்றும் வாழை உள்ளிட்ட பயிர்கள் சேதமடைகின்றன. அதற்காக வனத்துறையால் வழங்கப்படும் நிவாரணம் என்பது போதுமானதாக இல்லை. ஆகவே பயிர் காப்பீட்டு திட்டத்தில் வனவிலங்குகளால் ஏற்படுகின்ற சேதத்திற்கு காப்பீடு வழங்க வேண்டும் என்று அரசை கேட்டுக்கொள்கிறேன். தளி தொகுதியில் குறிப்பாக ஓசூரில் டைட்டில் பார்க் அமைப்பதற்காக நிதிநிலை அறிக்கையில் ரூபாய் 450 கோடியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறி வித்திருக்கிறார்கள். அதேபோல ஏற்கனவே விமான நிலையத்தை அறிவித்திருக்கிறார். ஓசூர் மற்றும் சந்தாபுரத்திற்கு இடையே 16 கிலோமீட்டர் தூரம் இருக்கிறது. அங்கு மெட்ரோ ரயில் திட்டத்தை கொண்டு வர வேண்டும்.

தளி தொகுதியில் அரசுடைய நிலம் ஆயிரம் ஏக்கர் இருக்கிறது மாண்புமிகு குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கடந்த வாரம் ஓசூருக்கு வருகை தந்த போது தெரிவித்தோம். பட்டு வளர்ச்சி துறைக்கு சொந்தமான இடம் இருக்கிறது விவசாயம் நிலங்களில் சிப்காட் அமைப்பதற்கு விவசாயிகள் கடுமையாக எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். அரசு நிலமே தேன்கனிக்கோட்டை ஒட்டி ஓசூரில் இருந்து 25 கிலோமீட்டர் தூரத்தில் ஆயிரம் ஏக்கர் நிலம் இருக்கிறது. அங்கு சிப்காட் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

# தொகுதி மறு வரையறை சீரமைப்பு கூட்டாட்சி முறைமையைச் சீரழிக்கும் 1ஆம் பக்க தொடர்ச்சி

பாய் அரசாங்கத்தால் நீட்டிக்கப்பட்டது..

அடுத்த மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் வரவிருக்கும் தொகுதி மறுவரையறை, தென்னிந்திய மாநிலங்களின் பிரதிநிதித்துவத்தை கடுமையாகக் குறைக்கும். அதே வேளையில், வட இந்திய மாநிலங்களின் பிரதிநிதித்துவத்தை கணிசமாக அதிகரிக்கும். தற்போது, உத்தரப் பிரதேசம், பீகார், ராஜஸ்தான் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகியவை மக்களவையில் உள்ள 543 இடங்களில் 174 இடங்களை (32 சதவீதம்) கொண்டுள்ளன.

தமிழ்நாடு, கேரளா, ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா மற்றும் கர்நாடகா ஆகியவை மொத்தமாக 129 இடங்களை அல்லது 24 சதவீதத்தைக் கொண்டுள்ளன.

ஒருவேளை, தொகுதியின் எண்ணிக்கையை அதிகரிக்காமல் அதே 543 ஆக வைத்துக் கொண்டால், மக்கள் தொகை விகிதாச்சாரத்தின் அடிப்படையில் கணக்கிடும் போது வட இந்திய மாநிலங்கள் கணிசமாக அதிகரிக்கும். 205 இடங்கள் அவற்றுக்கு கிடைக்கும். அதே நேரத்தில் தென்னிந்திய மாநிலங்களின் பிரதிநிதித்துவம் 103 இடங்களாகக் குறையும் என்று கணிப்புகள் தெரிவிக்கின்றன.

புதிய நாடாளுமன்றக் கட்டிடத்தின் மக்களவை அறையில் அமைக்கப்பட்டுள்ள இருக்கைகளின் எண்ணிக்கை 888 ஆக இருப்பதால், அந்த அளவுக்கு தொகுதிகளில் எண்ணிக்கை உயர்த்தப்படுவதாக வைத்துக் கொண்டால், வட இந்திய மாநிலங்கள் 324 இடங்களைப் பெறும் அல்லது மொத்தத்தில் 39 சதவீதத்தைப் பெறும

ஆனால் தென்னிந்திய மாநிலங்கள் 164 இடங்களைப் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கையில் 24 சதவீதமாக சதவீதமாக தற்போது இருப்பதை 19% என்று குறைத்து விடும்.

1971 ஆம் ஆண்டில், பீகார் மற்றும் தமிழ்நாடு மாநிலங்கள், மொத்த அளவு மக்கள் தொகையையும், அதனால் ஏறத்தாழ ஒரே மாதிரியான எண்ணிக்கையில் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கொண்டிருந்தனர்.

பல தசாப்தங்களாக, பீகாரின் மக்கள்தொகை வேகமாக அதிகரித்தது, மேலும் அதன் எம்.பி.க்கள் இன்று தமிழ்நாட்டை விட கணிசமாக அதிகமான மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள். அதாவது ஒவ்வொரு தொகுதியிலும் தமிழ்நாட்டின் எம்பி தொகுதியில் உள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை விட பீகாரில் உள்ள தொகுதியில் வாக்காளர்கள் அதிகமாக இருக்கிறார்கள்.

இந்த ஏற்றத்தாழ்வு, வரவிருக்கும் செயல்பாட்டில் தென் மாநிலங்கள் எதிர்கொள்ளும் சவாலை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. உண்மை என்னவென்றால், வட மாநிலங்கள் இப்போது இந்தியாவின் மக்கள்தொகையில் 50 சதவீதத்தைக் கொண்டுள்ளன, இது 1971 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 43 சதவீதத்திலிருந்து அதிகரித்துள்ளது, அதே நேரத்தில் தென் மாநிலங்களின் பங்கு 25 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாகக் குறைந்துள்ளது.

2026 க்குப் பிந்தைய தொகுதி மறு வரையறை குறித்து தென் மாநிலங்கள் தொடர்ந்து பல காரணங்களுக்காக கவலைகளை வெளிப்படுத்தியுள்ளன. அவை குடும்பக் கட்டுப்பாடு நடவடிக்கைகளில் சிறந்து விளங்குகின்றன, அவற்றின் மக்கள்தொகை உயிரும் விகிதத்தை தொடர்ந்து குறைத்து வருகின்றன.

மக்கள்தொகையை மட்டுமே அடிப்படையாகக் கொண்ட மறு வரையறை நிர்ணயம் அவற்றைக் கடுமையாக தண்டிக்கும் அபாயம் உள்ளது. அரசியல் ரீதியாகப் பார்த்தால், கர்நாடகாவைத் தவிர, தென்னிந்தியாவில் பாஜக இதுவரை பெரிய முன்னேற்றத்தை அடையத் தவறிவிட்டது. இதனால் அவற்றின் பிரதிநிதித்துவத்தைக் குறைப்பது தென் மாநிலங்களைத் தண்டிப்பதாகும்.

கூட்டாட்சிக்கு அச்சுறுத்தல் என்பது இன்னொரு முக்கிய கவலையாகும். பாஜக அதிகாரத்தை மையத்தில் குவித்துக் கொண்டே வருகிறது.

இந்தி பேசாத மாநிலங்களில் இந்தி திணிப்பு, கேரளா, தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்கு எதிரான நிதிப் பாகுபாடு, புதிய பொருளாதாரக் கொள்கையை திணித்தல், மாநிலங்கள் செயல்படுத்தும் மக்கள் நலத்திட்டங்களில் தலையிடுதல் ஆகியவை இதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

தொகுதி மறு வரையறை என்ற பெயரில், கூட்டாட்சி முறைமையின் மதிப்பை சீர்குலைக்க கூடும் என்ற நியாயமான கவலையை ஏற்படுத்துகின்றன.

தமிழ்நாடு, கேரளா, தெலுங்கானா, கர்நாடகா உள்ளிட்டவை, வட மாநிலங்களுடன் ஒப்பிடும்போது இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் வரி வருவாய்க்கு வட இந்திய மாநிலங்களை விட அதிக பங்களிப்பை வழங்குகின்றன.

ஆனால் வாக்காளர் எண்ணிக்கையை மட்டும் விகிதாச்சார அடிப்படையில் கணக்கிடும் போது, நாடாளுமன்றத்தில் அவர்களது அரசியல் பிரதிநிதித்துவம் ஆபத்துக்குள்ளாகிறது.

இது பொருளாதார அநீதிக்கு இட்டுச் செல்லும். சுகாதாரம், கல்வி மற்றும் சமூக உள்கட்டமைப்பை மேம்படுத்துவதில் முன்னணியில் நிற்கும் மாநிலங்கள், கண்மூடித்தனமாக மக்கள் தொகையைப் பெருக்காமல் கட்டுப்படுத்தியதற்காக தண்டிக்கப்படும்.

தொகுதி மறு வரையறை செய்யும்போது, இத்தகைய அபாயங்கள் ஏற்படாமல், அரசின் வழிகாட்டுதலை ஏற்று மக்கள் தொகையை கட்டுப்படுத்தியுள்ள மாநிலங்கள் தண்டிக்கப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

எனவே மறுவரையறை சீர்திருத்தம் செய்யும் போது, மக்கள் தொகையை மட்டும் கணக்கில் கொள்வது சரியல்ல.

பொருளாதார பங்களிப்பு, வளர்ச்சி, சாதனைகள், நிர்வாக வெற்றி ஆகியவையும் காரணிகளாகக் கருதப்பட வேண்டும்.

தொகுதி மறுவரையறை சீர்திருத்தம் அனைத்து மண்டலங்களும் தற்போது சுற்றுள்ள நாடாளுமன்ற தொகுதி உறுப்பினர் சதவீதம் குறைக்கப்படாமல், சமத்துவத்தையும் மரியாதையையும் உறுதி செய்ய வேண்டும்.

அனைத்து மாநிலங்களின் நலன்களைப் பாதுகாக்கும் அதே வேளையில் சமமான பிரதிநிதித்துவத்தை உறுதி செய்யும் ஒரு கட்டமைப்பு நீதி மற்றும் ஜனநாயகத்தின் கொள்கைகளை நிலை நிறுத்த வேண்டும். இந்தியாவின் வலிமை அதன் பன்முகத்தன்மையில் உள்ளது. இந்த அளவீடுகளைச் சாய்க்கும் மறுவரையறை சீர்திருத்தம், நாட்டின் முன்னேற்றத்தில் முக்கிய பங்கு வகித்த மாநிலங்களை அந்நியப்படுத்தி விடும். இந்த அபாயம் தடுக்கப்பட வேண்டும்.

**இந்தியன் எக்ஸ்பிரஸ், மார்ச் 22 இதழில் வெளியான கட்டுரை**

**தமிழில் டி.எம்.மூர்த்தி**

## 30 ஆண்டுகளுக்கு ஒத்தி வைக்க வேண்டும்!

### கே.சுப்பராயன் எம்பி கோரிக்கை



தொகுதி மறு வரையறைச் சீரமைப்பை இன்னும் 30 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்க வேண்டும் என்ற கோரிக்கையை மக்களவையில் 18.03.2025 அன்று விதி 377 இன் கீழ் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கே. சுப்பராயன் எம்.பி எழுப்பினார்.

2026 க்கு அப்பால் 30 ஆண்டுகளுக்குத் தொகுதி மறுவரையறை சீரமைப்பை ஒத்திவைக்க வேண்டும். மக்கள்தொகை அடிப்படையில் எல்லை நிர்ணயம் செய்வதில் உள்ள குறைபாடுகள் மற்றும் நியாயமின்மை குறித்து விவாதிக்க வேண்டும். அடுத்த பொதுத் தேர்தல் 2026 ஆம் ஆண்டுக்குள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படும் எல்லை நிர்ணயத்தின் அடிப்படையில் நடத்தப்பட உள்ளது. எல்லை நிர்ணயம் தென் மாநிலங்களான தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா, தெலுங்கானா மற்றும் ஆந்திரப் பிரதேசத்தில் இடங்களைக் குறைக்க வழிவகுக்கும் என்று அஞ்சப்படுகிறது.

ஏனெனில் இந்த மாநிலங்கள் சிறந்த பொருளாதாரத் தரத்தை அடைந்து மக்கள்தொகை கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை வெற்றிகரமாகச் செயல்படுத்தியுள்ளன. மக்கள்தொகை அடிப்படையில் எல்லை நிர்ணயம் செய்யப்படும்போது, தென் மாநிலங்களை விட, வட மாநிலங்கள் நாடாளுமன்றத்தில் அதிக இடங்களைப் பெறும். சமமான பிரதிநிதித்துவம் என்ற போர்வையில், எல்லை நிர்ணயப் பயிற்சி செயல்முறையைத் திசைதிருப்பும் மற்றும் மக்கள்தொகை கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை வெற்றிகரமாகச் செயல்படுத்திய தென் மாநிலங்களுக்கு அநீதி விளைவிக்கும்.

எனவே, 2026 க்குப் பிறகு 30 ஆண்டுகளுக்கு எல்லை நிர்ணயச் செயல்முறையை ஒத்திவைக்குமாறும், 1971ன் விகிதாசார விகிதத்தைப் பராமரிக்க அரசியலமைப்பைத் திருத்துமாறும், மக்கள்தொகை அடிப்படையில் எல்லை நிர்ணயம் செய்வதில் உள்ள குறைபாடுகள் மற்றும் நியாயமின்மை குறித்து விவாதிக்குமாறும் நான் அரசாங்கத்தை வலியுறுத்துகிறேன்.

---

5 ஆம் பக்கத் தொடர்ச்சி

நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பட்டாக்களை வகைமாற்றம் செய்து மாவட்ட அளவில் ஒரு குழு அமைத்து அந்த பட்டாக்களை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வன உரிமைச் சட்டம் 2006 நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு இன்றைக்கு பழங்குடியின மலைவாழ் மக்கள் காலகாலமாக குடியிருக்கின்ற வீடுகளுக்கும் தலைமுறை தலைமுறையாக சாகுபடி செய்யும் நிலங்களுக்கும் பட்டா வழங்கப்பட வேண்டும். ஆனால் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 10000 மனுக்கள் வழங்கப்பட்டு அவற்றின் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் உள்ளது. ஆகவே வன உரிமைச் சட்டத்தை கறாராக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அரசின் பல்வேறு துறைகளில் உள்ளாட்சி, நகராட்சி நிர்வாகம், குடிநீர் வழங்கல், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, சமூக நலத்துறை, சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஊழியர்கள், போக்குவரத்து துறை, டாஸ்மாக் பணியாளர்கள் அனைவரும் 10 ஆண்டுகளுக்கும் மேலாக ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் அவர்களுக்கு பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டும்.

மேலும் உள்ளாட்சி மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறையில் குறைந்தபட்ச ஊதியமாக ரூபாய் 2500 யிலும் அதிகபட்சமாக ரூபாய் 5000 யிலும் பணியாளர்கள் இன்றைக்கு பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு எல்லோருக்கும் எல்லாம் என்று சமூக நீதி அடிப்படையில் செயல்படுகின்ற நமது அரசு அவர்கள் கண்ணியமாக வாழ்வதற்கு குறைந்தபட்சமாக ரூபாய் 16,500 ஊதியத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு தனியார் நிறுவனங்களில் இந்தியாவிலேயே அதிக அளவிலான தொழிற்சாலைகளை கொண்ட மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. உற்பத்தி திறனில் இரண்டாம் இடத்தில் இருக்கிறது. தமிழ்நாட்டில் உள்ள தொழில் நிறுவனங்களில் வெளி மாநிலத்தைச் சேர்ந்த இளைஞர்கள் தான் அதிக அளவில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். எனவே தமிழ்நாட்டில் சிறந்த 75% தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்கும் படியான சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று சமீப காலமாக ஜாதி மறுப்பு திருமணம் செய்யக்கூடியவர்களை அவர்களுடைய உறவினர்களோ பெற்றோர்களோ அல்லது ஜாதி வெறியர்களால் ஆணவப் படுகொலை செய்யப்படுகிறார்கள். அவர்களைப் பாதுகாப்பதற்கான தனிச் சட்டம் இயற்றப்பட வேண்டும்.

இன்றைக்கு மைக்ரோ பைனான்ஸ் நிறுவனங்கள் அடாவடி வசூல் செய்கின்றனர் இதனால் தொடர்ந்து தற்கொலைகள் ஏற்படுகின்றன. இன்றைக்கு கர்நாடக மாநிலத்தில் மைக்ரோ பைனான்ஸ் நிறுவனங்கள் அடாவடி வசூல் செய்வதை தடை செய்திருக்கிறார்கள். அதேபோன்று தமிழ்நாட்டிலும் அந்த மைக்ரோ பைனான்ஸ் நிறுவனங்களுக்கு கடிவாளம் போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு பள்ளிகளில் ஜாதி வன்மம் அதிகரித்து இருக்கிறது அதற்காக ஓய்வு பெற்ற நீதி அரசர் கே சந்துரு அவர்கள் தலைமையில் ஒரு ஆணையம் அமைக்கப்பட்டது. அந்த ஆணையத்தின் பரிந்துரைகளை பெற்று பள்ளிகளில் நடைபெறுகின்ற வன்மங்களுக்கு நாம் முடிவு காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல தூத்துக்குடி துப்பாக்கி சூடு சம்பவம் குறித்து நீதி அரசர் அருணா ஜெகதீசன் தலைமையில் ஒரு ஆணையம் அமைக்கப்பட்டது. அதனுடைய பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டனவா?

அதேபோல அம்மையார் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் மரணத்தின் சந்தேகம் குறித்து விசாரிக்க ஆறுமுகசாமி தலைமையில் ஒரு ஆணையம் அமைக்கப்பட்டது. அதனுடைய பரிந்துரைகள் பெறப்பட்டது அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து இந்த அவையில் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல பண்ணைச்சாரா கடன்களுக்கு வட்டி ஒன்பது சதவீதத்தில் இருந்து 6 சதவீதமாக குறைக்கப்பட வேண்டும். நெல்லுக்கு ஊக்கத்தொகை உயர்த்தப்பட்டிருக்கிறது. கரும்பிற்கும் ஊக்கத்தொகை ரூபாய் 349 ஆக உயர்த்தி வழங்கப்பட்டிருக்கிறது. விவசாயிகளுடைய கோரிக்கை ஒரு டன் கரும்பிற்கு ரூபாய் 4000, நெல்லுக்கு ரூபாய் 2500 வழங்க வேண்டும் என்ற கோரிக்கை இருக்கிறது. அவற்றையும் அரசு கவனிக்க வேண்டும்.

நிதிநிலை அறிக்கையில் பயிர் காப்பீட்டுக்காக ரூபாய் 8041 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அந்தக் காப்பீடு தனியாருக்கு வழங்காமல் அரசே ஏற்று நடத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

# தி.க.சி. எனும் இலக்கிய ஜனநாயகவாதி



வேலாயுத முத்துக்குமார்

**சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியில் வடிவும், பொலிவும், வேகமும் பெற்றிருந்த மக்கள் இலக்கிய பேரெழுச்சியின் வீரியமிக்க மூத்த சுடர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர் தி.க.சி என்று அறியப்படுகின்ற தி.க.சிவசங்கரன்.**

பன்நெடுங்கால இலக்கிய அனுபவத்தை கொண்டிருந்த எழுத்தாளர்கள் சிலரில், தி.க.சி.யைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். நவீன இலக்கிய அபிவிருத்தியானது திட்டவட்டமான முற்போக்குப் பாதையிலேயே செல்ல வேண்டுமென்பது தி.க.சி.யின் எண்ணித் துணிந்த நிலைப்பாடுகளில் ஒன்றாகும். புதிய மனிதனுக்காக புதிய வாழ்க்கைக்காக புதிய கலாச்சாரத்திற்காக, கலை, இலக்கியம் படைக்கப்பட வேண்டும் என ஓங்கி ஒலித்த அவருடைய குரல், காலத்தின் குரலாக இன்றளவும் விஞ்சி நிற்கின்றது.

கவிஞர், சிறுகதையாளர், நாடக ஆசிரியர், கட்டுரையாளர், திரை விமர்சகர், மொழிபெயர்ப்பாளர், இலக்கிய விமர்சகர், திறனாய்வாளர், பத்திரிகையாளர் எனப் பல்வேறு படைப்பிலக்கியத் தளத்தில் செயல்பட்டுவந்த போதிலும்கூட, தமிழிலக்கிய சமூகத்தால் அவர் இலக்கிய விமர்சகராகவே அடையாளப்படுத்தப்பட்டார்.

இலக்கியம் என்பது யதார்த்த வாழ்க்கையிலிருந்து எழுகிறது. அந்த யதார்த்த வாழ்க்கை சமுதாயத்தினால் சமைக்கப் பெறுகிறது. சமுதாயம் இல்லாமல் தனி மனிதன் இல்லை. ஆகவே இலக்கியம் என்பது சமுதாயத்தின் சொத்தாகும் என்று தன்னுடைய இலக்கிய வாழ்வின் ஆரம்பக்காலம் முதலே சொல்லி வந்த தி.க.சி, மார்ச் 30,1925 ஆம் ஆண்டு கணபதியப்பன் பர்வதத்தம்மாள் தம்பதியருக்கு மகனாக, நெல்லை மாவட்டம் சீவலப்பேரி கிராமத்தில் பிறந்தார்.

பள்ளிப்படிப்பிற்குப் பிறகு, 1941இல் நெல்லை இந்துக் கல்லூரியில் தி.க.சி அடியெடுத்து வைத்த போது, பாரதிதாசன், வ.ரா ஆகியோரது படைப்புகளுடன் அவருக்கு பரிச்சயம் ஏற்பட்டது. அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் வெளிக்கொண்டு வந்த ‘ஸ்டூடண்ட்’ என்கிற ஆங்கில இதழையும், தடை செய்யப்பட்டிருந்த மாக்ஸிம் கார்க்கியின் ‘தாய்’ நாவலையும் கல்லூரி நூலகத்திலிருந்து எடுத்து வாசித்தார். கல்லூரிப் பருவக் காலத்திலேயே இடதுசாரி வாலிபர் அமைப்போடும், மாணவர் அமைப்போடும் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டார். இதற்கு காரணமாக விளங்கியவர் சிந்துபூந்துறை சண்முகம் அண்ணாச்சி. 1941ஆம் ஆண்டு நெல்லை மாவட்ட காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்து சிறை சென்ற அவர், அங்கு பொதுவுடைமைத் தத்துவங்களைப் பயின்று, சிறையிலிருந்து வெளிவந்த பின்பு கம்யூனிஸ்ட் தோழராக உருமாறித் தொண்டாற்றத் தொடங்கினார். கட்சியின் மீது கொண்ட ஈடுபாட்டின் காரணமாக தமது சொந்த செலவிலேயே சோவியத் நூல்களை மொழிபெயர்த்து வெளியிட்டார். நெல்லை மாவட்ட ‘ஜனசக்தி’ பத்திரிகையின் முகவராக செயல்பட்ட அவர், தான் சார்ந்திருந்த கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை விளக்க வகுப்புகளையும் நடத்தினார். ‘ஜனசக்தி’ பத்திரிகையையும், அதன் பிரசுரங்களையும் ஆயுதமாகக் கொண்டு, நெல்லையில் பல இளைஞர்களை கம்யூனிஸ்ட் தோழர்களாக்கிய பெருமை சண்முகம் அண்ணாச்சிக்கு உண்டு. நெல்லை சந்திப்பு சிந்துபூந்துறையிலிருந்த அவரது வீடு அரசியல் நூல்களை உள்ளடக்கிய சிறந்த நூலகமாக விளங்கியதால், அந்நூலகத்தை நன்றாக பயன்படுத்திக் கொண்டார் தி.க.சி.

இதே சமயத்தில், நெல்லை நகரத்தைச் சேர்ந்த நண்பர்களுடன் இணைந்து ‘நெல்லை வாலிபர் சங்கம்‘ என்கிற அமைப்பை ஆரம்பித்து நடத்தி வந்தார் தி.க.சி. இச்சங்கத்தை தொடக்கத்தில் விளையாட்டுத்தனமாக ஆரம்பித்தாலும், பின்தொடர்ந்த நாட்களில் பேச்சுக்கலையில் பயிற்சி பெறுவதற்கும், எழுத்துக்கலையில் ஆர்வத்தை வளர்த்துக் கொள்வதற்கும், கலை, இலக்கியம் குறித்து விவாதிப்பதற்கும் அவர் பயன்படுத்திக் கொண்டார். இச்சங்கத்தின் சார்பாக ‘இளந்தமிழன்’ என்கிற கையெழுத்துப் பத்திரிகையை நண்பர்களுடன் இணைந்து நடத்தினார்.

அடிப்படையில் பொதுவுடைமை சித்தாந்தத்தில் ஈடுபாடு கொண்டிருந்த தி.க.சி, அத்தத்துவத்தின் அழகியல் நோக்குடனேயே அனைத்துப் படைப்புகளையும் விமர்சனம் செய்து வந்தார். ரசனையே விமர்சனத்தின் அடிப்படையாக இருந்தாலும், ரசனையுடன் தத்துவார்ந்த சிந்தனையும் இணைகின்ற போது தான் விமர்சனமானது மிக சரியானதாக அமையும் என்கின்ற கருத்தை தன்னுடைய விமர்சனப் பாதையில் அவர் வலியுறுத்தி நின்றதோடு, அதில் பெருத்த வெற்றியையும் கண்டார். விமர்சனம் என்பது ஆக்கப்பூர்வமாக இருக்க வேண்டும். படைப்பாளியைக் கண்டனம் செய்து மட்டம் தட்டி மகிழக்கூடிய அழிவு வேலை விமர்சனம் கூடாது என்பதில் அவர் இறுதிவரையில் உறுதியாக இருந்தார்.

1945இல் தாம்கோஸ் வங்கி பணியாளராக இணைந்த அவ்வருடத்தில், பேராசிரியர் நா.வானமாமலை உடனான அரசியல் இலக்கியத் தொடர்பும், 1947இல் எட்டயபுரம் பாரதி விழாவுக்குப் பிறகான தோழர் ஜீவாவின் தொடர்பும், தி.க.சி.யை ஒரு முற்போக்கு எழுத்தாளனாக, மார்க்சிய அழகியல் படைப்பாளியாக மாற்றின. வங்கிப் பணியில் சேர்ந்த நாள் முதலே வங்கிப் பணியாளர் சங்கம் கட்டுவதில் தீவிரமாக ஈடுபட்டார். தி.க.சி.யை ‘கம்யூனிஸ்ட்’ என அடையாளம் கண்டுகொண்ட வங்கி நிர்வாகம், 1948 நவம்பர் மாதம் அவரை சென்னைக்கு மாற்றி உத்தரவிட்டது.

‘இந்திய நாட்டுக்கு கிடைத்த சுதந்திரம் போலிச் சுதந்திரம் என்றும், நேருவின் ஆட்சி முதலாளித்துவ ஆட்சி என்றும் நேரு அரசாங்கத்தைத் தூக்கி எறிய வேண்டும் என்றும்‘ நாடு தழுவிய போராட்டம் தொடங்கியது. இதன் காரணமாக, நேரு தலைமையிலான இந்திய அரசாங்கம் கம்யூனிஸ்ட் கட்சியைத் தடை செய்தது . அக்காலக்கட்டத்தில் தலைமறைவாக இருந்த கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுக்கும் , தோழர்களுக்கும் ரகசியமாக கடிதங்களை கொண்டு போய் சேர்க்கும் பணியில் ஈடுபட்டிருந்த தோழர்களில் ஏ.எஸ். மூர்த்திக்கும், தி.க.சி.க்கும் கணிசமான பங்குண்டு. கட்சியின் மூத்த தலைவர்கள் கே.பாலதண்டாயுதம், பி.மாணிக்கம் ஆகியோர் தலைமையில் அரசியல் பணிகளை மேற்கொள்ளும் வாய்ப்பையும் தி.க.சி பெற்றார்.



## தி.க.சி. நூற்றாண்டு (1925–2025)

இக்காலத்தில் கட்சிப் பத்திரிகையான ‘ஜனசக்தி’யும் தடை செய்யப்பட்டிருந்த வேளையிலே, தி.க.சி.யினுடைய அறையில் கவிஞர் தமிழ் ஒளி தலைமறைவாக தங்கி இருந்திருக்கிறார். பொதுவுடைமை இயக்க ஏடுகளான ‘முன்னணி’, ‘போரணி’, ‘ஜனயுகம்‘, ‘புதுமை இலக்கியம்‘ ஆகியவற்றின் ஆசிரியர் குழுவில் தமிழ் ஒளியுடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்பையும் அவர் பெற்றிருந்ததோடு, வல்லிக்கண்ணன் ஆசிரியராக இருந்த ‘ஹனுமான்’ இதழிலும், கு.அழகிரிசாமி தொ.மு.சி.ரகுநாதன் பொறுப்பாசிரியர்களாக இருந்த ‘சக்தி’ ஏட்டிலும், சிறுகதை, மொழிபெயர்ப்பு கட்டுரைகள், புத்தக மதிப்புரைகளை எழுதி வந்தார்.

1950இல் மொழிபெயர்ப்புக் கலைக்கு இருந்த முக்கியத்துவத்தை முன்னிறுத்தி, சில நூல்களை தி.க.சி மொழிபெயர்த்தார். ‘காரல் மார்க்ஸ் இல்வாழ்க்கை’ என்கிற கட்டுரையே அவரது முதல் மொழிபெயர்ப்பு நூலாகும். நூல் வடிவம் பெற்ற அவரது படைப்புகளில் இம்மொழிபெயர்ப்பு நூலே முதலாவதாகும். அதே ஆண்டின் இறுதியில் தமிழ்ப் புத்தகாலய அதிபர் கண.முத்தையா அறிவுறுத்தலின் பேரில், சோவியத், சீன நாவல்களையும், மாக்ஸிம் கார்க்கி கட்டுரைகளையும் மொழி பெயர்த்தார் தி.க.சி. அவைகள் முறையே, ‘வசந்த காலத்திலே (மார்ச்1951), சீனத்துப் பாடகன் (நவம்பர்1951), போர் வீரன் காதல் (நவம்பர் 1951) ஆகிய சோவியத், சீன நாவல்களாகவும், மாக்ஸிம் கார்க்கியின் ‘எது நாகரீகம்..? கலாச்சாரத்தைப் பற்றி’ (மார்ச் 1951) ஆகியவை கட்டுரை நூல்களாகவும் தமிழ்ப் புத்தகாலய வெளியீடுகளாக வந்தன. இந்நூல்களுக்கு கிடைத்த அங்கீகாரமே பின்னாட்களில் சென்னையில் சோவியத் செய்தித்துறையில் 25 ஆண்டுகாலங்கள் பணியாற்றுவதற்கான வாய்ப்பை அவருக்குப் பெற்றுத் தந்தன.

மே, 1952 முதல் மே 1962 வரை, தனது வங்கிப் பணியுடன் இயக்கப் பணியாக, அண்ணாச்சி என்றழைக்கப்பட்ட எழுத்தாளர் சிந்துபூந்துறை எஸ்.சண்முகம் அவர்களுடன் இணைந்து ‘நெல்லை பப்ளிஷிங் ஹவுஸ்’ எனும் பதிப்பகத்தையும் நடத்தி வந்தார் தி.க.சி. இப்பதிப்பகம் மூலம் அரசியல் போதனை நூல்களையும், ரஷ்ய, சீன இலக்கிய மொழிபெயர்ப்பு நூல்களையும் அவர்கள் பதிப்பித்து வந்தனர். வ.க., தொ.மு.சி, சிந்துபூந்துறை அண்ணாச்சி ஆகியோர்களின் மொழிபெயர்ப்புகளை இப்பதிப்பகம் வெளியிட்டது.

மணிக்கொடி பரம்பரையைச் சேர்ந்த எழுத்தாளர்களின் சிறுகதைப் படைப்புகளைப் பற்றிய திறனாய்வுக் கட்டுரைகளை ‘தாமரை’யில் அவரெழுதினார். இக்கட்டுரைகள், தமிழிலக்கிய படைப்பாளிகள், விமர்சகர்கள், பதிப்பாளர்கள் மற்றும் வாசகர்களிடையே பெருத்த வரவேற்பை அவருக்குப் பெற்றுத் தந்தன.

19 ஆண்டுகால வங்கிப்பணியை ராஜினாமா செய்துவிட்டு, 1965இல் சோவியத் துறையில் இணைந்த அவர் 1990 வரையில் பணியாற்றினார். இங்கு பணியாற்றிய காலத்திலேயே, ‘தாமரை’யின் பொறுப்பாசிரியராக கடமையாற்றும் பேறையும் அவர் பெற்றார். 1965 முதல் 1972 வரை ‘தாமரை’யின் நூறு இதழ்களுக்கு ஆசிரியராக திகழ்ந்து, நசிவு இலக்கியங்களுக்கு எதிரான இயக்கத்தை தோற்றுவித்தார். ‘வியட்நாம் போராட்டச் சிறப்பிதழ், சிறுகதை சிறப்பிதழ், கரிசல் சிறப்பிதழ், மொழிப்பெயர்ப்பு சிறப்பிதழ்’ என சிறப்பிதழ்களை கொண்டு வந்ததோடு, பல படைப்பாளிகளை அதில் வளர்த்தெடுத்து உருவாக்கி, படைப்பாளிகளின் படைப்பாளியாக அவர் திகழ்ந்தார்.

‘தி.க.சி திறனாய்வுகள்’ (பிப்ரவரி 1993), ‘விமர்சனத் தமிழ்’ (ஏப்ரல் 1993), ‘விமர்சனங்கள்மதிப்புரைகள்பேட்டிகள்’ (டிசம்பர் 1994) ‘மனக்குகை ஓவியங்கள்’ (மார்ச் 1999) ‘தமிழில் விமர்சனத்துறை சில போக்குகள்’ (டிசம்பர் 2001) ஆகியவை அவர் எழுதி வெளிவந்த நூல்கள். இதில் ‘விமர்சனங்கள்மதிப்புரைகள்பேட்டிகள்’ நூலே அவருக்கு 2000ஆம் ஆண்டிற்கான சாகித்ய அகாடமி விருதைப் பெற்றுத் தந்தது.

படைப்பாளிகள் இலக்கிய ஞானத்தை பெறுவது முக்கிய கடமையென்றும், அவர்களது படைப்புகள் தேசிய மற்றும் சர்வதேச தரத்துக்கு இணையாகத் திகழ வேண்டும் என்கிற உன்னத லட்சியத்தோடும் செயல்பட வேண்டும் என்றும் தனது ஆரம்ப காலத்திலிருந்தே வலியுறுத்தி வந்தவர் தி.க.சி. ஒரு படைப்பானது பொதுவாக வாழ்க்கையில் காணப்படும் யதார்த்த நிலைகளையும், பிரச்சினைகளையும் சித்திரிப்பதை தவிர அதை விமர்சனப்படுத்துவதாகவும் அமைதல் வேண்டும். ஒரு படைப்பாளியின் படைப்பில், கலையழகு (Artistic Beauty), உலகளாவிய மனிதகுல நேயம் (Universal Humanism), சமூக நோக்கு (Social Outlook) ஆகிய மூன்று அம்சங்கள் நிறைந்திருக்க வேண்டும் என்று அடிக்கடிக் குறிப்பிட்டுச் சொல்லி வந்தார் தி.க.சி. இவையனைத்தையும் தாண்டி ஒரு படைப்பாளி அடிப்படையில் சிறந்த மனிதனாகவும் இருக்க வேண்டும் என்பதை தீவிரமாகவே வலியுறுத்தி வந்தவர். இலக்கிய வாழ்க்கையைப் பொறுத்தவரையில் அவரது இலக்கியச் சிந்தனையும், எழுத்தும், களப்பணியும், சமுதாய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு பயன்பட்டிருக்கிறது என்பதை கருத்தில் கொண்டு பார்க்கின்ற போது, சொந்த வாழ்க்கையிலும், இலக்கிய வாழ்க்கையிலும் தி.க.சி ஒரு பெருவாழ்வு வாழ்ந்த கலைஞனாகவே வாழ்ந்து சென்றிருக்கிறார்.

**தொடர்புக்கு: 9600501847**

## முதல் கதை மற்றும் கவிதை

தன் சுயவாழ்வு சார்ந்த அகப்புறத் தூண்டுதல்களால் சற்று தீவிரமான வாசிப்பு அனுபவத்தைக் கொண்டிருந்த தி.க.சி.யை வ.ரா.வின் நடைச்சித்திரங்கள் எழுதத் தூண்டின. அதன் பாணியில் சில நடைச்சித்திரங்களை எழுதி, அப்பொழுது ‘இதய ஒலி’ கையெழுத்து பத்திரிகையின் ஆசிரியராக இருந்த வல்லிக்கண்ணனிடம் கொடுக்க, சில நடைச்சித்திரங்களை ‘இதய ஒலி’யில் வெளியிட்டதோடு, அதிலொன்றான ‘வண்டிக்காரன்’ சித்திரத்தை நாரண துரைக்கண்ணனை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த ‘பிரசண்ட விகடன்’ இதழுக்கு அனுப்பி வெளியிடச் செய்தார். அதுவே அவரது முதல் கதையாயிற்று. அதே போல், தி.க.சி.யின் முதல் கவிதையான ‘உலவும் கவிதை’ கு.ப.ரா.வை ஆசிரியராகக் கொண்டு திருச்சி, துறையூரிலிருந்து வெளிவந்த ‘கிராம ஊழியன் ஜுலை, 1.15.1944’ இதழிலே வெளியானது.

1944இல் வல்லிக்கண்ணன் ‘கிராம ஊழியன்’ இதழாசிரியராகப் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, அவ்விதழில் தொடர்ந்து கவிதைகளையும், மொழிபெயர்ப்புக் கட்டுரைகளையும், புத்தக விமர்சனங்களையும், திரை விமர்சனங்களையும் தி.க.சி எழுதி வந்தார். மு.வ.வினுடைய நூல்களை படித்து விட்டு, அந்நூல்கள் குறித்த விமர்சனங்களை ‘ஜனசக்தி’யில் தொடராக எழுதினார்.

# நீதிபதி வீட்டில் கட்டு



த.லெனின்

**பாபர் மசூதி வழக்கின் போது அப்போதைய தலைமை நீதிபதி சந்திர சூட் கடவுளிடம் பிராத்தித்த பின்பு தான் நீதி வழங்கியதாகக் கூறியிருந்தார். ஏழைகளின் கடைசிப் புகலிடமாக நீதிமன்றங்கள்தான் நம்பிக்கை தருகின்றன. எனவே தான் நீதி வழங்குவோர் கடவுளாகக் கொண்டாடப்படுகின்றனர்.**

ஆனால் டெல்லியில் ஒரு நீதிபதியின் வீட்டில் தீப்பிடித்து விட அதை அணைக்கச் சென்ற தீயணைப்புத் துறையினர் அதிர்ச்சியடைந்து விட்டனர். கட்டுக் கட்டாக எரிந்த பணங்களோடு சாக்கில் கட்டப்பட்டிருந்தத காட்சி 'காசேதான் கடவுள்' என்பதை உணர்த்திற்று.

டெல்லி உயர் நீதிமன்ற நீதிபதி யஷ்வந்த் வர்மாவுக்கு எதிரான குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து, உச்ச நீதிமன்றம் கடந்த, மார்ச் 22 அன்று அது தொடர்பான அறிக்கையைப் பொது வெளியில் வெளியிட்டுள்ளது.

எரிந்த நிலையில் இருந்த பணம் தொடர்பாக டெல்லிக் காவல்துறையால் வழங்கப்பட்ட புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களும் அந்த அறிக்கைகளில் உள்ளன. எனினும், அந்த அறிக்கையின் சில பகுதிகள் கறுப்பு நிறத்தில் மறைக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக, முதல் கட்ட விசாரணை நடத்துமாறு டெல்லி உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி டி.கே.உபத்யாய்க்கு உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்சீவ் கண்ணா உத்தரவிட்டார். இந்த விவகாரம் குறித்து 'விரிவான விசாரணை' நடத்தப்பட வேண்டும் என்று தலைமை நீதிபதி சஞ்சீவ் கண்ணாவுக்குக் கடிதம் மூலம் தெரிவித்தார் டி.கே. உபத்யாய்.

அதேசமயம், தானோ அல்லது தன்னுடைய குடும்பத்தினரோ சேமிப்பு அறையில் ஒருபோதும் பணத்தை வைத்ததில்லை என்றும் தனக்கு எதிரான சதி இது என்றும் நீதிபதி யஷ்வந்த் வர்மா மறுப்பு தெரிவித்தார்.

### டெல்லி உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி அறிக்கை

மார்ச் 15 அன்று, நீதிபதி யஷ்வந்த் வர்மாவின் வீட்டில் தீ பரவியதாக, டெல்லிக் காவல் ஆணையரிடமிருந்து தனக்கு அழைப்பு வந்ததாக, டெல்லி உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி டி.கே.உபத்யாய் தன் அறிக்கையில் தெரிவித்துள்ளார். காவல் ஆணையர் அதில் என்ன சொன்னார் என்பது அறிக்கையில் கறுப்பு நிறத்தால் மறைக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் 15 அன்று காலையில் நீதிபதி வர்மா வீட்டின் சேமிப்பு அறையில் இருந்து எரிந்த நிலையில் சில பொருட்கள் கண்டெடுக்கப்பட்டதாக, அங்கிருந்த பாதுகாப்புக் காவலர்கள் தெரிவித்ததாக நீதிபதி டி.கே. உபத்யாய் கூறியுள்ளார்.

அதன்பிறகு, இதுகுறித்து விசாரிக்க நீதிபதி யஷ்வந்த் வர்மாவின் வீட்டுக்குத் தன்னுடைய செயலாளரை அனுப்பியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

காவல் ஆணையரால் அனுப்பப்பட்ட சில அறிக்கைகளையும் டி.கே.உபத்யாய் தன் அறிக்கையுடன் இணைத்துள்ளார். அதில், சேமிப்பு அறையில் பாதி எரிந்த நிலையில் இருந்த 4 அல்லது 5 சாக்கு மூட்டைகளில் இருந்து பணம் கண்டெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தான் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில், அந்த வீட்டில் வசிப்பவர்கள், வேலையாட்கள் மற்றும் தோட்டக்காரர்கள் மட்டும்தான் சேமிப்பு அறைக்குச் செல்ல முடியும் என டி.கே.உபத்யாய் கூறியுள்ளார். எனவே, இதுதொடர்பாக மேலதிக விசாரணை வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

டி.கே.உபத்யாயிடம் சில படங்கள் மற்றும் வீடியோக்களையும் காவல் ஆணையர் பகிர்ந்துள்ளார். அவற்றில், அந்த அறையில் ரூபாய் நோட்டுகள் எரிந்த நிலையில் இருந்ததைக் காண முடிகிறது.

அந்தப் படங்கள் மற்றும் வீடியோக்களை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்சீவ் கண்ணாவுக்கு அனுப்பியதாகவும் நீதிபதி யஷ்வந்த் வர்மாவுக்குக் காட்டியதாகவும் தெரிவித்துள்ளார் டி.கே.உபத்யாய்.

உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் டெல்லி உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி ஆகியோர் யஷ்வந்த் வர்மாவிடம் கீழ்க்கண்ட 3 கேள்விகளை முன்வைத்துள்ளனர்.

1) அந்தப் பணம் எப்படி சேமிப்பு அறைக்கு வந்தது?

2) அந்தப் பணத்தின் ஆதாரம் என்ன?

3) மார்ச் 15 அன்று காலை அந்தப் பணம் எப்படி அகற்றப்பட்டது?

இதற்கு நீதிபதி யஷ்வந்த் வர்மா அளித்துள்ள பதிலில், வீட்டில் தீப்பற்றிய போது தான் மத்தியப் பிரதேசத்தில் இருந்ததாகவும் மார்ச் 15 அன்று மாலை தான் டெல்லி திரும்பியதாகவும் கூறியுள்ளார். வீட்டில் தீ பரவிய போது தனது மகளும், பணியாட்களும் வீட்டில் இருந்ததாகவும் ஆனால் தீ அணைக்கப்பட்ட பிறகு அவர்கள் சேமிப்பு அறையில் பணம் எதையும் பார்க்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

டெல்லி உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி தன்னிடம் வீடியோவைக் காட்டிய பிறகே, எரிந்த நிலையில் இருந்த பணம் குறித்து தனக்குத் தெரியவந்ததாக யஷ்வந்த் வர்மா குறிப்பிட்டுள்ளார்.

இந்த முழு வழக்கும் தனக்கு எதிரான சதி என அவர் தெரிவித்துள்ளார். பத்தாண்டுகளுக்கும் மேலாக உயர் நீதிமன்ற நீதிபதியாக இருந்து உருவாக்கிய என்னுடைய புகழை இந்தச் சம்பவம் சிதைத்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார். தான் நீதிபதியாக இருந்த காலம் முழுவதையும் விசாரிக்கலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

### உள்மட்ட விசாரணைக் குழு

இந்த விவகாரம் இந்தியத் தலைமை நீதிபதியால் அமைக்கப்பட்ட குழுவிடம் வழங்கப்படுள்ளது. நீதிபதி யஷ்வந்த் வர்மாவின் கடந்த ஆறு மாத கால போன் பதிவுகளைத் தர வேண்டும் எனக் காவல்துறையிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அவர்





தன்னுடைய மொபைல் போனிலிருந்து எந்தவொரு தரவுகளையும் அழிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தலைமைநீதிபதி அமைத்துள்ள குழுவில் பஞ்சாப் மற்றும் ஹரியாணா உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி ஷீல் நாகு, ஹிமாச்சலப் பிரதேச உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி ஜி.எஸ்.சாந்த்வாலியா மற்றும் கர்நாடகா உயர் நீதிமன்ற நீதிபதி அனு சிவராமன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

1999ல் உச்ச நீதிமன்றத்தில் உள்மட்ட விசாரணைக் குழு அமைக்கப்பட்டது. அதன்படி, உயர் நீதிமன்ற அல்லது உச்ச நீதிமன்ற நீதிபதிக்கு எதிரான புகாரை விசாரிக்க மூன்று நீதிபதிகள் அடங்கிய குழு அமைக்கப்பட வழியமைக்கிறது.

விசாரணையின் அடிப்படையில், நீதிபதி குற்றமற்றவர் என்றோ அல்லது அந்த நீதிபதியைப் பதவி விலகுமாறோ அக்குழு கூறும். அவர் பதவி விலக மறுத்தால், அவரைப் பதவி நீக்கம் செய்யுமாறு பிரதமர் மற்றும் குடியரசு தலைவருக்கு அக்குழு தகவல் அளிக்கும்.

சில சந்தர்ப்பங்களில், நீதிபதிக்கு எதிராக சிபிஐ விசாரணை நடத்துமாறும் தலைமை நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

உயர்நீதிமன்ற நீதிபதி மீது நடவடிக்கை

---

## மார்ச் 23 பகத்சிங் நினைவு நாளில்

# தமிழ்நாடு முழுவதும் ஏஐஒய்எப்


**விடுதலைப் போராட்ட மாவீரர்கள் பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் நினைவு நாளில், தமிழ்நாடு முழுவதும், அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற சார்பில், இரத்த தான முகாம் 39 மையங்களில் நடைபெற்றது. இதில் 2035 பேர் இரத்தம் அளித்தனர்.**

**வடசென்னை:** எண்ணூர் நெடுஞ்சாலையில் உள்ள இசிஐ மேனிலைப்பள்ளியில் இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் ஆ.சுரேஷ், மாணவர் பெருமன்ற மாநிலத் துணைச் செயலாளர் இரா.ராமசாமி தலைமையில், கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கிவைத்தார்கள். இதில் 189 தோழர்கள் இரத்ததானம் செய்தனர்.

**திருச்சி மாநகர்** மாவட்டம், தில்லை நகர் கி.ஆ.பெ.விசுவநாதம் தொடக்கப்பள்ளியில், இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் எம்.செல்வகுமார், மாணவர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் ஜெய்லானி தலைமையில், நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர் கே.என்.நேரு தொடங்கி வைத்தார். மாணவர் பெருமன்றத்தின் மாநிலத் தலைவர் க.இப்ராகிம் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இதில் 51 தோழர்கள் இரத்ததானம் செய்தனர்.

**சேலம்** மோகன் குமாரமங்கலம் மருத்துவக்

39 மையங்களில் 2035 பேர் இரத்தம் அளித்தனர்



கல்லூரி மருத்துவமனையில், இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் இரா.ரமேஷ், மாணவர் பெருமன்றத்தின் மாவட்டச் செயலாளர் பா.நேதாஜி தலைமையில் நடைபெற்ற முகாமினை, சுற்றுலா வளர்ச்சித் துறை அமைச்சர் இரா.ராஜேந்திரன் துவக்கி வைத்தார். 104 தோழர்கள் இரத்ததானம் செய்தனர்.

**திருப்பூர் மாநகர்** குமார் நகரில் மாநில துணைச் செயலாளர் எஸ்.தெய்வசிகாமணி, மாநகர் மாவட்டச் செயலாளர் ஆ.அரவிந்த் குமார், மாணவர் பெருமன்றத்தின் புறநகர் மாவட்டச் செயலாளர் முத்துக்குமார், மாநகர் மாவட்டச் செயலாளர் மிதிலேஷ் தலைமையில், நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன், சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், திருப்பூர் மாநகர மேயர் நா.தினேஷ்குமார் தொடங்கி வைத்தார்கள். 33 தோழர்கள் இரத்ததானம் செய்தனர்.

**ஈரோடு** மாணிக்கம் பாளையத்தில் இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் நவீன் குமார், மாணவர் பெருமன்ற மாவட்டச் செயலாளர்



அமுல் உன்னி கிருஷ்ணன் தலைமையில், மக்கள் சிந்தனைப்பேரவை தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் தொடங்கி வைத்தார். 52 தோழர்கள் இரத்ததானம் செய்தனர்.

**நாமக்கல்** குமாரபாளையத்தில் இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் சாதிக், மாணவர் பெருமன்றத்தின் மாவட்ட தலைவர் புவனேஷ் தலைமையில், காவல் ஆய்வாளர் டி.ஏ.தவமணி தொடங்கி வைத்தார். இதில் 51 தோழர்கள் இரத்ததானம் செய்தனர்.

**திருப்பத்தூர்** அரசு தலைமை மருத்துவமனையில் இளைஞர் பெருமன்ற

# ..., கட்டாக பணம்!



எடுக்குமாறு சிபிஐயிடம் உச்சநீதிமன்ற நீதிபதி கேட்டுக்கொண்ட நிகழ்வும் நடந்துள்ளது.

2018 ஆம் ஆண்டில், அலகாபாத் உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி எஸ்.என்.சுக்லாவுக்கு எதிராக உள் விசாரணைக் குழுவின் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன. அதன் பிறகு, அவர் ராஜினாமா செய்ய மறுத்துவிட்டார்.

பின்னர் 2021 ஆம் ஆண்டு, ஊழல் குற்றச்சாட்டின் பேரில் சிபிஐ அவருக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது.

பஞ்சாப் மற்றும் ஹரியாணா உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி நிர்மல் யாதவ் மீதும் சிபிஐ ஊழல் குற்றச்சாட்டுகளைச் சுமத்தியுள்ளது. அவர் மீதான வழக்கு இன்னும் நிலுவையில் உள்ளது.

முன்னதாக மார்ச் 2003 இல், முன்னாள் டெல்லி உயர் நீதிமன்ற நீதிபதி ஷமித் முகர்ஜி ஊழல் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார்.

### வழக்கறிஞர் சங்கப் போராட்டம்!

டெல்லி உயர் நீதிமன்ற நீதிபதி யஷ்வந்த் வர்மாவை, அலகாபாத் உயர் நீதிமன்றத்திற்கு மாற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, அலகாபாத் உயர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கம் மார்ச் 25 அன்று காலவரையற்ற வேலைநிறுத்தத்தைத் தொடங்கியது.

ஊழலில் ஈடுபட்டவர்களுக்கு எதிராகவும், வெளிப்படைத்தன்மை இல்லாத ஒரு அமைப்புக்கு எதிராகவுமே எங்கள் போராட்டம். இப்போதைக்கு எங்கள் கோரிக்கை, உச்ச நீதிமன்ற கொலீஜியம் தனது முடிவைப் மறுபரிசீலனை செய்து இடமாற்ற உத்தரவைத் திரும்பப் பெற வேண்டும் என்பதே என்று கூறியுள்ளது.

அத்துடன் கடந்த காலங்களில் இந்த நீதிபதி அளித்த தீர்ப்புகள் அனைத்தையும் மறு பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தி உள்ளது. அபரிமிதமான பணம் கண்டெடுக்கப்பட்டுள்ளதால் உடனடியாக அவர் மீது முதல் தகவல் அறிக்கை பதிந்து குற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறியுள்ளது.

### கொலிஜியம்!

இந்தியாவின் நீதி பரிபாலன் முறையில் நீதிபதிகளுக்கு என்று பல சிறப்பு உரிமைகள் உண்டு. ஆனாலும் அவர்கள் அரசமைப்புச் சட்டத்திற்கு மேலானவர்கள் அல்ல. நீதிபதிகளைத் தேர்வு செய்வது கொலிஜியம் ஆகும். 1993 ஆம் ஆண்டு இந்த முறை நடைமுறைக்கு வந்தது, உச்ச நீதிமன்றத்தின் 5 மூத்த நீதிபதிகள், உச்ச நீதிமன்றம் மற்றும் 25 உயர் நீதிமன்றங்களுக்கு நீதிபதிகளை நியமித்தல், இடமாற்றம் செய்தல் மற்றும் பதவி உயர்வு ஆகியவற்றை பரிந்துரைக்கின்றனர்.

அனைத்து நீதிபதிகளும் உயர்சாதியைச் சார்ந்தவர்களாகவே இருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு எழுந்த போதும் அதை உள்வாங்க இது மறுத்தது. அத்தோடு நீதிபதிகளின் நியமனத்தில் அனைத்துச் சமூகங்களுக்கும் வாய்ப்பளித்தல் வேண்டும் என்ற கோரிக்கைகள் எல்லாம் இருந்த போதும் தற்போதைய நடைமுறை அதை நிறைவேற்ற தவறிவிட்ட குற்றச்சாட்டுக்கு ஆளாகியுள்ளது.

இந்நிலையில் மாநிலங்களவைத் தலைவர் ஜே.பி. நட்டா, இந்தப் பிரச்சனைகள் மீது ஒரு தீர்வை எட்டுவதற்காக அனைத்துக் கட்சித் தலைவர்களுடன் நேரில் சந்தித்துப் பேச உள்ளதாகக் கூறியுள்ளார். உச்ச நீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட்ட தேசிய நீதிபதிகள் நியமன ஆணையம் (ழியிகிசி) சட்டம் குறித்த தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துமாறு மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே அரசாங்கத்தை வலியுறுத்துகிறார். ஏனெனில் இந்தச் சந்தடி சாக்கில் மாநிலங்களவை தலைவர் ஜக்தீப் தன்கர் கூறி வரும் கருத்துகள் பெறும் குழப்பத்தை ஏற்படுத்தும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

நீதித்துறை மீது ஒவ்வொரு குடிமகனுக்கும் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டியது அரசியல் அமைப்புச் சட்டத்தின் கடமையாகும். நீதித்துறை மீது மக்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டால் அது அரசியல் அமைப்புச் சட்டக் கொள்கைகளை அழிப்பதாகிவிடும். நீதிக்கான போராட்டம் மக்களால்தான் நடத்தப்பட வேண்டும். அந்தப் போராட்டமே நீதியை பெற்றுத் தரும்!

தொடர்புக்கு: 9444481703

# அறிவியல் கொள்கையை நாட்டிலேயே முதலாவதாக அமலாக்கியது அச்சுதமேனன் அரசு! உண்மையை மறைக்காதீர்!

## மாநிலங்களவையில் சந்தோஷ்குமார் எம்.பி சாடல்!



அறிவியல் கொள்கையை அமல்படுத்துவதில் நாட்டிலேயே முதன்மையானது கேரளா.

அறிவியல் கொள்கை அறிக்கைகளில் உள்ள முரண்பாடுகள் குறித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் பி.சந்தோஷ் குமார் விளக்கம் கேட்டிருக்கிறார்.

இந்தியாவில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கொள்கையை அமல்படுத்திய முதல் மாநிலம் எது என்பது பற்றிய ஒன்றிய அரசின் பதில்களில் உள்ள முரண்பாடுகளை மாநிலங்களவையில் பி.சந்தோஷ் குமார் எம்.பி எழுப்பி விளக்கம் கோரினார்.

நாடாளுமன்றத்தில் வழங்கப்பட்ட இரண்டு தனித்தனி பதில்களில், அரசாங்கம் முரண்பட்ட தகவல்களை வழங்கியுள்ளது.

ஜூலை 21, 2022 அன்று பதிலளிக்கப்பட்ட நட்சத்திரமிடப்படாத கேள்விக்கு (எண்.611) பதிலளிக்கும் விதமாக, 2018 ஆம் ஆண்டில் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புதுமைக் கொள்கையை அறிமுகப்படுத்திய முதல் மாநிலம் குஜராத் என்று ஒன்றிய அரசு கூறியுள்ளது.

ஆனால், மார்ச் 13, 2025 அன்று நட்சத்திரமிடப்படாத மற்றொரு கேள்விக்கு (எண்.1725) அளித்த பதிலில், 1974 ஆம் ஆண்டில் அப்போதைய சிபிஐ தலைவரும் கேரள முதல்வருமான சி.அச்சுத மேனனின் தலைமையில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கொள்கையை அறிமுகப்படுத்திய முதல் மாநிலம் கேரளா என்பதை அரசாங்கம் சரியாக ஒப்புக்கொண்டது. அதிகாரப்பூர்வ அறிக்கைகளில் உள்ள இந்த வெளிப்படையான முரண்பாடு மிகவும் கவலையளிக்கிறது.

பாராளுமன்றத்தில் தவறான தரவுகளை வழங்குவது ஒரு தீவிரமான பிரச்சினையாகும். குறிப்பாக நாட்டின் கல்வி, ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்தை வடிவமைப்பதில் முக்கியப் பங்கு வகிக்கும் அறிவியல் கொள்கை போன்ற முக்கியமான ஒரு விஷயத்தில். 1974 ஆம் ஆண்டு முதல் அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கொள்கையை அறிமுகப்படுத்தியதன் மூலம் கேரளா குறிப்பிடத்தக்க தொலைநோக்கை வெளிப்படுத்தியது. இது மற்ற மாநிலங்களுக்கு ஒரு முன்னுதாரணமாக அமைந்தது. ஒன்றிய அரசு ஒரு நிலையான மற்றும் துல்லியமான வரலாற்றுப் பதிவை முன்வைக்கத் தவறியது. அதன் பதில்களின் நம்பகத்தன்மையை ஐயத்துக்கு உட்படுத்துகிறது. அது மட்டுமல்ல, இந்தியாவின் அறிவியல் கொள்கைப் பாதையைத் தவறாக சித்தரிக்கிறது.

இந்த முரண்பாட்டின் வெளிச்சத்தில், ஒன்றிய அரசு தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்த மாநிலங்களவையில் அரை மணி நேர விவாதத்தை அனுமதிக்க வேண்டும். கேரளா அளவுகோலை நிர்ணயித்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியாவில் அறிவியல் ஆராய்ச்சி, புதுமை மற்றும் கொள்கை செயல்படுத்தலின் நிலை குறித்த பரந்த விவாதத்திற்கு ஒரு வாய்ப்பை வழங்கும்.

இந்தக் கோரிக்கைக்கு ஆதரவளித்து, சிபிஐ எம்.பி பிபி சுனீர், சமாஜ்வாடி கட்சி எம்.பி ஜாவேத் அலி கான் ஆகியோரும் அரசாங்கப் பதில்களில் வெளிப்படைத்தன்மை இருக்க வேண்டும், பொறுப்புடன் பதில் அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

“அரசாங்கம் தனது தவறான அறிக்கைகளைச் சரிசெய்து, எதிர்காலத்தில் நாடாளுமன்றத்தில் உண்மையான சரியான தகவல்களை வழங்குவதை உறுதி செய்ய வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துகிறோம்“ என்று சிபிஐ மாநிலங்களவைத் தலைவர் பி.சந்தோஷ் குமார் கூறினார். அறிவியல் முன்னேற்றத்திற்கான தனது உறுதிப்பாட்டை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மீண்டும் உறுதிப்படுத்துகிறது. மேலும் இந்தியாவின் முதல் மாநில அளவிலான அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கொள்கையை நிறுவுவதில் கேரளாவின் முன்னோடி பங்கை ஒப்புக்கொண்டு, இந்த விஷயத்தைத் தீவிரமாக எடுத்துக்கொள்ள ஒன்றிய அரசை வலியுறுத்துகிறது” என்றார் அவர்!

# ...-ஏஐஎஸ்எப் இரத்த தானம்



### உடல் தானம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி திண்டுக்கல் நகரச் செயலாளர் பி.கிருஷ்ணசாமி மற்றும் மாவட்டச் செயற்குழு உறுப்பினர் எம்.கணேசன் ஆகியோர் திண்டுக்கல் கல்லூரி மருத்துவமனைக்கு உடல் தானத்திற்கு ஒப்புதல் அளித்தனர்.

மாவட்டச் செயலாளர் ஆர்.குமரன், மாணவர் பெருமன்றத்தின் மாவட்டச் செயலாளர் நவீன் தலைமையில், சட்டமன்ற உறுப்பினர் ஏ.நல்லதம்பி தொடங்கி வைத்தார். இதில் 26 தோழர்கள் இரத்ததானம் செய்தனர்.

**வேலூர்** குடியாத்தம் அரசு மருத்துவமனையில், இளைஞர் பெருமன்றத்தின் மாவட்ட அமைப்பாளர் கார்த்திக் பாபு, மாணவர் பெருமன்றத்தின் மாவட்டச் செயலாளர் கார்த்திக் தலைமையில், குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமுல், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஜி.லதா தொடங்கி வைத்தார்கள். 56 தோழர்கள் இரத்ததானம் செய்தனர்.

**ஈரோடு வடக்கு** பவானியில் இளைஞர் பெருமன்ற மாவட்ட தலைவர் முகமது அலி, மாணவர் பெருமன்றத்தின் மாவட்டத் துணைத் தலைவர் அரவிந்த் தலைமையில் பவானி நகர மன்றத் தலைவர் சிந்தூரி இளங்கோவன் தொடங்கி வைத்தார். 78 தோழர்கள் இரத்த தானம் செய்தனர்.

சத்தியமங்கலத்தில் இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் எம்.சுரேந்தர், மாணவர் பெருமன்றத்தின் மாநில துணைச் செயலாளர் கு.பிரபு தலைமையில், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் பி.எல்.சுந்தரம் தொடங்கி வைத்தார். இதில் 38 தோழர்கள் இரத்ததானம் செய்தனர்.

**மத்திய சென்னை** கே.எம்.சி மருத்துவமனையில் இளைஞர் பெருமன்றம் மாவட்ட அமைப்பாளர் இம்ரான் தலைமையில், எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் தொடங்கி வைத்தார். 40 தோழர்கள் இரத்ததானம் செய்தனர்.

**திருவண்ணாமலை** செங்கம் தலைமை மருத்துவமனையில் இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் யுவராஜ் தலைமையில், சிபிஐ மாவட்டச் செயலாளர் தங்கராஜ் தொடங்கி வைத்தார். 25 தோழர்கள் இரத்த தானம் செய்தனர்.

**கள்ளக்குறிச்சி** திருக்கோவிலூர் கபிலர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் கே.ராமன், மாணவர் பெருமன்றத்தின் மாநிலப் பொருளாளர் பி.கணேசன் தலைமையில், சார் ஆட்சியர் ஆனந்தகுமார் சிங் தொடங்கி வைத்தார். 29 தோழர்கள் இரத்ததானம் செய்தனர்.

**கடலூர்** அரசு மருத்துவமனையில், இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் மோகன், மாணவர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் தமிழ் தலைமையில், தலைமை மருத்துவர்

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்

# இந்தித் திணிப்பு அரசமைப்புச் சட்டத்துக்கு எதிரானது



மே.து.ரா.

**தேசிய மொழி என ஒன்றினைத் தேர்ந்தெடுக்க இயலாத நிலையில், அலுவல் மொழியாக மட்டுமே இந்தி ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதை எப்போதும் மனதில் கொள்ளவேண்டும்.**

பல்வேறு மொழிகள் வழங்குகின்ற இந்திய ஒன்றியத்தில், வரலாற்றுப் பின்புலத்திலும் பண்பாட்டு அளவிலும் வாழ்ந்துகொண்டிருக்கும் தேசிய இன மக்களை இந்தி என்ற ஒற்றை மொழியால் இணைக்க இயலவில்லை.

விடுதலையடைந்து எழுபத்தேழு ஆண்டுகள் கடந்த பின்னரும், இந்தி மொழியால் அலுவல் மொழி என்ற ஏற்றத்தினைப் பெற முடியவில்லை. ஒன்றிய அரசிலும் இந்தி பேசும் மாநிலங்களிலும்கூட முழுமையாக இந்தியைப் பயன்படுத்தும் நிலை வரவில்லை. உச்ச நீதிமன்றத்திலும் உயர் நீதிமன்றங்களிலும் ஆங்கிலம் தொடர்கிறது.

விடுதலைக்குப் பின்னர் இருந்த மன நிலையில், அடிமைப்படுத்தி வைத்திருந்த வேற்று நாட்டு மொழியான ஆங்கிலம் தேசிய மொழியாகவோ, இணைப்பு மொழியாகவோ அலுவல் மொழியாகவோ இருக்கக்கூடாது என்ற உணர்வுகள் மேலோங்கி இருந்தன.

இத்தகைய உணர்வுகள் விடுதலைப் போராட்டக் காலத்திலேயே விதைக்கப்பட்டு, விளைச்சலுக்கான முன்னேற்பாடுகள் தொடங்கப்பட்டுட்டன எனலாம். 1918இல் சென்னையில், காந்தியடிகளால் தோற்றுவிக்கப்பட்ட தென்னிந்திய இந்திப் பரப்பு அவை (தட்சிண பாரத இந்தி பிரச்சார சபா) போன்றவை, நாடெங்கிலும் பல்வேறு பெயர்களில் நிறுவப்பட்டன.

இந்தி மொழியினைத் தேசிய மொழியாக்கவேண்டும் என்ற எண்ணத்தில், மறைமுகமாக இந்துசுத்தானி என்ற பெயரில் இந்தியை ஏற்கச்செய்ய காந்தி கண்ட கனவுகளும், இந்தி பேசுவோரின் விருப்பங்களும், அரசமைப்பு அவையில் தென்னிந்திய எதிர்ப்புகளால் நிறைவேறவில்லை. முரண்பட்ட கருத்துக்களினூடே, சமக்கிருதத்தைத் தேசிய மொழியாக்கும் முயற்சிகளும் நடந்தன. அனைத்தையும் கடந்து, இந்திய ஒன்றியத்தில் அடங்கியுள்ள மாநில இன மக்களை இணைக்கும் மொழியாகவும் அமையாததால், அலுவல் மொழி என்ற நிலையினை மட்டுமே இந்தியால் பெற முடிந்தது.

அப்போதும்கூட, தமிழ், வங்காளம் போன்று சில மாநிலங்களில் மட்டுமே பேசப்படும் ஒரு பகுதி மொழிதான் இந்தியும் என்பதைப் பெரும்பாலானோர் தெளிவாக எடுத்துரைத்தனர். இது மறைக்கப்படவுமில்லை; மறுக்கப்படவுமில்லை.

அன்றைய அரசமைப்பு அவை, வாக்குரிமை அடிப்படையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்படவில்லை. இதனால், காசி சையது கரிமுதீன் (நடுவண் மாமாநிலம் மற்றும் பிரார்) என்ற உறுப்பினர், முழு வாக்குரிமை அடிப்படையில் அடுத்துத் தேர்ந்தெடுக்கப்படும் நாடாளுமன்றம்தான் மொழி குறித்த இறுதியான முடிவினை மேற்கொள்ளவேண்டும் என்று அறிவுறுத்தினார்.

ஆயினும், இந்தியை அலுவல் மொழியாக ஏற்கும் சட்டப் பிரிவுகள் குறித்து வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அப்போதைய அரசமைப்பு உறுப்பினர்களிடம், இந்தி மொழிக்கான ஏற்பும் மறுப்பும் இணையாகவே இருந்தன. அன்று அவைத்தலைவராக இருந்தவர், இந்தி பேசும் பீகார் மாநிலத்தைச் சார்ந்த ராசேந்திர பிரசாத். இவர் தனது சிறப்பு வாக்கை அளித்து இந்தி அலுவல் மொழியாவதை உறுதி செய்தார். இந்தியின் பரப்புரைக்காகப் பல்லாண்டுகளாகச் செயல்பட்டுவந்த அமைப்புகளின் தலைவராகவும் பணியாற்றிக்கொண்டிருந்த இந்திப் பற்றாளர் ஒருவரின் நடுநிலையற்ற வாக்களித்தலால் மட்டுமே இந்தி நுழைந்தது என்பதுதான் உண்மை.

அரசமைப்பு அவையில் நடந்த உரைகளையும் உணர்வுகளையும் வைத்து நோக்கும்போது, வெளிநாட்டு மொழி என்பதால் ஆங்கிலத்தை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்ற கருத்து முன்னிறுத்தப்பட்டது. இந்திய மொழிகளில் ஒன்றுதான் அலுவல் மொழியாக இருக்கவேண்டும் என்பதால் மட்டுமே இந்தியை ஏற்கத் தயக்கத்துடன் முடிவு செய்யப்பட்டது.

### அரசமைப்புக் கூறுவதென்ன?

இந்திய அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்து 75 ஆண்டுகள் கடந்துவிட்டன. ஒன்றியத்தின் அலுவல் மொழி, ஒன்றியத்தில் உள்ள இனங்களின் மொழிகளது (எட்டாவது அட்டவணை மொழிகள்) பயன்பாடுகள் ஆகியன குறித்து 343 முதல் 351 வரையிலான பிரிவுகள் பல விவரங்களை வெளிப்படுத்துகின்றன.

இந்திய அரசியல் சட்டத்தில் 343ஆவது பிரிவு, இந்திய ஒன்றிய அரசின் அலுவல் மொழியாக இந்தி



இருக்குமென்று கூறுகிறது. இந்திய ஒன்றியத்தில் இணைந்துள்ள அல்லது இணைத்துக் கொள்ளப்பட்டுவிட்ட அனைத்து மாநிலங்களுக்குமான பொது அலுவல் மொழியாக இந்தி பரிந்துரைக்கப்படவில்லை.

ஆனால், 351ஆவது பிரிவு, ‘இந்தி மொழியின் பரவலை ஊக்குவித்தல், அதை வளர்த்தல், அதன் வழியாக இந்தியாவின் கூட்டுப் பண்பாட்டினது அனைத்துக் கூறுகளுக்குமான வெளிப்பாட்டு ஊடகமாகச் செயல்படுத்துவது’ ஆகிய பணிகளை ஒன்றிய அரசுக்கு ஒதுக்கியுள்ளது. இதனால், இந்திய ஒன்றியத்தின் தொடர்பு மொழி அல்லது இணைப்பு மொழியாக இந்தி வளர்த்தெடுக்கப்படவேண்டும் என்னும் பிரிவு மறைமுகமாக இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்குள் நுழைக்கப்பட்டுவிட்டது எனலாம்.

அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த அய்ந்து ஆண்டுகளிலும் அதனையடுத்துப் பத்து ஆண்டுகளுக்குப் பின்னரும் குடியரசுத் தலைவர் ஓர் ஆணையத்தினை அமைக்கவேண்டும் என்றும், எட்டாவது அட்டவணையில் உள்ள மொழிகளின் உறுப்பினர்களுடன் கூடியதாக அது அமையவேண்டும் என்றும், அந்த ஆணையம் உரிய பரிந்துரைகளைக் குடியரசுத் தலைவருக்கு வழங்கவேண்டுமென்றும் பிரிவு 344 (1), (2) ஆகியன குறிப்பிடுகின்றன.

அத்துடன், அத்தகைய பரிந்துரைகளை வழங்கும்போது அந்த ஆணையம், இந்தியாவின் தொழில், பண்பாடு, அறிவியல் முன்னேற்றங்களைக் கருத்தில் கொள்வதுடன், பொதுச் சேவைகளில் இந்தி பேசாத பகுதிகளின் அடிப்படை உரிமைகளையும் நலன்களையும் மதிக்கவேண்டுமென்றும் பிரிவு 344 (3) வற்புறுத்துகிறது.

சட்டப்பேரவை வழியாக மாநிலங்கள் சட்டங்களை இயற்றித் தங்களுக்கான அலுவல் மொழியினை முடிவு செய்துகொள்ளலாம் என்று பிரிவு 345 தெளிவுபடுத்துகிறது. அதுவரை அந்த மாநிலங்களில் அலுவல் மொழியாக ஆங்கிலமே நீடிக்கும் என்பதையும் குறித்துச் சொல்கிறது.

ஒரு மாநிலத்துக்கும் மற்றொரு மாநிலத்துக்கும் மற்றும் ஒன்றிய அரசுக்கும் ஒரு மாநிலத்துக்குமான தொடர்புகளுக்குத் தற்போது இருப்பது போல ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்கும் என்று பிரிவு 346 கூறுகிறது.

தனியாகச் சட்டங்களை நாடாளுமன்றம் நிறைவேற்றும் வரை, உச்ச நீதிமன்றம் உயர் நீதிமன்றங்கள் ஆகியவற்றில் ஆங்கிலமே பயன்பாட்டு மொழியாக இருக்கும். மேலும், நாடாளுமன்றத்திலும் சட்டப்பேரவைகளிலும் அறிமுகப்படுத்தப்படும் முன்வரைவுகள், இயற்றப்படும் சட்டங்கள் மற்றும் அவசரச் சட்டங்கள், ஆணைகள், விதிகள், துணைவிதிகள், ஒழுங்குமுறைகள் போன்ற அனைத்தும் ஆங்கிலத்தில் இருக்கவேண்டுமென்பதை பிரிவு 348 உறுதிப்படுத்துகிறது.

இந்தி அலுவல் மொழி என்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தாலும், அத்தகைய ஏற்பில் அல்லது முடிவில் பல நடைமுறைத் தடைகள் இருந்ததையே இந்த அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் வெளிக்காட்டுகின்றன.

அரசமைப்பு அவையில் ஒரு சிலர் சுட்டிக்காட்டியது போன்று, 15 ஆண்டுகளில் இந்தியை அலுவல் மொழியாக்கிவிட முடியுமென்று எதிர்பார்ப்பது நடக்கக்கூடியதல்ல என்பது தெரிந்திருந்தும், இந்திப் பற்றாளர்கள் வெறியர்கள் அதை ஏற்றுக்கொள்வதாக இல்லை. அடுத்த ஆறு திங்கள்களுக்கு மட்டுமே ஆங்கிலத்தை அகற்றக் கால வாய்ப்புத் தரவேண்டும் என்றுகூடப் பிடிநிலையில் சிலர் தொடர்ந்தனர்.

அரசமைப்புச் சட்டம் இயல் 17இல் உள்ள 343 முதல் 351 வரையிலான பிரிவுகள், இந்தி மொழியினரின் உணர்வுகளை நிறைவு செய்வதன் பொருட்டு அரைகுறையாகப் புகுத்தப்பட்டிருக்கின்றன என்பதில் புனைவேதுமில்லை. விரைவுபடுத்த மேற்கொண்ட முயற்சிகள், விவரங்களோடும் இருக்கவில்லை.

### இந்தி பேசுவோர் பேசாதோர் வேறுபாடுகள்

அரசமைப்பு அவைக்கு வெளியில் இயல்பாக ஆங்கிலத்தில் உரையாடி எண்ணங்களைப் பகிர்ந்துகொண்ட உறுப்பினர்களில் சிலர், தென்னிந்திய உறுப்பினர்களுக்குத் தாங்கள் பேசுவது புரியாது எனத் தெரிந்தும், அரசமைப்பு அவைக்குள் தங்கள் கருத்துக்களை இந்தியிலேயே எடுத்துரைத்தனர். இது அவையிலும் சுட்டிக் காட்டப்பட்டது.

இந்தி பேசுவோர், இந்தி பேசாதோர் என உறுப்பினர்கள் அரசமைப்பு அவையில் இரண்டாகப் பிரிந்திருந்தனர் என்பதும்கூட வெளிப்படையாகவே எடுத்துக்காட்டப்பட்டது.

விடுதலைக்குப் பல்லாண்டுகள் முன்னர் நடைபெற்ற காங்கிரசுக் கட்சியின் அனைத்திந்திய மாநாடுகளிலும் இந்தப் பிரிவினை எதிரொலித்திருக்கிறது. ஆங்கிலம் தெரிந்திருந்தும் வடநாட்டினர் இந்தியில் பேசுவதும், இந்தி தெரியாத மாநிலங்களிலிருந்து சென்றோர் மட்டும் ஆங்கிலத்தில் பேசுவதும் தொடர்ந்து நடைமுறையில் இருந்தது. இந்தி மொழி புரியாமல் பிறர் தவித்ததையும் எதிர்ப்புக் குரல்கள் ஆங்காங்கு எழுந்ததையும் காணமுடிந்தது. இதுவே அரசமைப்பு அவையிலும் தொடர்ந்தது.

இந்திய ஒன்றியத்திலிருந்த அனைத்து இன மக்களில், இந்தி மொழி பேசுவோர் 40% அளவில் மட்டுமே இருந்தும், இந்தி அலுவல் மொழியாக ஏற்கப்படும் நிலை உருவாகிவிட்டது. மனித உணர்வுகளுக்கும் உண்மைச் சூழல்களுக்கும் நடைமுறை செயல்பாடுகளுக்கும் நிறைவேற்ற முடியாத நிலைமைகளுக்கும் மாறாக அரசமைப்பு அவையில் இந்தி திணிக்கப்பட்டுவிட்டது என்றுதான் கூறவேண்டும். அப்போது. இந்தி பேசாத மாநிலங்களிலிருந்து வந்திருந்த சில பிற்போக்குச் சனாதனிகளும் இந்த ஏற்பாட்டை ஒப்புக்கொண்டுவிட்டனர்.

### அலுவல் இந்தி அனைவருக்கும் வேண்டியதில்லை

இருப்பினும், அரசமைப்புச் சட்டப் பிரிவுகளின் வரிகளுக்குள் இந்தி இடம்பெற்றுவிட்டாலும், சட்டம் அவர்களுக்குச் சார்பாக இருந்துவிடவில்லை. மீண்டும் தொகுத்துக் கூறினால், கீழ்க்கண்ட நிலைமைகள் தொடர்கின்றன:

1. ஒன்றிய அரசின் அலுவல் மொழியாக மட்டுமே இந்தி ஏற்றுக்கொள்ளப்பட்டது
2. இந்திய ஒன்றிய அரசின் செயல்பாடுகளுக்கு வெளியே இந்தியைப் பயன்படுத்தவேண்டும் என்ற வற்புறுத்தல் வலியுறுத்தல் வல்லாண்மை எதுவும் அரசியல் சட்டத்தில் இருக்கவில்லை
3. மாநிலங்களில் அந்தந்த இன மக்களின் மொழி, அலுவல் மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது
4. இந்தி பேசாத மாநிலங்களோடு ஒன்றிய அரசு தொடர்புகொள்ள ஆங்கிலம் தொடர்கிறது
5. தொழில், பண்பாடு, அறிவியல் முன்னேற்றம் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு, இந்தி பேசாத மக்களின் அடிப்படை உரிமைகளையும் நலன்களையும் புறக்கணிக்காமல் மதித்து நடைமுறைகளை ஒன்றிய அரசு வகுக்கவேண்டும்
6. உச்ச நீதிமன்ற, உயர் நீதிமன்றங்களின் செயல்பாடுகள், சட்ட திட்டங்கள் என அனைத்தும் ஆங்கிலத்தில் தொடரவேண்டும்
7. இந்திய ஒன்றியத்தில் இருக்கும் பல இனங்களின் கூட்டுப் பண்பாட்டினை உள்வாங்கிக் கொண்டுதான் தொடர்புக்கான மொழியாக இந்தியை வளர்த்தெடுக்க வேண்டும்.

குறிப்பாகப் பிரிவு 344 (3) தெளிவாக எடுத்துக் கூறுவதைப் போல, தொழில், பண்பாடு அறிவியல் முன்னேற்றம் ஆகியவற்றின் வளர்ச்சிகளைக் கருத்தில் கொண்டு, இந்தி பேசாத மக்களின் அடிப்படை உரிமைகளும் நலன்களும் காக்கப்படவேண்டும் என்பதை மீறித் தமிழர்கள் மீது அல்லது இந்தி பேசாத பிற மக்கள் மீது இந்தியைத் திணிக்க அரசியல் சட்டத்தின் ஏற்பு எந்த அளவிலும் நிலையிலும் இல்லவே இல்லை.

மேலும், அலுவல் மொழி மட்டுமே என்றான பின்னர், இந்தியை எவ்வகையிலும் தமிழர் உள்ளிட்டு எவர் மீதும் வேறு வகைகளில் திணிக்க வாய்ப்பே தரப்படவில்லை.

### இந்தித் திணிப்புக்குச் சட்ட ஏற்பில்லை

இந்த நிலைமைகளில், மாணவர் அனைவரும் மும்மொழிகளில் ஒன்றாக இந்தியைப் படிக்கவேண்டும் அல்லது இந்திய மொழிகளில் ஒன்றையாவது தேர்ந்தெடுக்கவேண்டும் என்று தேசியக் கல்விக் கொள்கை முன்மொழிவது அரசமைப்புச் சட்டத்தின் பிரிவுகளுக்கு முற்றிலும் முரணானதாகும்.

கல்வி பொதுப் பட்டியலில் இருக்கலாம். உயர்கல்வியின் தரத்தை உறுதிப்படுத்தும் உரிமை ஒன்றிய அரசுக்குத் தரப்பட்டிருக்கலாம். ஆனால், இந்தி பேசாத மக்கள், குறிப்பாகத் தமிழ் இனத்தின் மீது மூன்றாவது

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்

# பாலியல் குற்றங்களுக்கு அதிகபட்சத் தண்டனை வழங்க வேண்டும்

## மாதர் சம்மேளனம் ஆர்ப்பாட்டம்










இந்திய மாதர் தேசிய சம்மேளனம் சார்பில், பெண்கள், குழந்தைகளுக்கு இழைக்கப்படும் பாலியல் துன்புறுத்தல்கள், வன்புணர்வுகளுக்கு எதிராகவும், பாலியல் வன்கொடுமை வழக்குகளை உடனடியாக விசாரித்து நடவடிக்கை எடுக்கவும், குற்றவாளிகள் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும் என்றும் பெண்களுக்குப் பணியிடத்தில் நடைபெறும் பாலியல் துன்புறுத்தல்களைத் தடுக்க விசாகா கமிட்டியை உடனடியாக அமைத்திடக் வலியுறுத்தியும் 18.3.2025 அன்று தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**மத்திய சென்னை:** அயனாவரத்தில் மாவட்டச் செயலாளர் ஏ.தனலெட்சுமி தலைமையில், தேசியச் செயலாளர் டாக்டர் ஏ.ஆர்.சாந்தி, மாநிலச் செயலாளர் மு.கண்ணகி, மாவட்ட தலைவர் மாணிக்கவள்ளி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**மதுரை மாநகர்:** ஜெய்ஹிந்தபுரம் ஜீவா நகரில் முத்துலெட்சுமி தலைமையில், மாநிலத் தலைவர் ஜி.மஞ்சுளா, மாநிலச் செயலாளர் மு.கண்ணகி, மாநிலத் துணைத் தலைவர் பா.இராஜ லெட்சுமி, சுகந்தாதேவி, இந்திராணி, கட்சியின் மாவட்டச் செயலாளர் முருகன் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

**வேலூர்:** மாவட்டச் செயலாளர் காவேரி தலைமையில், மாநிலத் துணைத் தலைவர் லதா எக்ஸ் எம்எல்ஏ கலந்து கொண்டனர்.

**கரூர்:** மாவட்டச் செயலாளர் கலாராணி தலைமையில், மாநில துணைச் செயலாளர் டி.பி.லலிதா, மாநில துணைத் தலைவர் பி.இராஜ லெட்சுமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**கோவை:** மத்திய தந்தி அலுவலகம் முன்பு, மாவட்ட தலைவர் ஜே.கலா தலைமையில், மாநில துணைச் செயலாளர் கலை.அஸ்வினி, மாவட்டச் செயலாளர் பேபி, மாமன்ற உறுப்பினர்கள் சாந்தி சந்திரன், பிரபா ரவீந்திரன், மற்றும் நிர்மலா மருதுகுட்டி, சாரதாமணிகுமார், சுதா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**திருவாரூர்:** பழைய பேருந்து நிலையத்தில், மாவட்டத் தலைவர் சுலோச்சனா தலைமையில், மாவட்டச் செயலாளர் கே.சுஜாதா, எஸ்.தமயந்தி, மாநிலக் குழு தோழர்கள் தமிழ்ச்செல்வி ராஜா, பாஸ்கர் வள்ளி, மீனம்பாள், உஷா பூபதி, ஒன்றிய பெருந்தலைவர் மணிமேகலை, நகரச் செயலாளர் மீனாம்பிகை, துணைச் செயலாளர் அருள் செல்வி, துணைத் தலைவர் சபிதா, எம்.கவிதா, அன்னபாக்கியம் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

**தஞ்சை தெற்கு:** மாவட்டச் செயலாளர் விஜய் லெட்சுமி தலைமையில், ஏஐடியுசி தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் சி.சந்திரக்குமார், மாவட்டத் தலைவர் சேவையா, மாவட்ட தலைவர் கண்ணகி, துணைத் தலைவர்கள் தனசீலி, மீனாள், மாநகர் செயலாளர் ராஜலெட்சுமி, ஒன்றியச் செயலாளர் கலைச்செல்வி, தலைவர் மல்லிகா மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

**தூத்துக்குடி:** மாவட்ட தலைவர் தனலெட்சுமி தலைமையில், மாவட்டச் செயலாளர் திலகவதி உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

**திருச்சி மாநகர்:** எடமலைபட்டி புதூரில் மாவட்டச் செயலாளர் அஞ்சுகம் அசோகன் தலைமையில், ஏஐடியுசி பொதுச் செயலாளர் க.சுரேஷ், மாவட்டப் பொருளாளர் ராமராஜ் மாவட்ட தலைவர் பார்வதி, மாவட்டப் பொருளாளர் சுமதி, மாவட்ட துணைத் தலைவர் ஆயிஷா புஷ்பம் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

**திருவண்ணாமலை:** மாவட்டச் செயலாளர் கலைவாணி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**கடலூர்:** மாவட்டச் செயலாளர் லெட்சுமி தலைமையில் நடைபெற்றது.

**தேனி :** மாவட்டச் செயலாளர் அழகேஸ்வரி தலைமையில் நடைபெற்றது.

# இளம் வழக்கறிஞர் பி.கௌதம்குமார் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் கோவை மாவட்டத் தலைவரும், இளம் வழக்கறிஞருமான பி.கௌதம்குமார் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இளைஞர் பெருமன்றத்தின் கோவை மாவட்டத் தலைவரும், இளம் வழக்கறிஞருமான பி.கௌதம்குமார் (26) அகால மரணமடைந்த செய்தி அதிர்ச்சியும், ஆற்றவொண்ணா வேதனையும் அளிக்கிறது.

ஈரோடு மாவட்டம், கொடுமுடி அருகில் உள்ள இச்சிப்பாளையம் என்ற ஊரில், விவசாயியான பி.வேலுசாமி பொன்னி (எ) பொன்னம்மாள் தம்பதியரின் மகனாகப் பிறந்தவர். இவரது தந்தை பி.வேலுசாமி கம்யூனிஸ்ட் கட்சியிலும், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்திலும் தீவிரமாகச் செயல்பட்டவர். இதன் காரணமாக கௌதம்குமார் அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தில் இணைந்து மாணவர்கள் நலனுக்கும், உரிமைகளுக்கும் போராடியவர். சட்டப்படிப்பு முடிந்த பிறகு வழக்கறிஞராகப் பதிவு செய்து, சட்டப் பணிகளில் ஈடுபட்டு வந்தவர்.

அண்மையில் இளைஞர் பெருமன்றத்தின் கோவை மாவட்டத் தலைவராக தேர்வு செய்யப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டு வந்தவர்.

21.03.2025 அன்று கௌதம் குமார் கோவையில் இருந்து கொடுமுடிக்கு இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது, திருப்பூர் அருகில் ஏற்பட்ட சாலை விபத்தில் தலைக் காயம் ஏற்பட்டு, உயிராபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். மருத்துவப் பரிசோதனையில் அவர் மூளைச்சாவுக்கு ஆளாகியிருந்த துயரம் தெரியவந்தது.

இந்நிலையில் அவரது பெற்றோர்கள் கௌதம் குமாரின் உடல் உறுப்புகளைத் தானம் செய்ய முன் வந்து, ஒப்புதல் அளித்தனர். அவரது இழப்பு ஏற்றுக் கொள்ள முடியாது பெரும் வேதனையாகும்.

மகனை இழந்த பெற்றோர்களை எந்த வார்த்தை கூறியும் ஆற்றுப்படுத்த முடியாது. நெஞ்சைப் பிளக்கும் வேதனையிலும் மகனின் உடல் உறுப்புகளைத் தானம் செய்ததன் மூலம் அவர்கள் என்றென்றும் நினைவு கூறப்படுவார்கள்.

கௌதம் குமாரின் அகால மறைவுக்கு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு செவ்வணக்கம் கூறி, ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது என்று கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## உடல் உறுப்புகள் தானம்

அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் கோவை மாவட்டத் தலைவர் வே.கௌதம் குமார் (வயது 26). இவர் இளைஞர் பெருமன்றத்தின் பெரியநாயக்கன்பாளையம் ஒன்றிய மாநாட்டை முன்னின்று நடத்தினார். கல்லூரியில் கல்விக் கட்டணம் செலுத்த பணம் கேட்ட மாணவர்களுக்கு, தனது இரு சக்கர வாகனத்தை அடகு வைத்துக் கல்வி உதவி அளித்த மனிதநேயப் பண்பாளர்.

இவரது தந்தை வேலுச்சாமி கட்சியின் கொடுமுடி ஒன்றியச் செயலாளராகவும், ஈரோடு மாவட்டச் செயற்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர். வே.கௌதம் குமார் கடந்த 21.03.2025 அன்று விபத்திற்குள்ளானர். சிகிச்சை பெற்று வந்த நிலையில் 22.03.2025 அன்று மூளைச்சாவு அடைந்து விட்டார். இந்நிலையில், அவரது உடல் உறுப்புகளைத் தானமாக வழங்க அவரது குடும்பத்தினர் ஒப்புதல் அளித்ததன் பேரில், உடல் உறுப்புகள் தானமாக அளிக்கப்பட்டன.

23.03.2025 அன்று அவரது உடலுக்குக் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், கட்சியின் மாநிலக் கட்டுப்பாட்டுக் குழுத் தலைவர் கே.சுப்பராயன், மாநில துணைச் செயலாளர் நா.பெரியசாமி, மாநிலப் பொருளாளர் எம்.ஆறுமுகம், நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன், கட்சியின் ஈரோடு வடக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.மோகன்குமார், கோவை மாவட்டச் செயலாளர் சி.சிவசாமி, இளைஞர் பெருமன்ற மாநிலச் செயலாளர் க.பாரதி, மாநிலத் தலைவர் இரா.தமிழ்பெருமாள், மாணவர் பெருமன்ற மாநில துணைத் தலைவர் பா.நி.சினேகா, அரசு அதிகாரிகள் உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர். இறுதி ஊர்வலத்தில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் பங்கேற்றனர்.

## ஆர்.என்.கே.100ஆம் ஆண்டு நினைவு நாட்குறிப்பேடு வெளியீடு



◆ தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநிலத் தலைவர் தகைசால் தமிழார் ஆர்.நல்லகண்ணு அவர்களை, மாநிலப் பொதுச் செயலாளர் மு.வீரபாண்டியன் சந்தித்து, தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநிலக் குழு சார்பில், ஆர்.என்.கே.100ஆம் ஆண்டு நினைவு நாட்குறிப்பேடு வெளியிடப்பட்டது. அப்போது மாநிலச் செயலாளர் லி.உதயகுமார், மாநிலப் பொருளாளர் இர.மோ.சந்தோஷ் குமார் ஆகியோர் பங்கேற்றனர்.

10 ஆம் பக்கத் தொடர்ச்சி

மொழியொன்றைப் புகுத்த அல்லது திணிக்க ஒன்றிய அரசுக்கு வழியேதும் வழங்கப்படவில்லை.

தேசியக் கல்விக் கொள்கையை வகுக்கலாம்; சில பரிந்துரைகளைச் சொல்லலாம்; தரத்தினை வலியுறுத்தலாம்; நிதி தந்து உதவலாம். ஆனால், அரசமைப்புக்கு மாறாக எதிராகத் தமிழர்களின் உரிமைகளையும் நலன்களையும் மிதித்துவிட முடியாது; பறித்துவிட முடியாது. இவை அறிவுரைகளாக இருக்கலாம்; ஆணைகளாக இருக்க இயலாது.

தமிழர்களின் உரிமைகளுக்கும் நலன்களுக்கும் மாறாக இருந்தால், எதையும் ஒதுக்கித் தள்ளும் உரிமை மாநில மக்களுக்கு உண்டு என்பதைத்தான் அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 344(3) தெளிவுபடுத்துகிறது.

தமிழ்நாட்டின் தொழில், பண்பாடு, அறிவியல் முன்னேற்றம் ஆகியன ஒன்றியத்தின் பிற இனங்களைவிடத் தனித்திருக்கின்றன. இவற்றைக் காக்கவும் மேம்படுத்தவும் அடுத்த கட்டத்திற்கு நகர்த்திச் செல்லவும் தமிழ் மக்களுக்கு மட்டுமே உரிமை உள்ளது. இந்த அடிப்படை உரிமைகளையும் முனைந்து பெற்ற நலன்களையும் பின்னோக்கித் தள்ள ஒன்றிய அரசு மேற்கொள்ளும் அனைத்து முயற்சிகளுக்கும் அரசமைப்புச் சட்டம் இடம் தரவில்லை. ஆனால், தடைகளைத் தடுத்து நிறுத்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அடுத்து, இந்திய ஒன்றியத்தில் இருக்கும் பல இனங்களின் கூட்டுப் பண்பாட்டினை உள்வாங்கிக்கொண்டு, இந்தி தொடர்பு மொழியாக வளர்த்தெடுக்கப்படலாம் என்று எழுத்துக்களில் இடம்பெறலாமேயன்றி, எடுத்துக்கொள்ளப் பயன்படாது.

தமிழரும் இயைபு கொண்ட பிற தென்னிந்திய இனங்களும், வட இந்தியப் பண்பாடுகளிலிருந்து முற்றிலும் வேறானோராவர். இவர்களது பண்பாட்டுக் கூறுகளை இந்திப் பண்பாட்டுடன் இணைப்பதும் கலப்பதும் நடைமுறையில் எளிதாக இருக்கப்போவதில்லை. பண்பாடு மட்டுமல்லாது, மொழியினங்களும் வேறானவையாக உள்ளன.

இங்கும்கூட, இந்தி மொழியின் பரவலை ஊக்குவித்தல், வளர்த்தல், இந்தியாவின் கூட்டுப் பண்பாட்டின் அனைத்துக் கூறுகளுக்கும் வெளிப்பாட்டு ஊடகமாக இந்தியைச் செயல்படுத்துதல் ஆகியவற்றைத்தான் பிரிவு 351 விழைகிறது. இவையெல்லாம் இந்தியைத் திணிப்பதற்கான அடிப்படைகளாக அமைந்துவிடவில்லை. இத்தகைய வளர்ச்சியினை எட்டிப் பிடிக்க இந்தி இன்னும் செழுமைப்படுத்தப்பட வேண்டும். இதற்கான முதல் கட்ட முயற்சிகளைக்கூட மேற்கொள்ளாமல், இப்போதிருக்கின்ற இந்தியை அப்படியே தொடர்பு ஊடகமாக மாற்ற முனைவது அரசமைப்பு வழிகாட்டுதலுக்கு முழுதும் மாறானதாகும்.

**ஒன்றிய அரசுக்குச் சட்ட உரிமையில்லை**

அரசமைப்புச் சட்டப்படி, மொழி தொடர்பாக ஒன்றிய அரசு செய்யக்கூடியனவாக இருப்பவை இவை மட்டும்தான்:

1. முடியுமெனில், ஒன்றிய அரசின் செயல்பாடுகள் அனைத்தையும் இந்திக்கு மாற்ற முயற்சிக்கலாம்
2. இதற்காக ஒன்றிய அரசின் அலுவலர் அனைவரையும் இந்தியைத் தெரிந்துகொள்ளுமாறு வற்புறுத்த முனையலாம்
3. இந்தி பேசாத மக்களின் அச்சத்தினைப் புறக்கணித்து, எதிர்ப்புகளை எதிர்கொண்டு, திறன் இருந்தால் உரிய சட்டங்களை இயற்றி, மாநிலங்களுடன் தொடர்புகொள்ள இந்தியைப் பயன்படுத்த ஏற்பாடு செய்யலாம்
4. உச்ச நீதிமன்றம் முழுமையாக ஏற்றுக்கொண்டால், உரிய சட்டங்களை நிறைவேற்றி, உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றங்கள் ஆகியவற்றின் அலுவல்களை இந்தியில் மேற்கொள்ளுமாறு வற்புறுத்த நினைக்கலாம். ஆனாலும், இதில் இந்தி பேசாத மாநிலங்களில் உள்ள உயர் நீதிமன்றங்களைக் கட்டுப்படுத்த வாய்ப்பில்லை.

இவற்றுக்கு மேல் இந்தி மொழி தொடர்பாக ஒன்றிய அரசுக்கு எத்தகைய உரிமைகளும் கடமைகளும் எப்போதும் வழங்கப்படவில்லை.

1. இந்தியை மூன்றாவது மொழியாக இந்தி பேசாத மக்களைக் கற்க வலியுறுத்துவது
2. ஏதோவொரு வகையில் இந்தியை நுழைக்க முயல்வது
3. இந்தி பேசாத மாநிலங்களின் அலுவல்களை இந்தியில் நடத்துமாறு கேட்டுக்கொள்வது
4. நிதி நிறுத்தம் போன்ற அடாவடிகளை மேற்கொள்வது
5. வேண்டிய மொழி மாற்று ஏற்பாடுகளின்றி, இந்தி பேசாத மக்களிடம் பேசியும் எழுதியும் எரிச்சல் ஊட்டுவது

போன்ற செயல்கள் எவையாக இருந்தாலும், அவை அனைத்தும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஒப்புதலைப் பெறாதவையாகவே இருக்க முடியும்.

ஒன்றிய அரசின் அலுவல் மொழியாக மட்டுமே இருக்கின்ற இந்தியை, ஒன்றிய அரசின் அலுவல்களோடு நேரடியாக எந்தத் தொடர்பும் இல்லாத மக்களையும் மாணவரையும் படிக்கவேண்டும் என்று வற்புறுத்தவும் பயன்படுத்தவேண்டும் என்று வலியுறுத்தவும் அரசமைப்புச் சட்டத்தில் இடம் தரப்படவில்லை.

சட்டத்துக்கு ஒவ்வாத ஒன்றினைத் தமிழர் மீது திணிப்பதைத் தமிழ் மக்கள் ஏற்கவில்லை. எந்த மொழியினைப் படிப்பது, எப்படி ஒரு மொழியினைப் பயன்படுத்துவது என்பன ஒவ்வொரு குடிமகனின் தனிப்பட்ட உரிமைகள் ஆகும். இதில் தலையிட ஒன்றிய அரசு உள்ளிட்ட எவருக்கும் உரிமையும் தகுதியும் இல்லை.

இந்தி மொழி குறித்த சிக்கலில், ஒன்றிய அரசு தனக்குத் தரப்பட்டுள்ள அரசியலமைப்புச் சட்ட எல்லைகளைப் புரிந்து தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ளவேண்டும்.

தமிழ் நாடு உள்ளிட்ட இந்தி பேசாத மாநிலங்கள், தங்களுக்கு அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ள உரிமைகளை அறிந்து, அவற்றை நிலைநாட்டிக்கொள்ளவேண்டும்.

**தொடர்புக்கு: 9444075561**

---

விருதுநகர் மாவட்டத்திலிருந்து

## விவசாயிகள் சங்க தேசிய மாநாட்டுப் பேரணிக்கு 500 பேர் செல்ல முடிவு

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூரில், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டக் குழு கூட்டம், மாவட்ட தலைவர் சங்கரபாண்டியன் தலைமையில் மாவட்டச் செயலாளர் சவுந்திரபாண்டியன் நடைபெற்ற வேலைகள் குறித்து பேசினார். மாவட்டப் பொருளாளர் குருசாமி, சிவகாசி கூடலிங்கம், செட்டியார்பட்டி அய்யணன், வத்திராயிருப்பு கோவிந்தன், திருவில்லிபுத்தூர் பலவேசம், சுந்தர சோழன் உள்பட மாவட்டக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். சிபிஐ தேசியக் குழு உறுப்பினர் தி.இராமசாமி, மாவட்டச் செயலாளர் பி.லிங்கம் பேசினார்கள். ஏப்ரல் 15, 16, 17 நாகையில் நடைபெறும் அகில இந்திய விவசாயச் சங்க மாநாட்டுப் பேரணியில் 500 பேர்கள் கலந்து கொள்வது எனவும் முடிவு செய்யப்பட்டது.

## மாமேதை காரல் மார்க்ஸின் நினைவு நாள்

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சார்பாக, மாமேதை காரல் மார்க்ஸின் 142வது நினைவேந்தல் நிகழ்வு, தனுஷ்கோடி அரங்கத்தில் நடைபெற்றது. பெருமன்றத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் மரு.த.அறம் மார்க்ஸின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். இதில் கலிங்கல் சுவாமிநாதன், கு.கணேசன் பாடல்கள் பாடினார்கள். கட்சியின் மாவட்டப் பொருளாளர் எஸ்.பழனிக்குமார், பெருமன்ற மாவட்டச் செயலாளர் வ.நவநீதகிருஷ்ணன், மாநிலக் குழு உறுப்பினர் உ.இராமசுப்பிரமணியன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

---

## ஆட்டோ தொழிலாளர்கள் மனு



பயணிகள் ஆட்டோக்களில் சிமெண்ட், இரும்புக் கம்பிகள், வாழைத்தார்கள், அரிசி மூடைகள் உள்ளிட்ட பொருட்கள் ஏற்றிச் செல்வதால், லோடு ஆட்டோ தொழிலாளர்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. அதனால் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் அடங்கிய மனுவை, கோவில்பட்டி லோடுஆட்டோ தொழிலாளர்கள் சங்கம் சார்பில், ஏஐடியுசி மாவட்டச் செயலாளர் பாபு தலைமையில், கோவில்பட்டி வட்டாரப் போக்குவரத்து அலுவலர் கிரிஜா அவர்களிடம் வழங்கினர். இதில் லோடு ஆட்டோ தொழிலாளர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின்

## அகில இந்திய மாநாட்டிற்கான சுவர் விளம்பரம் எழுதும் பணி




கீழையூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட பல்வேறு இடங்களில், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் அகில இந்திய மாநாட்டிற்கான சுவர் விளம்பரம் எழுதும் பணி நடைபெற்று வருவதை, மாநாட்டின் வரவேற்புக் குழு தலைவர் வை.செல்வராஜ் எம்பி பார்வையிட்டார். அப்போது சிபிஐ மாநிலக் குழு உறுப்பினர் டி.செல்வம், விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் கே.பாஸ்கர், விவசாயத் தொழிலாளர் சங்க ஒன்றியச் செயலாளர் வீ.சுப்பிரமணியன், தமிழ்நாடு விவசாயச் சங்க ஒன்றியப் பொருளாளர் எம்.பரணபாஸ், சிபிஐ ஒன்றிய துணைச் செயலாளர் வீ.எஸ்.மாசேத்துங், சிபிஐ நிர்வாகக் குழு உறுப்பினர் ஜி.சங்கர் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

---

தலித் மக்கள் மீதான தாக்குதலைக் கண்டித்து

## ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் ஆர்ப்பாட்டம்










தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் சார்பில், தலித் மக்கள் மீதான வன்முறைத் தாக்குதல்களைத் தமிழக அரசு தடுத்து நிறுத்த வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**வடசென்னை:** வடசென்னை வியாசர்பாடி அம்பேத்கர் கலைக் கல்லூரி அருகில் ஜி.சுப்பிரமணி, எஸ்.ராமச்சந்திரன், சு.பாஸ்கர் ஆகியோர் தலைமையில் கண்டனம் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாநிலப் பொதுச்செயலாளர் மு.வீரபாண்டியன், மாநிலச் செயலாளர்கள் லி.உதயகுமார், எஸ்.கே.சிவா, தென்சென்னை மாவட்டச் செயலாளர் செளமியா, மாநிலப் பொருளாளர் இரா.மோ.சந்தோஷ் குமார், மாநிலக் குழு உறுப்பினர் செண்பகம் ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினார்கள்.

இதில் கட்சியின் மாவட்ட நிர்வாக உறுப்பினர் ஆர்.சுப்பிரமணி எக்ஸ் எம்சி, ஏஐடியுசி மாவட்டப் பொதுச் செயலாளர் ஏ.அருள், பெரம்பூர் பகுதிச் செயலாளர் ஆர்.சுரேஷ், வட்டச்செயலாளர்கள் காத்தவராயன், அஜய்கோஷ், முனுசாமி, வேதாச்சலம், பார்த்திபன், எம்.மூர்த்தி, வெங்கடேசன், கா.ராஜாராம், கண்ணன், சிவா, சா.தேசிகானந்தம், க.ராஜாராம், பாபுராவ், எம்.அய்யனார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**தஞ்சை:** தஞ்சை தலைமைத் தபால் நிலையம் முன்பு, மத்திய மண்டலப் பொறுப்பாளர் வீ. கல்யாணசுந்தரம் தலைமையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்டத் தலைவர் அழகு.தியாகராஜன், மாவட்டச் செயலாளர் இள.குமணன், தஞ்சை மாரியம்மாள், அமுதா முன்னிலை வகித்தனர்.

அகில இந்திய தலித் உரிமைகள் இயக்கத்தின் தேசியக் குழு உறுப்பினர் வழக்கறிஞர் எஸ்.கிருஷ்ணன், சிபிஐ மாவட்ட துணைச் செயலாளர் கோ.சக்திவேல், விவசாயச் சங்க மாவட்டச் செயலாளர் சோ.பாஸ்கர், மாநிலக் குழு உறுப்பினர் சி.பக்கிரிசாமி, மாநிலக் குழு உறுப்பினர் ப.குணசேகரன், மாவட்டப் பொருளாளர் என்.குணசேகரன், தஞ்சை வடக்குப் பொறுப்பாளர் வழக்கறிஞர் எல்.கருணாமூர்த்தி, மாதர் சம்மேளன மாவட்டச் செயலாளர் விஜயலட்சுமி ஆகியோர் கண்டன உரையாற்றினர். மாவட்டக் குழு உறுப்பினர் இ.முருகேசன் நன்றி கூறினார்.

**நாமக்கல் மாவட்டம்:** மேற்கு மண்டலம் சார்பில் நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு அண்ணா சிலை முன்பு, நாமக்கல் மாவட்டச் செயலாளர் எஸ்.ராமகிருஷ்ணன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் அகில இந்திய தலித் உரிமைகள் இயக்கத்தின் தேசியச் செயலாளர் த.லெனின், மாநிலச் செயலாளர் அ.அசரப் அலி, கட்சியின் மாவட்டச் செயலாளர் கே.அன்புமணி, திருச்செங்கோடு நகரச் செயலாளர் எஸ்.சுகுமார், ஏஐடியுசி மாவட்டத் தலைவர் எஸ்.ஜெயராமன், பொதுச்செயலாளர் பி.தனசேகரன், அமைப்பின் தாலுகா தலைவர் ஆர்.வி.விஸ்வநாதன், ரா.கோபி ராஜ் ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர்.

## பவானி ஆறு மாசுடுவதைத் தடுக்கக் கோரி ஆர்ப்பாட்டம்



கோவை, திருப்பூர், ஈரோடு, கரூர் என நான்கு மாவட்டங்களின் குடிநீர் ஆதாரமாக பவானி ஆறு விளங்கி வருகிறது. இந்த நதி நீரை பல லட்சக்கணக்கான மக்கள் குடிநீராகவும், வேளாண்மைக்கும், கால்நடைகளுக்கும் பயன்படுத்தி வருகின்றனர். ஜீவ நதியான பவானி நதி நீர், ஆலைக் கழிவுகளால் மாசடைந்து தண்ணீர் நிறம் மாறி, துர்நாற்றம் வீசி வந்தது. இந்த நீரைப் பயன்படுத்தும் பொதுமக்கள் பல்வேறு நோய்களுக்கு ஆளானார்கள்.

இந்நிலையில் பவானி நதி பாதுகாப்புக் கூட்டியக்கம் சார்பில், பவானிசாகர் மார்க்கெட்டில், பவானிசாகர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.எல்.சுந்தரம் முன்னிலையில், தாண்டாம்பாளையம் சின்னராஜ் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், காங்கிரஸ் வட்டாரச் செயலாளர் டி.கே.சுப்பிரமணியம், சிபிஐ மாவட்டச் செயலாளர் சு.மோகன் குமார், சிபிஎம் தாலுகா செயலாளர் விஜயகுமார், பாமக மாவட்டச் செயலாளர் ராஜா, விசிக தொகுதிச் செயலாளர் பொன்.தம்பி ராஜன், புரட்சிகர இளைஞர் முன்னணியின் பாலு, ஆதித்தமிழர் பேரவையின் பே.பொன்னுசாமி, சிபிஐ ஒன்றியச் செயலாளர் பி.ஏ.வேலுமணி, எம்.சுரேந்தர், உத்தாண்டியூர் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பூங்கொடி, சூழலியலாளர் கோவை சதாசிவம் மற்றும் பல்வேறு பொதுநல அமைப்பின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். இதற்கான ஏற்பாடுகளை பவானி நதி பாதுகாப்புக் கூட்டியக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் எஸ்.சி.நடராஜ் செய்திருந்தார்.

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் இடைகமிட்டி மாநாடுகள்

**ஆத்தூர் வட்டக் குழு:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆத்தூர் வட்டக் குழு 24வது மாநாடு ஈ.ஆர்.கே, நித்தியானந்தம், சி.தங்கராஜ் ஆகியோர் தலைமையில் ஆத்தூர் பஜனைமடம் மண்டபத்தில் நடைபெற்றது. மாநாட்டுக் கொடியினை எஸ்.முருகன் ஏற்றினார். மாவட்டச் செயலாளர் ஏ.மோகன் துவக்கி வைத்தார். மாவட்ட துணைச் செயலாளர் எம்.ராமன், மாவட்டப் பொருளாளர் டி.கண்ணன், மாணவர் பெருமன்றத்தின் மாநிலச் செயலாளர் பா.தினேஷ் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர். இதில் வட்டச் செயலாளராக எஸ்.கவிதா செல்லப்பன் தேர்வு செய்யப்பட்டார்.

**எடப்பாடி வட்டக் குழு:** எடப்பாடி வட்டக் குழு மாநாடு, வெள்ளாண்டி வலசுப் பகுதியில் அய்யனார் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டை மாவட்டச் செயலாளர் ஏ.மோகன் தொடக்கி வைத்தார். இதில் மாணவர் பெருமன்றத்தின் மாநிலச் செயலாளர் பா.தினேஷ், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் எஸ்.பாலன், இரா.ரமேஷ், மாவட்டக் குழு உறுப்பினர் கே.வி.ராஜேந்திரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். வட்டச் செயலாளராக ஆர்.ஸ்டாலின் தேர்வு செய்யப்பட்டார்.

**மேட்டூர் மேச்சேரி இடைக் குழு:** மேட்டூர் மேச்சேரி இடைக் குழுவின் மாநாடு ஜெயக்குமார், வி.பாலு ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் எம்.முனுசாமி தொடக்கி வைத்தார். மாவட்டச் செயலாளர் ஏ.மோகன், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் பழ.ஜீவானந்தம் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரையாற்றினர். மாநாட்டில் ஒன்றியச் செயலாளராக கே.வி.ராஜேந்திரன் தேர்வு செய்யப்பட்டார்.

**ஓமலூர் காடையாம்பட்டி ஒன்றியம்:** ஓமலூர் காடையாம்பட்டி ஒன்றிய மாநாடு கே.ரங்கநாதன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர் ஏ.மோகன் துவக்க உரையாற்றினார். மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் டி.வி.கருணைதாஸ் வாழ்த்துரை வழங்கினார். ஒன்றியச் செயலாளராக ஏ.ஆறுமுகம் தேர்வு செய்யப்பட்டார்.

**ஆட்டோ கிளை:** ஆட்டோ தொழிலாளர்கள் கிளை மாநாடு, அண்ணாதுரை தலைமையில், மாவட்ட கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் மாணவர் பெருமன்றத்தின் மாநிலச் செயலாளர் பா.தினேஷ் கலந்துகொண்டு உரையாற்றினார். இதில் கிளைச் செயலாளராக எம்.லோகநாதன் தேர்வு செய்யப்பட்டார்.

**வழக்கறிஞர் கிளை:** வழக்கறிஞர் கிளை மாநாடு சிங்காரவேலர் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர் ஏ.மோகன் உரையாற்றினார். கிளைச் செயலாளராக டி.மனுவேல் தேர்வு செய்யப்பட்டார்.

**சின்ன மலை குன்று கிளை:** தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் தாலுகா சின்ன மலை குன்று கிளை மாநாடு நடைபெற்றது. இதில் செயலாளராக எஸ்.வேலுமணி, உதவி செயலாளராக ஆர்.கிருஷ்ணவேணி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**வேலோடு பட்டி கிளை:** எட்டயபுரம் தாலுகா வேலோடு பட்டி கிளை மாநாட்டில் செயலாளராக சௌந்தர்ராஜ், உதவி செயலாளர் சண்முகராஜ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**ராமநுத்து கிளை:** எட்டையாபுரம் தாலுகா ராமநுத்து கிளை மாநாட்டில் செயலாளராக ராமர், உதவி செயலாளராக பாலகிருஷ்ணன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**நாகமங்கலம் கிளை:** அரியலூர் ஒன்றியம் நாகமங்கலத்தில் கிளை மாநாடு நடைபெற்றது. மூத்த தோழர் எஸ்.பிச்சைப்பிள்ளை தலைமையில் முன்னாள் மாவட்டத் துணைச் செயலாளர் டி.தண்டபாணி கொடி ஏற்றினார். செயலாளராக எஸ்.பிச்சைப்பிள்ளை, துணைச் செயலாளர் ம.சின்னம்மாள், பொருளாளர் மூ.தையல்நாயகி ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகம் திறப்பு விழா



கன்னியாகுமரி மாவட்டம் செண்பகராமன் புதூரில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கிளை அலுவலகம் திறப்பு விழா ஏ.முருகன் தலைமையில் நடைபெற்றது. அலுவலகத்தை அனைத்திந்திய முற்போக்குப் பேரவை மாநிலத் துணைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சுந்தரம் திறந்து வைத்தார். கலை இலக்கியப் பெருமன்ற மாவட்டத் துணைத் தலைவர் என்.பகவதி, என்எப்ஐடபிள்யூ மாவட்டச் செயலாளர் ஆர்.செல்வராணி, செம்பை கிளை என்எப்ஐடபிள்யூ செயலாளர் ஐ.தங்கம், செல்வி, ஷோபனா, வே.அருள்குமார், எஸ்.அனில்குமார், எஸ்.குருசாமி எல்.சுப்பிரமணியம் டி.ஆர்.செல்வராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## வத்திராயிருப்பு அரசு மருத்துவமனையைத் தரம் உயர்த்த ஆட்சியரிடம் மனு



விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பில் உள்ள அரசு மருத்துவமனையைத் தரம் உயர்த்தவும், வருச நாடு மூலம் மலைப்பாதை திட்டத்தை நிறைவேற்றவும், புறவழிச்சாலை திட்டத்தை விரைவுபடுத்தக் கோரி அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் சார்பில் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது. மக்களிடம் பெற்ற கையெழுத்து மனுக்களை விருதுநகர் மாவட்ட ஆட்சியர் ஜெயசீலன் அவர்களிடம், மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் லி.பகத்சிங், வத்திராயிருப்பு தினேஷ்குமார், விருதுநகர் மாரியப்பன், ஆர்.ஆர். நகர் வடிவேல் முருகன் உள்ளிட்டோர் வழங்கினார்கள். அப்பொழுது சிபிஐ மாநிலக் குழு உறுப்பினர் பாலமுருகன், மாவட்டப் பொருளாளர் பழனிக்குமார் உடனிருந்தனர்.

## தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் புதிய கிளை துவக்க விழா



தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் செங்கல்பட்டு மாவட்டம், சிங்கப்பெருமாள் கோவில் ஊராட்சியில், புதிய கிளை துவக்க விழா கௌரி தலைமையில் நடைபெற்றது. இதில் கட்சியின் மாவட்டச் செயலாளர் ஏ.ராஜ்குமார், வாழ்வுரிமை இயக்க மாவட்டச் செயலாளர் பி.எஸ்.எல்லப்பன், கட்சியின் மாவட்டக் குழு உறுப்பினர் கே.வி.சேகுவேராதாஸ் ஆகியோர் பங்கேற்றனர். கிளைத் தலைவராக எஸ்.வேலு, செயலாளராக என்.கௌரி, பொருளாளராக எஸ்.விஜயன், துணைத் தலைவராக கே.சசிகுமார், துணைச் செயலாளராக வி.சத்யா ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## சிந்து வெளி அகழ்வாய்வின் நூற்றாண்டு விழா

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற சென்னை மாவட்டக் குழுவும், ஒய்எம்சிஏ பட்டிமன்றமும் இணைந்து நடத்திய, சிந்து வெளி அகழ்வாய்வின் நூற்றாண்டுச் சிறப்பு விழா 18.3.2025 அன்று சென்னை ஒய்எம்சிஏ அரங்கத்தில் எழுத்தாளர் சுந்தரசோழன் தலைமையில் நடைபெற்றது.

பட்டிமன்ற இணைச் செயலாளர் புலவர் பு.சீ.கிருஷ்ணமூர்த்தி வரவேற்புரை ஆற்ற, தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற மாநிலத் துணைச் செயலாளர் கணபதி இளங்கோ அறிமுக உரை நிகழ்த்தினார். சென்னைப் பல்கலைக்கழக சைவ சித்தாந்தத் துறைத் தலைவர் நல்லூர் சா.சரவணன் சிறப்புரை நிகழ்த்தினார். இதில் வ.நவநீதகிருஷ்ணன், முனைவர் மா.லெமூரியா, லி.செல்வமீனா, முனைவர் மைக்கேல் பாரடே, திருக்குறள் சொ.பத்மநாபன் ஆகியோர் பங்கேற்றனர். மோகனசுந்தரம் நன்றி கூறினார்.

## பாரதிராஜா மகன் மனோஜ்பாரதி மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

இயக்குநர் பாரதிராஜா மகன் மனோஜ் பாரதி மறைவுக்கு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் இரங்கல் தெரிவித்துள்ளார்

இயக்குநர் பாரதிராஜா மகன் மனோஜ் பாரதி (48) 25.03.2025 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தி கேட்டு அதிர்ச்சியுற்றோம்.

கடந்த 1999 ஆம் ஆண்டு தாஜ்மகால் திரைப்படத்தின் மூலம் வெள்ளித்திரையில் அறிமுகமான மனோஜ் பாரதி தொடர்ந்து சமுத்திரம், கடல் பூக்கள், ஈரநிலம், அன்னக்கொடி, ஈஸ்வரன், மாநாடு, விருமன் ஆகிய படங்களில் நடித்துள்ளார்.

இயக்குநர் பணியிலும் முன்னேறி வந்த மனோஜ், திடீரென காலமான செய்தியை எளிதில் ஏற்றுக் கொள்ள இயலவில்லை. முதுமைக் காலத்தில் கலங்கி நிற்கும் பாரதிராஜாவிற்கு ஆற்றுப்படுத்திக் கொள்ள முடியாத துயரமாகும்.

அன்னாரின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறது என்று கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

### நடிகர் மனோஜ் அவர்களின் உடலுக்கு சி.பி.ஐ சார்பில் மலர்மாலை வைத்து நேரில் அஞ்சலி



இயக்குநர் பாரதிராஜாவின் மகனும் நடிகருமான மனோஜ் மாரடைப்பு காரணமாக நேற்று உயிரிழந்தார். அவரது உடலுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார். கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர்கள் பா.கருணாநிதி, டாக்டர் ஏ.ஆர். சாந்தி, மத்திய சென்னை தோழர்கள் இரா.விஜயக்குமார், என்.கோபிநாதன் ஆகியோர் உடனிருந்தனர். இயக்குநர் பாரதிராஜா அவர்களையும் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினர்.

# தமிழ்நாடு முழுவதும் ஏஜஓய்எப்-ஏஜஎஸ்எப் இரத்த தானம் 9 ஆம் பக்க தொடர்ச்சி

அசோக் பாஸ்கர் தொடங்கிவைத்தார். 30 தோழர்கள் இரத்ததானம் செய்தனர்.

**செங்கல்பட்டு** திருப்போரூர் மானாம்பதி தொடக்கப் பள்ளியில் மாநிலத் துணைத் தலைவர் மோ.வெங்கடேசன், மாணவர் பெருமன்றத்தின் மாவட்டச் செயலாளர் ஜெ.அஜித் தலைமையில், ஒன்றியப் பெருந்தலைவர் எஸ்.ஆர்.எல் இளையவர்மன் தொடங்கி வைத்தார். 63 தோழர்கள் இரத்ததானம் செய்தனர்.

**தாம்பரம்** அரசு மருத்துவமனையில், இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் எம்.அசோக் குமார் தலைமையில் 10 தோழர்கள் இரத்ததானம் செய்தனர்.

**விழுப்புரம்** அரசு மருத்துவமனையில் இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் சந்துரு, மாணவர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் ஆகாஷ் தலைமையில், சட்டமன்ற உறுப்பினர் இரா.லட்சுமணன் தொடங்கி வைத்தார். 21 தோழர்கள் இரத்ததானம் செய்தனர்.

**நாகப்பட்டினம்** ஒரத்தூர் அரசு மருத்துவமனையில், மாவட்டச் செயலாளர் சந்திரமோகன் தலைமையில், நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ் தொடங்கி வைத்தார்.

**வேதாரண்யம்** அரசு மருத்துவமனையில், மாவட்ட தலைவர் மாரி.கார்த்திகேஷன் தலைமையில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கோ.பழனிச்சாமி தொடங்கி வைத்தார். இரு மையங்களிலும் 58 தோழர்கள் இரத்ததானம் செய்தனர்.

**திருவாரூர்** மாவட்டத்தில் இளைஞர் பெருமன்ற மாநிலத் துணைச் செயலாளர் ஜி.சரவணன், மாவட்டத் தலைவர் பாலமுருகன், மாணவர் பெருமன்றத்தின் மாவட்டச் செயலாளர் ஜே.பி.வீரபாண்டியன், மாவட்ட தலைவர் ஜே.பாரதசெல்வன், மாவட்டப் பொருளாளர் கோபி ஆகியோர் தலைமையில், நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ் தொடங்கி வைத்தார். அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் மாநிலச் செயலாளர் பா.தினேஷ் கலந்துகொண்டு உரையாற்றினார். திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில், சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து தொடங்கி வைத்தார். திருவாரூர் மாவட்டத்தில் 515 தோழர்கள் இரத்த தானம் செய்தனர். மன்னார்குடி அரசு மருத்துவமனையில், நகர் மன்றத் தலைவர் த.சோழராஜன் தொடங்கி வைத்தார்.

**தஞ்சாவூர்** கல்லுகுளம் மாநகராட்சி ஆரம்ப சுகாதார நிலையத்தில், இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் ச.சுதந்திர பாரதி, மாணவர் பெருமன்ற மாவட்டத் தலைவர் செல்வி தலைமையில் மாநகர மேயர் எஸ்.ராமநாதன் தொடங்கி வைத்தார். 15 தோழர்கள் இரத்ததானம் செய்தனர்.

**பட்டுக்கோட்டை** அரசு மருத்துவமனையில், மாநிலப் பொருளாளர் க.காரல் மார்க்ஸ் தலைமையில் டாக்டர்.செல்லப்பா தொடங்கி வைத்தார். 20 தோழர்கள் இரத்ததானம் செய்தனர்.

**புதுக்கோட்டை** அறந்தாங்கி அரசு மருத்துவமனையில், இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் மு.மாரிமுத்து, மாணவர் பெருமன்ற மாவட்ட தலைவர் கார்த்தி தலைமையில் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.டி.இராமச்சந்திரன் தொடங்கி வைத்தார். 26 தோழர்கள் இரத்ததானம் செய்தனர்.

**திண்டுக்கல்** அரசு மருத்துவமனையில், இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் இரா.வினோத்குமார், மாணவர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் விஸ்வா தலைமையில், திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் செ.சரவணன், நாடாளுமன்ற உறுப்பினர்













ஆர்.சச்சிதானந்தம், அரசு தலைமை மருத்துவர் ஆர்.சுகந்திராஜகுமாரி, மேயர் இளமதி ஜோதி பிரகாஷ், அரசு தலைமை மருத்துவமனை, பழனி சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி.செந்தில்குமார், மருத்துவர் உதயகுமார் ஆகியோர் தொடங்கி வைத்தார்கள். 33 தோழர்கள் இரத்ததானம் செய்தனர். மாநிலத் தலைவர் இரா.தமிழ் பெருமாள் கலந்து கொண்டார்.

**பழனி** மாவட்டத் தலைவர் எம்.பத்மநாபன் தலைமையில், 16 தோழர்கள் இரத்ததானம் செய்தனர்.

**தூத்துக்குடி மாவட்டம்** கோவில்பட்டி அரசு மருத்துவமருத்துவமனையில், மாநிலத் துணைத் தலைவர் அ.ரஞ்சனி கண்ணம்மா, மாவட்டச் செயலாளர் சுரேஷ் தலைமையில், நகரமன்ற தலைவர் கருணாநிதி தொடங்கிவைத்தார். 10 தோழர்கள் இரத்த தானம் செய்தனர்.

**மதுரை புறநகர்** மாவட்ட அரசு மருத்துவ மருத்துவமனையில் இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் கே.கிரிஷ்பாக்கியம், மாவட்ட தலைவர் சேது பாண்டி, மாணவர் பெருமன்ற மாநில துணைச் தலைவர் விக்ரம் தலைமையில், சிபிஐ கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் பா.காளிதாஸ் தொடங்கி வைத்தார். 43 தோழர்கள் இரத்ததானம் செய்தனர்.

**தேனி** கம்பம் சிக்னலில் மாவட்டச் செயலாளர் க.மணிகண்டன், மாணவர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் ஆனந்த் தலைமையில், என்.இராமக்கிருஷ்ணன் எம்எல்ஏ, நகர்மன்ற தலைவர் வனிதா நெப்போலியன் தொடங்கி வைத்தார்கள். 62 தோழர்கள் இரத்ததானம் செய்தனர்.

**சிவகங்கை** மாவட்ட கட்சி அலுவலகத்தில் இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் ராகவன் தலைமையில் எஸ்.குணசேகரன் எக்ஸ் எம்எல்ஏ தொடங்கி வைத்தார். 14 தோழர்கள் இரத்த தானம் செய்தனர்.

**விருதுநகர்** மாவட்டம் ராஜபாளையம் அரசு மருத்துவமனையில் மாவட்டச் செயலாளர் லி.பகத்சிங், மாணவர் பெருமன்ற மாநிலக் குழு உறுப்பினர் திருவேங்கடம் தலைமையில் மருத்துவர் அறம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டி.இராமசாமி, பொ. லிங்கம் தொடங்கி வைத்தார்கள். திருச்சுழி மருத்துவமனையிலும் 61 தோழர்கள் இரத்ததானம் செய்தனர்.

**நெல்லை** அரசு மருத்துவமனையில் இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் சுரேஷ், மாணவர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் நவராஜ் மோசஸ் தலைமையில், சிபிஐ மாவட்டச் செயலாளர் சடையப்பன் தொடங்கி வைத்தார். 15 தோழர்கள் இரத்ததானம் செய்தனர்.

**தென்காசி** அரசு மருத்துவமனையில், இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் வேல்முருகன், மாணவர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் கனகராஜ் தலைமையில், தென்காசி நகர் மன்ற தலைவர் ஆர்.சாதீர் தொடங்கி வைத்தார். 23 தோழர்கள் இரத்ததானம் செய்தனர்.

**தர்மபுரி** மாவட்ட அரசு மருத்துவமனையில், மாவட்டச் செயலாளர் நவீன் குமார், மாணவர் பெருமன்றத்தின் மாநிலக் குழு உறுப்பினர் அழகு பிரகாஷ் தலைமையில், முன்னாள் அமைச்சர் பி.பழனியப்பன், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி தொடங்கி வைத்தார். 51 தோழர்கள் இரத்ததானம் செய்தனர். மார்ச் 24 நாளன்றும் ரத்ததான முகாம் நடைபெற்றது.

**திருச்சி புறநகர்** தில்லைநகர் பகுதியில் அமைந்துள்ள உயிர்த்துளி ரத்த வங்கியில், இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர்தமிழரசன், மாணவர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் பிரவீன் தலைமையில், திருச்சி மாவட்ட சிறு, குறு தொழில்கள் சங்கத்தின் தலைவர் பே.இராஜப்பா ரத்துதான முகாமைத் தொடங்கி வைத்தார். 53 தோழர்கள் இரத்ததானம் செய்தனர்.

**மயிலாடுதுறை** அரசு மருத்துவமனையில் இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் ஜான்சன் தலைமையில், கட்சியின் மாவட்டச் செயலாளர் ஆர்.சீனிவாசன் தொடங்கி வைத்தார்.





# ஐந்து மண்டலங்களில் தொழிலாளர் மாநாடுகள் 16 ஆம் பக்க தொடர்ச்சி












திறந்தவெளி மண்டல மாநாடு வண்ணார்பேட்டை அரசு போக்குவரத்துக் கழக தலைமை அலுவலகம் முன்பு, 15.03.2025 அன்று தொமுச ஆ.தர்மன் அவர்கள் தலைமையில், ஆர்.சடையப்பன் ஏஐடியுசி, சிஐடியு ஆர்.முருகன், பி.சுப்ரமணியன் எச்எம்எஸ், கே.கணேசன் ஏஐசிசிடியு ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. ஆர்.ரெங்கன் ஏஐடியுசி, தொமுச எம்.தனசேகர், சிஐடியு ஆர்.ரசல், டி.என். உமாபதிசிவன் ஐஎன்டியுசி, மா.சுப்ரமணியபிள்ளை எச்எம்எஸ், எச்.எம்.அந்தோணிமுத்து ஏஐசிசிடியு ஆகியோர் சிறப்புரையாற்றினர். நெல்லை, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி அனைத்து சங்க நிர்வாகிகள், தொழிலாளர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

### வேலை நிறுத்தத்தை வெற்றி பெறச் செய்ய..

மே 20 இல் நடைபெறும் பொது வேலை நிறுத்தத்தை வெற்றி பெறச் செய்வது என்றும், அதற்கான ஆயத்த வேலைகளை இப்போதிருந்தே மேற்கொள்வது என்றும் இரண்டு மாத காலம் ஆலை வாயில்கள், தொழிலாளர் குடியிருப்புகள், தெருமுனைகளில் பரப்புரையும் பொதுக் கூட்டங்களும் நடத்த இந்த மண்டல மாநாடுகளில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## சென்னை மண்டல மாநாடு

சென்னை தருமபிரகாஷ் திருமண மண்டபத்தில் 17.03.2025 அன்று தொமுச கி.நடராஜன் தலைமையில் நடைபெற்றது. எச்எம்எஸ் க.அ.ராஜா ஸ்ரீதர், ஏஐடியுசி ம.இராதாகிருஷ்ணன், சிஐடியு வி.குமார், ஐஎன்டியுசி டி.வி.சேவியர், ஏஐயுடியுசி வி.சிவகுமார், ஏஐசிசிடியு சொ. இரணியப்பன், டியுசிசி எஸ்.மாயாண்டி, உழைக்கும் மக்கள் மாமன்றம் ஆர்.சம்பத், எம்எல்எஃப் இரா. அந்திரிதாஸ், எல்டியுசி ஏ.எஸ்.குமார், எல்எல்எஃப் க.பேரறிவாளன் ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள். ஏஐடியுசி மு.சம்பத் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். ஏஐடியுசி பீட்டர், கே.நடராஜன், இரா.துரைசாமி, வடசென்னை அருள், தென்சென்னை அழகேசன், செங்கல்பட்டு ஜகாங்கீர், காஞ்சி மூர்த்தி, திருவண்ணாமலை மாதேஸ்வரன், திருப்பத்தூர் தேவதாஸ், வேலூர் சங்கர் மேஸ்திரி மற்றும் 11 மாவட்டங்களில் இருந்து ஏஐடியுசி தோழர்கள் மற்றும் அனைத்துச் சங்க தோழர்கள் தலைவர்கள் பெருமளவில் பங்கேற்றனர்.

## மதுரை மண்டல மாநாடு

மதுரை நகர் வடக்கு மாசி வீதி தர்மபுரம் ஆதீன திருமண மஹாலில் 18.03.2025 அன்று நடைபெற்றது அனைத்து மத்திய தொழிற்சங்கங்களின் தலைவர்கள் பங்கெடுத்துச் சிறப்புரையாற்றினார்கள். ஏஐடியுசி சி.சந்திரகுமார், தொமுச அல்போன்ஸ், சிஐடியு எஸ்.கண்ணன், எச்எம்எஸ் மா.சுப்ரமணியபிள்ளை, ஐஎன்டியுசி பி.ஜீவன்மூர்த்தி, எஸ்.மஹபூப்ஜான் எம்எல்எஃப் ஆகியோர் சிறப்புரையாற்றினர். மதுரை விருதுநகர் திண்டுக்கல் தேனி ராமநாதபுரம் சிவகங்கை மாவட்டங்களின் மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர். மதுரை நந்தா சிங் தாமஸ் திண்டுக்கல் நாச்சிமுத்து துரை சந்திரமோகன், பாலன், பாஸ்கர் சிவகங்கை மீனாள் சேதுராமன், பி.எல். ராமச்சந்திரன் வி.மணவழகன் ஏ.ஜி.ராஜா சகாயம் ஆறுமுகம் ராமநாதபுரம் என்.கே. ராஜன் கிருஷ்ணமூர்த்தி விருதுநகர் எஸ்.பாண்டியன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## திருச்சி மண்டல மாநாடு

சீனிவாசாமஹாலில் 20.03.2025 அன்று தொமுச எஸ்.ஜோசப் நெல்சன் தலைமையில் நடைபெற்றது. சிஐடியு எஸ்.ரெங்கராஜன், ஏஐடியுசி வே.நடராஜா, ஐஎன்டியுசி கே.வெங்கட் நாராயணன், எச்எம்எஸ் எஃப்.எக்ஸ்.ஜான்சன், ஏஐசிசிடியு ஏ.ராஜேந்திரன், எல்எல்எஃப் எஸ்.தெய்வீகன் முன்னிலையில் நடைபெற்றது. ஏஐடியுசி ம.இராதாகிருஷ்ணன், தொமுச கோ.சி.வள்ளுவன், எச்எம்எஸ் மு.சுப்ரமணியன், சிஐடியு எஸ்.கண்ணன், ஏஐசிசிடியு ஆர்.மதியழகன், எல்எல்எஃப் க.பேரறிவாளன் ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள். ஏஐடியுசி சி.சந்திரகுமார், ஆர்.தில்லைவனம், க.சுரேஷ் புதுக்கோட்டை ஜீவானந்தம் உள்ளிட்ட திருச்சி, தஞ்சாவூர், அரியலூர், பெரம்பலூர், கரூர், புதுக்கோட்டை, திருவாரூர், நாகப்பட்டிணம், மயிலாடுதுறை மாவட்டங்களின் அனைத்துச் சங்க நிர்வாகிகளும் தோழர்களும் பங்கேற்றனர்.

# அஞ்செட்டி வட்டாட்சியர் அலுவலகம் முன்பு மாபெரும் காத்திருப்புப் போராட்டம்





தளி சட்டமன்றத் தொகுதி அஞ்செட்டி வட்டத்தில் உள்ள தொட்டமஞ்சி, நாட்றாம்பாளையம், அஞ்செட்டி, தக்கட்டி, உரிகம், கோட்டையூர், மாடக்கல், மஞ்சுகொண்டப்பள்ளி ஆகிய 8 ஊராட்சிகளில் உள்ள ஏழை, எளிய மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா, வீடு இல்லாதவர்களுக்கு 3 செண்ட் நிலம், வன உரிமைச் சட்டம் 2006 ஐ நடைமுறைப்படுத்திச் சாகுபடி நிலங்களுக்குப் பட்டா வழங்க வேண்டும் எனப் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, 24.03.25 அன்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தலைமையில், தளி சட்டமன்ற உறுப்பினர் டி.இராமச்சந்திரன் முன்னிலையில், அஞ்செட்டி வட்டாட்சியர் அலுவலகம் முன்பு மாபெரும் காத்திருப்புப் போராட்டம் நடைபெற்றது.

இப்போராட்டத்தில், மாநில நிர்வாகக் குழு உறுப்பினர்கள் எம்.ரவி, எம்.இலகுமையா, மாநிலக் குழு உறுப்பினர்கள் பழனி, சின்னசாமி, பூதட்டியப்பா, சுந்தரவள்ளி ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஜனசக்தி

JANASAKTHI Tamil Weekly Cell: 9444331138
Day of Publication: Every Thursday

Regd. No. TN / CH (C) / 551 / 2024-2026
WPP NO: TN / PMG (CCR) /WPP/596/ 2024-2026

Posted on Every Friday & Saturday
Registered with Press Registrar General of India, Under Regd No: 1222/57

## நான்கு தொழிலாளர் குறியீடுகளைத் திரும்பப் பெறுக! இந்தியத் தொழிலாளர் மாநாட்டை (ஐஎல்சி) நடத்துக! பொதுத்துறை, பொது சேவைகளை தனியார்மயமாக்குவதை நிறுத்துக!

# 2025 மே 20 பொது வேலைநிறுத்தம்






18 மார்ச் 2025 அன்று மத்திய தொழிற்சங்கங்கள் மற்றும் துறைசார் சங்கங்களின் சார்பில் தொழிலாளர்களின் தேசிய மாநாடு நடைபெற்றது. 20 மே 2025 அன்று நாடு தழுவிய பொது வேலைநிறுத்தம் நடத்தவும் இரண்டு மாத விரிவான பரப்புரை மேற்கொள்ளவும் அறைகூவல் விடுத்தது.

வங்கிகள், காப்பீடு, நிலக்கரி, எஃகு, துறைமுகம் மற்றும் கப்பல்துறை, மின்சாரம், தொலைத்தொடர்பு, அஞ்சல், ரயில்வே, பாதுகாப்பு, சாலைகள், கல்வி, சுகாதாரம், நீர், குடிமைச் சேவைகள் போன்ற அரசுத் துறைகளைச் சேர்ந்த பொதுத்துறை மற்றும் அரசுத் துறை தொழிற்சங்கங்களின் தலைவர்கள், ஆர்வலர்கள் மற்றும் அவுட்சோர்சிங் தொழிலாளர்கள், சுயதொழில் செய்பவர்கள், வீட்டுப் பணியாளர்கள், கிக் மற்றும் செயலி அடிப்படையிலான தொழிலாளர்கள், திட்டப் பணியாளர்கள் அங்கன்வாடி, ஆஷா மதிய உணவுத் திட்டங்கள், பீடி கட்டுமானத் துறை, சுமை ஏற்றி இறக்குபவர்கள் போன்றவர்கள் இம்மாநாட்டில் பங்கேற்றனர்.

இந்தியா முழுவதிலும் அனைத்து மாநிலங்களிலும் உள்ள அனைத்து மத்திய தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளும் துறை சார்ந்த தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளும், பிஜேபி அரசாங்கத்தின் தொழிலாளர் விரோத, விவசாயிகள் விரோத மற்றும் மக்கள் விரோதக் கொள்கைகளுக்கு எதிராக ஒற்றுமையை நிரூபிப்பதற்காகப் பங்கேற்ற இம்மாநாடு புது தில்லியின் பியாரே லால் பவனில் நடைபெற்றது.

ஒருபுறம் தொழிற்சங்கங்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு பத்தாண்டுகளுக்கும் மேலாக காது கொடுக்காத மத்திய அரசுக்கு எதிராக ஐஎன்டியுசியில் இருந்து அசோக் சிங், ஏஐடியுசியில் இருந்து அமர்ஜித் கவுர், எச்எம்எஸ்ஸில் இருந்து ஹர்பஜன் சிங், சிஐடியுவில் இருந்து தபன் சென், ஏஐயூடியூசியில் இருந்து ஹரிஷ் தியாகி, டியுசிசியில் இருந்து கே.இந்து பிரகாஷ் மேனன், சேவாவைச் சேர்ந்த லதா பென், ஏஐசிசிடியுவில் இருந்து ராஜீவ் டிம்ரி, எல்பிஎப் இல் இருந்து ஜவஹர் பிரசாத், யூடியூசியிலிருந்து அசோக் பிரசாத் ஆகியோர் உரையாற்றினர்.

அரசாங்கத்தின் மக்கள் விரோதக் கொள்கைகளுக்கு "போதும் போதும்" என்ற உறுதியான குரலை மாநாடு ஒலித்தது. 20 மே 2025 அன்று ஒரு நாள் தேசிய வேலைநிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்தது.

முதலாளிகளுக்கு ஆதரவான வெட்கக்கேடான கார்ப்பரேட் சார்பு கொள்கைகள், உழைக்கும் மக்களுக்கும் நாட்டின் ஒட்டுமொத்தப் பொருளாதார நலனுக்கும் கேடு விளைவிக்கும் ஏகபோக மற்றும் புல்லுருவி முதலாளித்துவத்தை உருவாக்குதல் ஆகியவற்றின் மீது மாநாடு கடுமையான தாக்குதலைத் தொடுத்தது. இந்தியாவின் உழைக்கும் மக்கள், உண்மையான செல்வத்தை உருவாக்குபவர்கள். அதன் பலனை முழுமையாக முதலாளிகள் அனுபவிக்க அனுமதிக்க முடியாது என்று பிரகடனம் செய்தது.

தொழிற்சங்கங்களை ஒன்றிணைந்த சக்தியாகக் கொண்டு, இந்த அரசாங்கத்தின் சவாலை ஏற்றுக்கொள்ள உழைக்கும் மக்கள் தயாராக வேண்டும். எதிர்காலத்தில் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் நாடு தழுவிய தீர்க்கமான போராட்டங்களை நோக்கிய தொடக்கமாக மே 20, வேலை நிறுத்தம் இருக்கும். சுரண்டல், ஆழமான வருமான சமத்துவமின்மை, அரசியலமைப்பு உரிமைகள் மறுப்பு மற்றும் இந்திய மக்களுக்கு இழைக்கப்பட்ட ஒட்டுமொத்த அநீதி ஆகியவற்றை எதிர்ப்பதற்கான ஊக்கமளிக்கும் ஆற்றலுடன் மாநாடு முடிந்தது.

வேலையின்மை, வறுமை மற்றும் சமத்துவமின்மையை உருவாக்கி, விரிவுபடுத்துகிற கார்ப்பரேட் சார்பு மற்றும் தொழிலாளர் விரோதக் கொள்கைகளுக்காக, உழைக்கும் மக்கள் மீது துன்பங்களை ஏற்படுத்தியதற்காக பிஜேபி அரசாங்கத்தை குற்றம்சாட்டும் பிரகடனத்தை மாநாடு ஒருமனதாக வெளியிட்டது.

தொழிலாளர்களின் தேசிய மாநாட்டின் பிரகடனம், தொழிலாளர் குறியீடுகளைத் திரும்பப் பெற வேண்டும் என்ற சமரசமற்ற கோரிக்கையை மீண்டும் வலியுறுத்துகிறது. மேலும் புதிய தாராளமயத்தின் பேரழிவு கொள்கைகளுக்கு மாற்றாக அதன் 17 அம்சக் கோரிக்கைகளின் சாசனத்தை மீண்டும் உறுதிப்படுத்துகிறது,

மதம், பிராந்தியம், சாதி, கலாச்சாரம், மொழி போன்றவற்றின் அடிப்படையில் தொழிலாளர்களைப் பிளவுபடுத்தும் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசின் அனைத்து அசிங்கமான முயற்சிகளையும் முறியடிக்கும் வகையில், இந்த மாநாடு தணியாத ஒற்றுமைக்குக் குரல் கொடுத்தது. இந்திய உழைக்கும் மக்களின் போர் முழக்கம் 2025 மே 20 அன்று முழு மூச்சாக வெளிப்படுத்தப்படும்.

மாநாட்டிற்கு ஐஎன்டியுசி ஓ.எஸ் தோமர், ஏஐடியுசி மோகன் ஷர்மா, எச்எம்எஸ். ஜே.ஆர்.போஸ்லே, சிஐடியு, கே.ஹேமலதா, ஏஐயுடியுசி. விஜய் பால் சிங், டியுசிசி ஜி. ஷிவ்சங்கர், சேவா ஆஷா பென், ஏஐசிசிடியு. சந்தோஷ் ராய், எல் பிஎஃப். ஆர்.கே.மவுர்யா, சத்ருஜித் சிங் யுடியுசி ஆகியோர் தலைமையேற்றனர்.

## பொது வேலைநிறுத்தத்துக்கு தமிழ்நாடு தயாராகிறது

# ஐந்து மண்டலங்களில் தொழிலாளர் மாநாடுகள்

**கார்ப்பரேட்களுக்குச் சாதகமாக, தொழிலாளர் உரிமைகளைப் பறிக்கும் நான்கு தொழிலாளர் சட்டத் தொகுப்புகளைச் செயல்படுத்த முனைகிற பிஜேபி அரசைக் கண்டித்து, மே 20 இல் நடைபெறும் வேலைநிறுத்தத்தை விளக்கி தமிழ்நாட்டில் ஐந்து மண்டல மாநாடுகள் நடைபெற்றன.**

### சேலம் மண்டல மாநாடு

14.03.2025 அன்று சேலத்தில் இரா.பொன்னி பழனியப்பன் (எல்பிஎப்) அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களைச் சேர்ந்த அனைத்துத் தொழிற் சங்கங்களின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் திரளாகப் பங்கேற்றனர். எல்பிஎப் கி.நடராஜன், ஏஐடியுசி






எஸ்.சின்னசாமி சிஐடியு ஜி.சுகுமாறன், ஐஎன்டியுசி எம்.பன்னீர்செல்வம், எச்எம்எஸ் டி.எஸ்.ராஜாமணி, ஏஐசிசிடியு டி.சங்கரபாண்டியன், ஏஐயுடியுசி வி.சிவக்குமார், எம்எல்எப் இரா.அந்திரிதாஸ் ஆகியோர் உரையாற்றினர். ஏஐடியுசி சார்பில் சேலம் எம்.முனுசாமி, என்.முருகராஜ், பி.பரமசிவம், சேலம் எஸ்.சம்பத், நாமக்கல் பி.தனசேகரன், தருமபுரி கே.மணி, கிருஷ்ணகிரி எம்.கே.மாதையன் உள்ளிட்ட மேற்படி நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த ஏஐடியுசி சங்கங்களின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

### நெல்லை மண்டல மாநாடு

தொழிலாளர் விரோத நான்கு சட்டத்தொகுப்புகளைக் குறுக்குவழியில் அமலாக்கத் துடிக்கும் ஒன்றிய மோடி அரசைக் கண்டித்து நெல்லையில் அனைத்துத் தொழிற்சங்கங்களின்

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliyer Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **T.M.Murthi,** Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.